# வளர்ச்சிப் பாதையில் காலூன்றி



## வருடாந்த அறிக்கை 2016

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும்
விமான சேவைகள் (இலங்கை) கம்பனி**

## தொலைநோக்கு

“ஆசிய பிராந்தியத்திலேயே செயற்திறனுடனும், சிறந்த நட்புணர்வுடனும் முதல்தர விமான சேவை மையமாக திகழ்தல்”

## செயற்பணி

“அக்கறையுடைய பங்குதாரர்களின் மனநிறைவினை உறுதிபடுத்துவது மட்டுமன்றி போட்டியடிப்படையிலான விமான சேவை வசதிகள் மற்றும் சிறந்த நடைமுறை வழக்கங்களையுடைய சேவைகளை வழங்குவதற்கு நாம் அயரா உழைப்புடன் செயல்படுகின்றோம்”.

நாம் வளர்ச்சி தொடர்பில் நிலையூன்றிய விரைவு வளர்ச்சியில் உள்ளோம். அவ்வாறே வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சரியான திசையில் மேல்நோக்கிவாறு உள்ளது. செயலுறு செலவு கட்டுப்பாடு இயக்கமுறை வெற்றிகரமாக செயற்படுத்தும் அதே வேளை எங்கள் அபிவிருத்தி மூலோபாயம் ஆணித்தரமாக செயல்பாட்டில் ஈடுபடுத்துதல், எமது செயற்படு இலாபத்தை அதிகரிப்பதைப்போன்று எமது எதிர்கால வளர்ச்சி மூலோபாயங்கள் முதலாக்கும் பொருட்டு கம்பனி செயலூக்குவதற்கு உதவியாக அமைந்தது. எமது பதிவுகளை முறியடித்த வருமானங்கள், இலாபம் மற்றும் வருடத்துக்குள் எய்தப்பெற்ற ஏனைய விசேட திரும்புகட்ட நிகழ்வுகளினூடாக ஆற்றல், உள்ளுரம் மற்றும் புது எழுச்சியினை மெய்பித்துக்காட்டுகின்றது. வேகமூட்டுகின்ற மாற்றங்கள் உள்ள இயக்காற்றலுடைய சூழல் நடுவில் எய்திய இந்த வளர்ச்சி, எமது கம்பனியின் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை அடைவதற்காக மூலோபாய ரீதியில் சமநிலைப்படுத்தப்பட்டுள்ள முறையைக் காட்டுகின்றது.

**வளர்ச்சிப்பாதையை பின்தொடர்ந்து.......**

# பொருளடக்கம்


நிதிசார் தனிச்சிறப்புகள் ........ 01
செயலாக்க தனிச்சிறப்புகள் ........ 02
ஸ்ரீலங்கன் விமானசேவை வரலாறு ........ 03
தவிசாளரின் மீளாய்வு ........ 05
பணிப்பாளர் சபை ........ 09
சிரேஷ்ட முகாமைத்துவம் ........ 11
கம்பனியின் நடவடிக்கைககள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை ... 13
முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் ........ 21
நிதி மீளாய்வு ........ 45
மனித வளங்கள் முகாமைத்துவம் ........ 55
கூட்டிணைப்பு ஆளுமை ........ 61
இடர் முகாமைத்துவம் ........ 67
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ........ 87
விரிவான வருமானக்கூற்று ........ 95
நிதி நிலைக்கூற்று ........ 96
பங்குகள் மாற்றங்கள் கூற்று ........ 97
காசுப்பாய்ச்சல் கூற்று ........ 98
நிதி கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் ........ 99
கணக்காய்வாளர் தலமையதிபதி அறிக்கைக்கு தெளிவுபடுத்தும் குறிப்புகள் ........ 128
கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் ........ 134

# நிதி சார்ந்த
# தனிச்சிறப்புகள்

| | 2016<br>ரூ. மி | 2015*<br>ரூ. மி | 2016<br>/2015<br>+/- % | 2014*<br>ரூ. மி | 2015<br>/2014<br>+/- % |
|---|---|---|---|---|---|
| புரள்வு | 18,343 | 15,698 | 17% | 13,887 | 13% |
| பெறுமானத்தேய்வுக்கு முன் தொழிற்பாட்டுச் செலவு | 7,991 | 7,466 | -7% | 6,757 | -10% |
| **வட்டி, குத்தகை, பெறுமானத்தேய்வு மற்றும் கடன்தீர்ப்புக்கு முன் உழைப்பு** | **10,264** | **8,127** | 26% | **6,979** | 16% |
| நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | 2,665 | 2,658 | -0.2% | 2,664 | 0.2% |
| தேறிய நிதிச் செலவுகள் / (வருமானம்) | 779 | 3,196 | 76% | (1,030) | -410% |
| **வரிக்குமுன் இலாபம்** | **6,909** | **2,378** | 191% | **5,496** | -57% |
| வருமான வரி | (11) | 1,561 | 101% | 2,084 | 25% |
| **வரிக்குப் பின் இலாபம்** | **6,920** | **817** | 747% | **3,412** | -76% |
| சமப்பங்குள் பங்குரிமையாளர்களிடையே பரிந்தளித்தல் | 6,920 | 817 | 747% | 3,412 | -76% |
| பங்கிலாபங்கள் | 1,500 | 497 | 202% | 500 | -1% |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கு காசும் காசு சார்ந்தவையும் | 22,708 | 15,550 | 46% | 10,238 | 52% |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கு பங்குரிமையாளர் நிதியம் | 16,436 | 11,012 | 49% | 10,568 | 4% |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கு நடைமுறையல்லா சொத்துக்கள் மு.கொ.செ பெறுமதி | 43,471 | 44,079 | -1% | 45,578 | -3% |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கு நடைமுறைச் சொத்துக்களின் மொத்த பெறுமதி | 27,605 | 21,206 | 30% | 14,952 | 42% |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கு மொத்த நடைமுறைப்பொறுப்புகள் | 10,430 | 10,132 | 3% | 8,908 | 14% |
| வருடத்தின் மொத்த முதலீட்டுச் செலவு | 2,400 | 617 | 289% | 1,234 | -50% |

* நடப்பு வருட முன்வைத்தலுடன் ஒத்திசைவாக்கும் வகையில் கடந்த வருடத்தின் இலக்கங்கள் முன்வைக்கும்போது இலக்கங்கள் அவசியமானவிடத்து மீள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வித்தியாசங்களை முழுத் தானமாக்குவதற்கு அமைவானது

+ = சாதகமானது % மாறுபாடு

- = பாதகமானது % மாறுபாடு

# செயலாக்க
# தனிச்சிறப்புகள்

| | | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| **தொழிற்பாடு சார்ந்த முக்கிய அம்சங்கள்** | | | | | | |
| சர்வதேச வான் பயண நகர்வுகள் | எண் | 61,637 | 56,156 | 54,960 | 51,972 | 48,416 |
| பயணிகளின் நகர்வுகள்* | எண் | 9,466,248 | 8,505,740 | 7,780,724 | 7,330,421 | 7,079,920 |
| சரக்குகளின் அசைவுகள்** | மெ.தொண் | 248,347 | 218,402 | 209,607 | 194,020 | 186,618 |
| பறத்தல் அசைவுகள் | எண் | 35,118 | 32,694 | 31,600 | 27,529 | 23,835 |
| திசம்பர் 31 ஆந் திகதியிற்கான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | எண் | 3,810 | 3,871 | 3,932 | 3,674 | 3,445 |
| **விகிதாசாரப்படி முக்கிய அம்சங்கள்** | | | | | | |
| சமப்பங்குகள் மீதான ஈவு | % | 42 | 7 | 32 | 48 | 65 |
| வ/மு தேறிய இலாபம் மொத்த வருமானத்திற்கு | % | 38 | 15 | 40 | 39 | 35 |
| வ/மு தேறிய இலாபம் பங்குரிமை நிதியத்திற்கு | % | 42 | 22 | 52 | 64 | 92 |
| மொத்த வருமானம் மொத்தச் சொத்துக்களுக்கு | தடவைகள் | 0.26 | 0.24 | 0.23 | 0.22 | 0.22 |
| ஊழியர் ஒருவருக்கு மொத்தச் சொத்துக்கள் | ரூ.'000 | 18,655 | 16,865 | 15,394 | 15,316 | *14,415 |
| ஊழியர் ஒருவருக்காக மொத்த பதவியணியினர் செலவு - ஆண்டிற்கு | ரூ.'000 | 1,578 | 1,462 | 1,203 | 1,182 | 1,020 |
| கையாளப்பட்ட ஒரு விமானத்துக்கு மொத்தச் செலவு | ரூ.'000 | 216 | 256 | 184 | 188 | 164 |
| பயணியொருவருக்கு வருமானம் | ரூ. | 1,938 | 1,846 | 1,785 | 1,652 | 1,570 |
| பயணியொருவருக்கு வரிக்கு பின்னரான இலாபம் | ரூ. | 731 | 96 | 438 | 485 | 387 |
| பயணியொருவருக்கு விமானப் பயண அசைவுகள் | எண் | 16 | 15 | 14 | 14 | 14 |
| வானூர்தி ஒன்றிற்கான பயணிகள் | எண் | 154 | 151 | 142 | 141 | 146 |
| ஊழியர் ஒருவருக்குப் பயணிகள் | எண் | 2,485 | 2,197 | 1,979 | 1,995 | 2,055 |
| துணைக்கல விகிதாசாரம் | % | 48 | 67 | 71 | 82 | 89 |
| மொத்த சொத்துக்களின் மீதான மீள்வரவு | % | 10 | 1 | 6 | 6 | 6 |
| இலாப விகிதாசாரம் | % | 38 | 5 | 25 | 29 | 25 |
| முதலீட்டு உற்பத்தித்திறன் குறியீடு | தடவைகள் | 0.26 | 0.23 | 0.24 | 0.20 | 0.19 |
| பங்கொன்றிற்கான உழைப்பு | ரூ. | 34,598 | 4,084 | 17,058 | 17,768 | 13,688 |
| நடைமுறை விகிதாசாரம் | தடவைகள் | 2.65 | 2.09 | 1.68 | 1.29 | *1.78 |
| மொத்த செலவுக்கு மொத்த வருமானம் | தடவைகள் | 1.52 | *1.17 | *1.54 | *1.48 | 1.53 |

* நடப்பு வருட முன்வைத்தலுடன் ஒத்திசைவாக்கும் வகையில் அவசியமானவிடத்து கடந்த வருடத்தின் இலக்கங்கள் மீள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

** பயணிகள் நகர்வில் சர்வதேச வந்தடைதல், புறப்படுதல், இடமாற்றம், இடைப்போக்குப் பயணிகள் என்பன அடங்கும். உள்ளக விமானப் பயணிகள் உள்ளடங்கப்படமாட்டாது.

*** விமான சரக்கு நகர்வுகளில் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்ளக இடைமாற்ற விமான சரக்குகள் உள்ளடக்கப்படும். வான் கடிதங்கள் புறநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

# இலங்கையின் விமானசேவைகள் வரலாறு

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி (AASL - விவிசேக ரூ 1983ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டதுடன் சர்வதேவச சிவில் விமானசேவைகள் அமைப்பின் (ICAO) அங்கத்தவராக செலாற்றும் பொருட்டு அரசின் முகவராக நியமிக்கப்பட்டது. 1982 வானோடல் விசேட ஏற்பாட்டுச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டு முன்வைக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமானசேவைகள் சட்டத்தின் மூலம் இலங்கைக்குள்ளே சிவில் விமான நிலையங்கள் அனைத்திலும் நியதிச்சட்ட சேவை வழங்குநராக செயலாற்றுவதற்கு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியிங்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி இன்று நியதிச்சட்ட பொறுப்புகள் நடைமுறைப்படுத்தும் தமது விடயம் எல்லைக்கு எடுக்கப்படும் நான்கு விமானநிலையங்கள் அதாவது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி) கொழும்பு விமானநிலையம் (இரத்மலானை சுஆயு)மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் (ம.இ.ச.வி) மற்றும் மட்டக்களப்பு விமானநிலையத்தை அபிவிருத்தி செய்து நிர்வகிக்கும் சவால் இந்நிறுவனம் ஏற்றுள்ளது.

**1932** இலங்கை ஆளுநரால் ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா இடையே விமான கடிதச் சேவைகள் இலங்கையின் ஊடாக பரவலாக்கப்படுவதற்கு கலந்துரையாடப்படும்.

**1934** இலங்கை அரச சபை இரத்மலானை வானூர்திநிலையத்தை நிர்மாணிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

**1936** இரத்மலானை வானூர்திநிலையத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை விமானசேவை சமூகம் பொதுமக்களுக்கு விமானப்பயண வாய்ப்பு வழங்குகின்றது.

**1937** முதலாம் விமான வானோடல் சட்டதிட்டங்கள் முறைமை பிரகடனப்படுத்தப்படும். இலங்கை பதிவுக்குறி உள்ளடக்கப்பட்ட முதல் மூன்று விமானங்களின் பட்டியலுக்கு உள்ளடக்கப்படும்.

**1938** பெப்ருவரி 28 ஆந் திகதி இரத்மலானை விமானநிலையம் தொடங்கப்படும்.பொது வேலைகள் பணிப்பாளர் விமானசேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்படும்.

**1939** புத்தளத்தின் அவசர தரையிரக்கம் செயற்படுத்தப்படும்.

**1942** இரண்டாம் உலக யுத்தத்துடன் அரச விமானப்படை இரத்மலானை விமானநிலையத்தின் செய்கடமைகள் கட்டுப்பாடு தனது கீழ் எடுக்கப்படும்.

**1945** ஐக்கிய இராச்சியம் - அவுஸ்திரேலியா- லென்கஸ்டிரியன் சேவை இலங்கையினூடாக தொழிற்பாடுகள் ஆரம்பித்துள்ளது.

**1946** போக்குவரத்து அமைச்சின் கீழ் சிவில் விமானசேவைகள் திணைக்களம் நிறுவப்படும். சிவில் விமானசேவைகள் நடவடிக்கைக்காக இரத்மலானை விமானநிலைய அரச விமானப்படையால் பெற்றுக்கொள்கின்றது.

**1947** இலங்கை விமானசேவை -தேசிய வானூர்தி தாங்கி தொடர்பாடல் மற்றும் வேலைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டதுடன் கொழும்பு இலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக மதுராசி வரை சர்வதேச விமானப் பயணங்களைத் தொடங்குகின்றது.

**1948** சர்வதேச சிவில் விமானசேவைகள் அமைப்பின் (ICAO) அங்கத்தவராக இலங்கை நியமிக்கப்படும்

**1950** 1950 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க வானோடல் சட்டம் பிரகடனப்படுத்தப்படும். வானோடிகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சிக் கல்லூரி நிறுவுதல்

**1955** இலங்கை விமானசேவை KLM Royal Dutch விமான சேவையுடன் உடன்படிக்கையை மேற்கொள்ளல்.

**1959**
சர்வதேச விமான தொழிற்பாடுகள் கட்டுநாயக்கவிற்கு மாற்றம் செய்யப்பட்டது.

**1963**
கட்டுநாயக்க விமானநிலையத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். கனடா குடியரசின் உதவியின் அடிப்படையில் RAF முனதம ஓடுபாதை 1,840 மீட்டர் இலிருந்து 3,350 வரை பரவலாக்கப்படும். வருடத்திற்கு 150,000 விமானப்பயணிகளை ஏற்கக்கூடியவாறு முனைய கட்டிடத்தை நிர்மாணித்தல்.

**1968**
பாரிய முனைய கட்டிடமொன்று, விமானங்களை கையாளும் ஏற்றிடம் மற்றும் விமான ஓடுபாதைக்கு நடையோடுபாதைகள் நிர்மாணித்தல் இடம்பெறும்.

**1979**
தேசிய வானூர்திகள் தாங்கி - எயார் லங்கா ஆரம்பம். 1979 விமானநிலைய அதிகாரசபைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் விமானநிலைய அதிகாரசபை நிறுவப்பட்டது

**1980**
விமானநிலைய அதிகாரசபை சிவில் விமானசேவைகள் திணைக்களத்தினால் சிவில் விமானநிலைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் பொறுப்பேற்கின்றது.

**1981**
இலங்கையின் சிவில் விமான சேவை நடவடிக்கைகளை செற்படுத்துவதற்காக அரசுக்கு சொந்தமான கம்பனி நிறுவுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

**1982**
வானோடல் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

**1983**
சிவில் விமானநிலைய ஒட்டு மொத்த அபிவிருத்தி, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் சேவை பகிர்ந்தளிக்கும் மேற்பார்வை செய்வதற்காக விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி (விவிசேக) நிறுவப்படும்.

**1984**
புதிய ஓடுபாதை, பயணிகள் முனையக் கட்டிடம், விமான சரக்கு வளாகம், கட்டுப்பாட்டு கோபுரங்கள் மற்றும் வானோடல் சேவை மற்றும் பராமரிப்பு வளாகத்தை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்படும்.

**1987/88**
அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் புதிய ஓடுபாதை மற்றும் வருடாந்த கையாளும் கொள்ளளவு வான் பயணிகள் 3.5 மில்லியனுடன் புதிய முனையக் கட்டிடம் செயற்படுத்தப்படும்.

**1992**
வான் சரக்கு கிராமம் ஆரம்பித்தல்

**2005**
8 விமானப்பாலங்களுடன் விரல் அலைத்தாங்கி, பரவலாக்கப்பட்ட முனையங்கள், ஓய்வு அறைகள் மற்றும் ஏனைய வசதிகள் உருவாக்குவதுடன் நொவெம்பர் மாதத்தில் விமானநிலையத்திற்காக முழுமையான புதியதொரு தோற்றம் கிடைத்தல்

**2008**
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி 25 ஆவது விழா வெள்ளி விழா கொண்டாடப்படும்.

**2010**
2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கம் கொண்ட சிவில் விமானசேவைகள் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. நியதிச்சட்ட சேவை வழங்குநராக இலங்கைக்குள்ளே சிவில் விமானநிலையங்கள் தொழிற்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியிற்கு இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபை சான்றிதழ் மற்றும் உரிமம் வெளியிடப்படும்.

**2012**
1912 திசெம்பர் 07ஆந் திகதி கொழும்பு குதிரை பந்தயத்திடலில் முதலாவது விமானம் வெற்றிகரமாக தரையிறங்குவதில் தொடங்கிய சிவில் விமானசேவைகள் பிரிவு 100 வருட விமானசேவையை பூர்த்தி செய்துள்ளது.

**2013**
2013 அம்பாந்தோட்டை இலங்கை இரண்டாம் சர்வதேச விமானநிலையம் (ம.இ.ச.வி) மார்ச் 18 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது.

# தவிசாளரின்
# மீளாய்வு

**எமது தொலைநோக்கின் அடிப்படையில்**
**செயலாற்றுவதற்கு எமது அக்கறைவுடைய தரப்பினர்களைப்**
**போன்று ஒட்டுமொத்தமாக நாட்டுக்கு சிறந்த**
**பொருளாதார பலன்களை தோற்றுவிப்பதன்**
**பொருட்டு நாம் மிகவும் ஆற்றல் மிக்கதாக மற்றும்**
**ஆணித்தனமாக இருக்கின்றோம்.**



**செயலாற்றுகை பற்றிய கண்ணோட்டம் 2016**

விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தனது பங்குதாரர்கள் எதிர்பார்க்கும் மீள்வரவுகளை வழங்கி, அதன் வரவலாற்றில் பதிவுகளை முறியடித்து சாதனை படைத்த இன்னுமொரு வருடமாக 2016 வருடம் குறிப்பிடப்பட்டுள்ளது. விமான போக்குவரத்து புள்ளிவிபரங்கள் மற்றும் நிதி பெறுபேறுகளுக்கமைய கம்பனியின் வினைத்திறன் மற்றும் இலாபகரமானதன்மையை அதிகரித்து வருட ஆரம்பத்தில் தொகுக்கப்பட்ட மூலோபாய நோக்கங்கள் பல நாம் வெற்றி பெற்றுள்ளோம்.புதியதொரு சாதனை நிலைநாட்டி மீளாய்வு வருடத்தில் கடந்த வருடத்தில் 8.5 மில்லியன் இலிருந்து 9.5 மில்லியன் வரை 11% ஆல் மொத்த பயணிகள் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி) தடங்களை முறியடித்தும் மற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வசதிகள் வழங்குவதுடன் நுகர்வு மற்றும் பயணிகள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு 1.6 ஆன மிகை பயணிகள் கொள்ளவுடன் செயலாற்றியுள்ளது.

நமக்கு கடந்த வருடத்தின் வருமானம் பதிவு செய்யப்பட்ட ரூபா 15.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 17% வளர்ச்சியுடன் 2016 வருடத்தில் ரூபா 18.3 பில்லியன் ஆன சிறப்பான வருமானம் உழைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. 2015 வருடத்தில் பயணியொருவருக்கு வருமானமான ரூபா 1,846 இலிருந்து 1,938 வரை அதிகரித்தல் இதன் பெறுபேறாக அமைந்தது. வர்த்தக வருமானம் பாரியளவில் வளர்ச்சியடைந்தது மொத்த தொழிற்பாட்டில் தெளிவுத்தன்மை மற்றும் நல்லாட்சி கொள்கை பாதுகாக்கப்படும் வண்ணம் 3 வருடத்திலிருந்து 5 வருடம் வரை நீண்டகால ஒப்பந்த காலத்துக்கு விமானநிலைய இடவசதிகள் தீர்வைகளற்ற கடைகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டாளர்களுக்கு வழங்குவதன் மூலமாகும். மூலோபாய அபிவிருத்திகள் மற்றும் பயணிகள் முனைய கட்டிடத்திற்குள் கடைகள் நிறுவுதல் மீள் தயாரித்தல் பயணிகள் அனுபவங்கள் அபிவிருத்திச் செய்வதற்கு மற்றும் வர்த்தக பெறுபேறு அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது.

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் (ம.இச.வி) தொழிற்பாட்டு நட்டமான ரூபா 2.3 பில்லியன் உட்கிரகித்து மற்றும் முன்னைய வருடத்துக்கு இணைவாக தொழிற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தல் 5% ஆன குறைந்த மட்டத்தால் பேணப்பட்டு கம்பனியின் செயற்படு இலாபம் ரூபா 5.6 பில்லியன் இலிருந்து ரூபா 7.7 பில்லியன் வரை 38% ஆல் சிறப்பானதொரு அதிகரிப்பைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். மேலும் முன்னைய வருடத்திலும் அதிகமான 191% வளர்ச்சியுடனான உயர் வரிக்கு முந்திய இலாபமான ரூபா 6.9 பில்லியன் அறிக்கையிடுவதற்கு கம்பனியிற்கு முடியுமாக இருந்தது. இதற்காக முக்கிய பங்களிப்பு காரணியாக அமைந்தது குறுகியகால மற்றும் நீண்டகால முதலீட்டின் அடிப்படையில் ரூபா 1.0 பில்லியன் இலிருந்து ரூபா 1.8 பில்லியன் வரை 79% ஆல் அதிகரிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் மற்றும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது ஐ.அ.டொலருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட நிதியின் சிறு குறைவு காரணமாக ரூபா 3.5 பில்லியன் இலிருந்து ரூபா 2.0 பில்லியன் வரை செலாவணி நட்டம் குறைவாகும்.

மீளாய்வு வருடத்துக்குள் விமான விபத்துக்கள் மற்றும் பயணிகள் விபத்துகள் ஏதும் இடம்பெறாமை தொடர்பான அறிக்கையிடப்படாமை தொடர்பாக பிரகடனப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். 60,000 இற்கு அதிகமான சர்வதேச விமானங்கள் அசைவுகள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துடன் தொடர்புபட்டதுடன் அது 2015 வருடத்துடன் ஒப்பிடுபோது 10% அதிகரிப்பாகும். அதேபோன்று விமானசரக்குகள் கொள்ளளவு 2,48,000 மெ.தொண் வரை கொண்டு வரப்பட்டு வளர்ச்சி 14% ஆக பதிவு செய்யப்பட்டது. 35,118 பறத்தல் அசைவுகளாக அறிக்கையிடப்பட்டதுடன் அது 2015 வருடத்தில் 3,694 ஒப்பிடும்போது 7% வளர்ச்சியாக இருந்தது. கடந்த வருடத்தில் பதிவுகள் இரட்டிக்கப்பட்டு உள்ளக 30,000 இற்கு அதிகமான விமானப் பயணிகளை ஈர்த்துக் கொண்டுள்ளன.

அரசுக்குச் சொந்தமான பொறுப்புடைய நிறுவனமாக நாம் ரூபா. 1.5 பில்லியன் பங்கிலாபமாக திறைசேரியிற்கு செலுத்தப்பட்டிருப்பதுடன் அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகள் சரியான நேரத்தில் ஈடு செய்துள்ளோம்.ஒட்டு மொத்தமாக 2016 ஆம் ஆண்டில் நேர்மறை தொழிற்பாட்டு பெறுபேறுகளுடன் நாம் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளோம். அதேபோன்று எதிர்காலத்தில் எமது அக்கறைதாரர்களுக்கு மிகவும் சிறந்த பெறுபேறு வழங்குவதற்காக எமது முதலீடுகளை வழங்கிடும் வழிகள் தொடர்ந்தும் செயல்முறைப்படுத்தியிருக்கின்றோம்.

## சவால்களினூடான அபிவிருத்தி

வருடத்துக்குள் எடுக்கப்பட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்காக மேற்குறிப்பிட்ட முனைப்பான முடிவு ஆணித்தரமான தளத்தை வழங்குகின்றது. உள்ளக விமானசேவைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 2016 வருடத்தில் சிவில் மற்றும் இராணுவம் ஒன்றிணைந்த செயல்முறைகள் மட்டக்களப்பு விமானநிலையத்தில் செயல்முறைப்படுத்தப்பட்டதுடன் சேவை வழங்குனராக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி நியமிக்கப்பட்டது. தேசிய சிவில் விமான தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் பண்டாராநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களான ஓடுபாதையின் மேற்புறத்தில் மேல்விரிப்பு கருத்திட்டம் மற்றும் பண்டாராநாயக்க சர்வதேச விமானநிலையத்தை விஷ்தரிப்பதற்கான இரண்டாம் கட்டத்தில் இரண்டாம் நடவடிக்கை அபிவிருத்திட்ட கருத்திட்டத்துக்காக இரு பிராதான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

பண்டாராநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமான ஓடுபாதையின் மேற்புர மேல்விரிப்புக்காக அதிக காலம் எடுக்கப்பட்டதுடன், ஐ.அ.டொ 48 மில்லியனுக்கான கருத்திட்டத்துக்குரிய உடன்படிக்கை 2016 செப்தெம்பர் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்த பெறுமதியிலிருந்து 85% HSBC ஹொங்கொங் வங்கியிலிருந்தும் மற்றும் உள்நாட்டு பகுதியான 15% வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி மூலமும் ஆகுமாறு நிதி தயார்படுத்துதல் இடம்பெற்றது . 2017 சனவரி 6 ஆந் திகதி ஆயத்தப்படுத்தும் வேலைகள் அரம்பிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட கால அட்டவணைக்கமைய 2017 ஏப்ரல் 6 அந் திகதி கருத்திட்டம் திருப்திகரமானதாக முடிவு செய்யப்பட்டது. 30 வருடங்களுக்கு முன்னர் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து ஒரேயொரு ஓடுபாதையான இதன் முதலாவது தயார்படுத்துதல்கள் இதுவாக இருந்தது. தேசிய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற இந்த கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்தது சாம்பற்கசடு கலந்த கீல் கலவை இடப்பட்ட பகுதியில் சேதமடைந்த பகுதிகள் மற்றும் விமான ஓடுபாதைக்கு நடைபாதைகள் பாதைகள் தயார்படுத்துவதும். வான்வழி 380 ரக பெரிய விமானங்களுக்கு இலகுவாகும் விதத்தில் ஓடுபாதை 60 மீட்டர் இலிருந்து 75 மீட்டர் வரை மருங்கால் அகலமாக்குவதாகும். வறட்சி காலநிலைப்போன்று பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறைப்பதனை கருத்திற்கொண்டு மூன்று மாத காலம் பூராவும் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் மேற்புற மேல் விரிப்பு நடவடிக்கைகளுக்காக ஓடுபாதை தொழிற்பாடுகளுக்காக மூடப்பட்டிருந்தது. மேலும் தொழிற்பாடுகளுக்கு ஏற்படும் தடங்களைக் குறைப்பதற்காக மத்தளை மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் மற்றும் இரம்மலானை விமானநிலையங்கள் விமானசேவைகளுக்கான வசதிகள் வழங்கப்பட்டு ஆரம்ப ஆயத்தப்படுத்தலினால் மேற்கொள்ளப்பட்டது. தொழிற்பாடுகளுக்காக ஏனைய விமானநிலையங்கள் நாள் பூராவும் செயல்பட்டதன் மூலம் விமானங்களுக்காக தனது பல்லிணையக தொடர்புகள் இலகுவாக பெற்றுக்கொள்ளும் மற்றும் தொழில்நுட்ப பயண இடைத்தங்கல் உறுதிப்படுத்தப்பட்டது. மூடியிருந்த காலப்பகுதிகளில் இரத்மலானை விமானநிலையத்திலிருந்து வர்த்தக ரீதியான ஜெட் விமானங்கள் அசைவுகள் கையாளப்பட்டன. ஓடுபாதையின் மற்றும் விமான நிறுத்துமிடத்தின் ஒளியமைப்பு ஹலோஜன் விளக்குகள் அப்புறப்படுத்தப்பட்டு டுநுனு குமிழ்கள் மூலம் மீள் கொள்முதல் செய்யப்பட்டதுடன் மின்சார பாவனையில் சேமிப்பாக இருந்ததுடன் வானோடிகளுக்கு யாதாயினுமொரு சீதோஷ்ண நிலைமையின் கீழ் விமான ஓடுபாதை கண்டறிவதற்கு அதன் மூலம் இலகுபடுத்துகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தொழிற்பாடுகள் மட்டுப்படத்தப்பட்டதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக நாம் மனமுவந்து எமது பயணிகளிடமிருந்து மற்றும் அக்கறையுடைய தரப்பினர்களிடமிருந்து வருத்தம் தெரிவிப்பதுடன் இந்த தடங்களை வெற்றிகொள்ளும் பொருட்டு அனைவரினாலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் 2 ஆம் நடவடிக்கை பரவலாக்கும் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு அது ஐ.அ.டொ 700 மில்லியனாகுவதுடன் அதற்கு 180,000 சதுர மீட்டருடனான இரு மாடிக்கட்டிட முனைய கட்டிடமொன்றை கட்டமைத்தல், தடங்களில்லாத பிரவேசத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட இரு விமானப்பயணிகள் மண்டபம் மற்றும் கோபுரங்களினூடாக நிர்மாணிக்கப்படுகின்ற சாலை உள்ளடக்கப்படும். இது இலங்கை சரவதேசத்திற்கு திறக்கப்படுகின்ற நுழைவாயிலாக உருவாகப்படும். நடைமுறை முனையக் கட்டிடத்தின் கையாளும் கொள்ளளவு 6 மில்லியனாக இருப்பினும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தால் இப்போதைக்கு வருடத்துக்கு பயணிகள் 9 மில்லியனிலும் பார்க்க கையாளப்படுகின்றது. விசேடமாக அதிக சேவைக்கான கேள்வி நிலவும் சந்தர்ப்பங்களில் பரிசோதனை முகப்புகளின் நீண்ட வரிசைகளுடன் தோற்றுவித்தல், வரும் பயண சரக்குகள் அப்புறப்படுத்தும் பிரதேசத்தில் போதாத நிலை கொள்ளளவு வசதிகள் போன்றவை காரணமாக ஏற்படும் பயணிகள் சேவை தாமதங்கள் காரணமாக விமானநிலையம் பாதிப்படைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டாகும்போது கருத்திட்டத்தை முடிவு செய்ததன் பின்னர் இப்போதைக்கு பயணிகளுக்கு மற்றும் விமானங்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் காரணமாக ஏற்படுகின்ற நெரிசல் குறைத்து விமானநிலையத்திற்கு வருடத்துக்கு பயணிகள் 15 மில்லியன் கையாளுவதற்கு இயலுமையிருப்பதுடன் வசதி மற்றும் பாதுகாப்பை முன்னேற்றும் அதே வேளை அதிகரிக்கும் கேள்விக்கு வழங்குவதற்கும் முடியுமாக அமையும். பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய இரண்டாம் கட்டத்தின் 2 அம் நடவடிக்கைக்காக நிதி JICA இனால் வழங்கப்படுவதுடன் அதற்கு 40 வருடங்களுக்குப் பின்னர் கொடுப்பனவு காலம் மற்றும் 10 வருட சலுகைக்காலம் உட்படுத்தப்படுவதுடன் வட்டி விகிதாசாரம் வருடத்துக்கு 0.2%˙ ஆகும்.2012 மார்ச் மாதத்தில் மற்றும் 2016 மார்ச் மாதத்தில் முறையே ஐ.யெண் 29 பில்லியன் மற்றும் ஐ.யெண் 45 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி மற்றும் துஐஊயுஇடையே இரு கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படும். கருத்திட்ட திட்டமிடல்கள் புதிய தொழில்நுட்ப செயல்முறைகளுக்கு இணங்கி சூரியசக்தி LED ஒளி, மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் மற்றும் மழைநீர் சேகரித்தல் போன்ற அதிக சுற்றாடலுக்கு உகந்த அடிப்படைகளை பாவனை செய்கின்ற பசுமை விமானநிலைய எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டது.

எமது விமானநிலையங்களினூடாக பயணம் செய்கின்றமை உணரும் விதத்திலும் பார்க்க சிறந்த அனுபவம் உறுதிப்படுத்தப்படுகின்ற அதேவேளை சரியான விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி எமது வாடிக்கையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே இலங்கையின் ஒரேயொரு வர்த்தக

விமானநிலைய தொழிற்பாட்டாளரான, எமது சவலாக அமைந்துள்ளது. வெளிநாட்டுக் கடனுடனான மேற்குறிப்பிட்ட முதலீடுகள் மூலம் மிகவும் சிறந்த முனையங்கள் மற்றும் விமானசேவைத் துறை வசதிகள் மற்றும் எமது நீண்டகால நோக்கங்களை எய்துவதற்காக மேம்படுத்தப்பட்ட சேவைகளுடன் புதிய உயர் உட்கட்மைப்பு வசதிகள் வழங்குவதற்கு எமது இயலுமையாக அமையும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் வளர்ச்சியின் கதை தொடர்பாக மேற்குறிப்பிட்ட அத்தியாயம் உயர் நம்பிக்கையுடன் மற்றும் ஆர்வத்துடக் மையப்படுத்தப்படுத்தும் அதே வேளை உயர் வளர்ச்சியின் பொருட்டு தொழிற்படுத்துவதற்கு மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு எமது மேற்குறிப்பிட்ட அனைத்து மூலோபாயங்களும் எதிர்வரும் வருடங்களுக்காகவும் தொடர்ந்தும் கையாளப்படும்.

### வணிக ரீதியான பொது தொழில்முயற்சியாக எதிர்காலம்

நிதி ஒழுங்குமுறை மேம்படுத்தும் நோக்கத்துடன் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் (SOBE) வலுப்படுத்தும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பரிந்துரையின் அடிப்படையில் 2017 மார்ச் மாதம் 15 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, நிதி அமைச்சு மற்றும் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சினால் கூட்டாண்மை உள்நோக்க கூற்றிற்காக (SCI) மூன்று வருட முத்தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.இந்த தூண்டுதல் நாட்டின் இயலளவு தேசிய உற்பத்திக்கு (GDP) வழங்கப்படுகின்ற பங்களிப்பு அதிகரிக்கிற பொருளாதார இலக்குகளுடன் சமமாக செல்வதுடன் வணிக பொது தொழில் முயற்சியாக செயலாற்றுவதற்கு போதுமானதும் மற்றும் நியாயமான முகாமைத்துவ மற்றும் செயல்பாட்டு சுதந்திரம் கொடுக்கப்பட்டு தொழிற்பாடு மற்றும் நிதி வினைத்திறனை அதிகரிப்பதற்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியை ஊக்கமளித்தல் மற்றும் எளிதாக்குவதற்கும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும். நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் கழித்து உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்குட்படுவதுடன் பொதுமக்கள் பொறுப்புகூறவேண்டியதை அதிகரிக்கப்படுத்தும் அதே நேரத்தில் முன்னேற்றமடைந்துள்ள நிறுவனம் வழக்காறுகள், நவீன நிதியீட்டல் வலுவான மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவ போட்டித்திறன் முனைதல். சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் பயனுறு மனித வள முகாமைத்துவத்தினூடாக இயங்குவது வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியால் எதிர்பார்க்கப்படுகிறது.

### மத்தளை விமான நிலைய வாய்ப்புகள்

விமான நிலையம் பயனுள்ள முறையில் பயன்படுத்தும் பொருட்டு அரசாங்க தலையீட்டுடன் தனியார் துறையின் பங்களிப்பின் கீழ் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் வணிக வாய்ப்புகளுக்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியை இன்னும் எதிர்பார்த்திருக்கிறது. 2016 வருடத்தில் சாத்தியப்பாட்டுடைய சர்வதேச மற்றும் அதே உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடு (EOI) அழைக்கப்பட்டதுடன் உறுதியான அடிப்படையிலான தொழிற்பாடுகள் (FBO) பறக்கும் பாடசாலைகள் விமான பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் தேர்வாய்வு (MRO) மற்றும் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் ஏனைய விமானசேவைகள் தொடர்பான கைத்தொழில்களுக்கான பல முன்மொழிவுகள் கிடைத்துள்ளன. சில ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் இன்னும் அது ஆரம்ப கட்டத்தில் உள்ளது. இதற்கிடையில், ஸ்ரீலங்கன் விமானசேவை மீண்டும் ஒரு முறை மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் தொழிற்பாடுகளை தொடங்கியுள்ளது.இன்னும் Fly Dubai மற்றும் ரொட்டானா ஜெட் விமானசேவை மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்ததும் மேற்கொண்டு வந்ததுடன், ஸ்ரீ விஜய விமானசேவை இந்தோனேஷியாவிற்கு விமானப் பயணங்களுக்காகவும் தூண்டப்பட்டது. மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் செயல்பாடுகள் பற்றி இந்த முன்னேற்றங்கள் மூலம் முதலீடு அடிப்படையிலான மீள்வரவுகள் ஒரு பொருளளவில் கொள்ளும்போது ஓரளவு உறுதியான நம்பிக்கை கொடுக்கின்றது.

### முடிவுரை

2016 ஆம் வருடம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியிற்கு மேலும் சிறந்த வருடமாக அமைந்தது. நான் எனது சிரேஷ்ட முகாமைத்துவ குழுவுக்கு மற்றும் எமது அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் அசைக்க முடியாத இணைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்று ஏனைய அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்களால் வருடத்துக்குள் வழங்கப்பட்ட சிறந்த பங்களிப்பு தொடர்பாக நன்றி நவில்கின்றேன். பொதுவான குறிக்கோள்களை நோக்கி செயல்படும் வல்லுநர்களையுடைய உயர் செயல்திறன் கொண்ட ஒரு அணி வழிநடாத்துவதற்கு கிடைத்தமை பற்றி பாக்கியம் என்று கருதுகின்றேன். எங்கள் ஊழியர்கள் எதிர்காலத்தில் வரவிருக்கும் சவால்கள் வெற்றிகொள்வதற்கு இயலுமையுடையோர்களெனவும் எங்கள் ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு வழக்கமாக உயர் மட்ட சேவை வழங்கப்படுகிறது என்பது எனது நம்பிக்கையாகும். ஆண்டு முழுவதும் தனது தொலைதூர தலைமைத்துவத்துடன் வழிநடாத்துதல் மற்றும் வழிகாட்டல் வழங்கும்பொருட்டு உண்மையான பாராட்டுவதற்கு இதனை ஒரு வாய்ப்பாகக் கொள்கின்றேன். மற்றும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நெருங்கிய கண்காணிப்பு கம்பனியின் விவகாரங்கள் பற்றிய மேற்பார்வை மற்றும் எங்களை பற்றிய நம்பிகை பேணும் பொருட்டு போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சருக்கு மற்றும் கௌரவ பிரதி அமைச்சருக்கு, போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் செயலாளர், மற்றும் பதவியணிக்கு, நிதி அமைச்சுக்கு மற்றும் சிவில் விமானசேவைகள் அதிகாரசபைக்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேனன். இறுதியாக இலங்கை அரசுக்கு மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு எமது விமானநிலையங்களில் மற்றும் தொழிற்பாட்டு முன்னேற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் இலகுபடுத்தவதற்காக எனது உண்மையான நன்றியை தெரிவித்துக்கொள்வதில் விரும்புகின்றேன். 2017 ஆம் வருடத்துக்குள் எமது பயணம் தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.



**பொறியியலாளர்**
**எஸ். எஸ். எதிரிவீர**
**தவிசாளர்**
**2017 ஜூன் 14**



# பணிப்பாளர் சபை

## இடமிருந்து வலமாக

| | | |
|---|---|---|
| என்.பி.எல் பெர்னாந்து | - | பணிப்பாளர் |
| என் ஆர் ஹேவாதந்திரி | - | பணிப்பாளர் |
| எல் டப்ளியு ஏ டி சொயிசா | - | பணிப்பாளர் |
| கே.வி.பி ரங்ஜித் டி சில்வா | - | உப தவிசாளர் |
| எஸ்.எஸ். எதிரவீர | - | தவிசாளர் |



| | | |
|---|---|---|
| ஜொஹான் ஜயரத்ன | - | நிறைவேற்று பணிப்பாளர் |
| எம்.சி.பி. மஹீபால | - | கம்பனிகள் செயலாளர் |
| டப்ளியு.எம். அனுராத விஜேகோன் | - | பணிப்பாளர் |
| ஆர் கெடவலகே | - | பணிப்பாளர் |
| ஜே.எம் குணவர்தன | - | பணிப்பாளர் |

படத்தில் இல்லை : ஆர். ஆடிகல - பணிப்பாளர்

எஸ். ஈ. டப்ளியு. குணசேக்கர - பணிப்பாளர்




இடமிருந்து வலமாக:

| | | |
|---|---|---|
| எஸ்.டி.எஸ்.நிசாந்த | - | கம்பனியின் மருத்துவ அதிகாரி |
| எல் தஹநாயக்க | - | தலைவர் நிதி |
| டப்ளியு.எம். பி கருணாரத்ன | - | தலைவர் வணிக மற்றும் உடைமைகள் |
| எச்.எஸ்.ஹெட்டியாரச்சி | - | தலைவர் விமானநிலைய முகாமைத்துவம் |
| எம்.சி.பி.மஹீபால | - | தலைவர் மனிதவளங்கள் மற்றும் கம்பனிச் செயலாளர் |

# சிரேஷ்ட




இடமிருந்து வலமாக:

| | | |
|---|---|---|
| ஜே.எம்.யூ.ஜயமான்ன | - | தலைவர் மின் பொறியியலாளர் |
| யு.ஜே.லொகுஆரச்சி | - | தலைவர் தகவல் தொழில்நுட்பம் |
| எம் ரத்னசிங்ஹ | - | தலைவர் சட்டம் |
| ஏ.அய்.பீ.கருணாரத்ன | - | தலைவர் கருத்திட்டங்கள் |
| ஜீ விதானகே | - | தலைவர் சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) |
| ஜே.எம்.டி. குரூஸ் ரூபின் | - | தலைவர் கட்டிடக்கலை, இயற்கை நிலக்காட்சி மற்றும் உட்புற வடிவமைப்பு |




# முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| இடமிருந்து வலமாக: | ஏச்.எ.எ.கே.எம். செனவிரத்ன | - தலைவர் சிவில் விமானசேவைகள் பயிற்சி |
| | டப்ளியு.சி. திசேரா | - தலைவர் வானோடல் சேவைகள் |
| | டப்ளியு. விமலசாந்தி | - தலைவர் மின்னணுவியல் மற்றும் வானோடல் சேவைகள் பொறியியலாளர் |
| | எ.டீ.என்.ஆர்.டி. அல்விஸ் குணசேக்கர | - தலைவர் தீயணைப்புச் சேவைகள் மற்றும் இடர்மீட்பு சேவைகள் |
| | கே.எச்.சி.குமாரசிங்ஹ | - பிரதான ஒருங்கிணைப்பாளர் உள்ளக விமானநிலைய கருத்திட்டங்கள் |



| | | |
|---|---|---|
| இடமிருந்து வலமாக: | ஆர். டப்ளியு. விஜேசிங்ஹ | - தலைவர் இயந்திர பொறியியலாளர் |
| | யு.எஸ்.ஜாகொட | - தலைவர் சிவில் பொறியியலாளர் (பராமரிப்பு) |
| | டப்ளியு.பி.சிறில் | - தலைவர் உள்ளக கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதம் |
| | எச்.பி.எல்.சிறிமான்ன | - பதில் கடமைபுரி தலைவர் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவம் |
| | எஸ்.எம்.டி. விஜேசூரிய | - பதில் கடமைபுரி தலைவர் பாதுகாப்புச்சேவை |

# கம்பனியின் அலுவல்கள் பற்றிய பணிப்பாளர் சபை அறிக்கை

"2016 ஆம் ஆண்டிலும் நாம் இலங்கையின் விமானநிலைய, விமான சேவைகள் வரலாற்றில் மற்றுமொரு சிறப்பான ஆண்டைக் கடந்து கோடிட்டுக்காட்டத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து தொடர்ந்தும் முன்னோக்கிச் சென்றோம். இவ்வெற்றியானது அதிசிறப்புநிலைக்காக அர்ப்பணிப்பதற்கும் சிறப்பான ஒரு தலைமைத்துவத்தின் கீழ் குவிமையப்படுத்திய முயற்சிகளுக்கும் ஒரு சான்றாக அமைகிறது. சந்தேகமின்றி, இது ஆசிய பிராந்தியத்தில் வினைத்திறனிலும் நட்புறவிலும் **முன்னணி வகிக்கும் விமான சேவை மையமாக இருப்பதன் மீதான பாதையைத் தெளிவுபடுத்துவதுடன் அத்திசையில் நமது முன்னோக்கிய பயணத்தைத் துரிதப்படுத்தும்.**"

## கம்பனி பற்றி

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியானது இலங்கையின் சிவில் விமான நிலையங்களை முகாமைசெய்வதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் உரிய நியதிச்சட்ட தத்துவம் பொருந்திய, ஒரு பூரண அரசுடைமைக் கம்பனியாகும். 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளின்படியும் அதிசிறந்த கணக்கீட்டு நடைமுறைகளின்படியும் இதன்கண்ணுள்ள தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## பிரதான பணிகள்

ஆண்டினுள் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகள் மாற்றமின்றிக் காணப்பட்டது. 2010 நவம்பர் 04 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானசேவைகள் சட்டத்தினால் வழங்கப்படும் உரிமத்தின்கீழ் பின்வரும் வானோடல் சேவை குறித்த ஒரேயொரு நியதிச்சட்ட சேவை வழங்குநராக வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தொடர்ச்சியாக தமது வகிபாகத்தைப் பூர்த்திசெய்துள்ளது.

1. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (BIA), மத்தல சர்வதேச விமானநிலையம் (MRIA), ரத்மலானை விமானநிலையம் (RMA) என்பவற்றின் அபிவிருத்தி நடவடிக்கை, பராமரிப்பு என்பவற்றை உள்நாட்டு விமான சேவைகளை அபிவிருத்திசெய்யும் அரசாங்கத்தின் உபாயமுறைக்கு இணையாக மட்டக்களப்பு விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. மேற்குறிப்பிடப்பட்ட வானூர்தித் தளங்களில் சோதனை, மீட்புப்பணி, தீயணைப்புச் சேவைகள் மற்றும் விமானப் பயண பாதுகாப்புச் சேவைகளை வழங்குதலும் பேணிச்செல்லலும்.

3. வான் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துச் சேவைகள், வானோடல் தகவல் சேவைகள், வானோடல் தொடர்பாடல் சேவைகளை வழங்கல் மற்றும் கொழும்பு வான் தகவல் வலயத்தினுள் (FIR) சகல விமானங்களதும் பயணிகளதும் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிசெய்து தொடர்பாடல், வான்செலவு, நுண்சோதனைக்கு வானோடல் வசதிகளை வழங்குதல்.

## செயற்பாடுகளின் மீளாய்வு

செயற்பாடுகள் மற்றும் நிதிச் செயலாற்றுகையின் மீளாய்வொன்றை தவிசாளரின் மீளாய்விலும் முகாமைத்துவ பேச்சுவார்த்தை மற்றும் பகுப்பாய்வில் (MDA) விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் இந்த அறிக்கைகளின் ஊடாக கம்பனியின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

## நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக பணிப்பாளர்களின் பொறுப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி எமது கம்பனியின் நிதிக் கூற்றுகள் சம்பந்தமான பணிப்பாளர்களின் பொறுப்பை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அதன்படி, இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள் (SLFRS/LKAS) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தமான நிதிக்கூற்றுகள் பேணப்பட்டுவருவதை உறுதிப்படுத்துவது அவர்களின் பொறுப்பு என்பதை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.

அறிக்கையின் 93 ஆம் இலக்கம் தொடக்கம் 125 வரையான பக்கங்களில் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுகளில் கம்பனியின் நடவடிக்கைகள் குறித்த உள்ளபடியானதும் நியாயமானதுமான ஒரு நோக்கு முன்வைக்கப்படுவதாக பணிப்பாளர்கள் திருப்தி அடைகின்றனர்.

## கணக்காய்வாளர்களின் அறிக்கை

கம்பனியின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர்களின் அறிக்கை இல. 85 தொடக்கம் 91 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

2016 ஆம் ஆண்டினுள் கணக்கீட்டுக் கொள்கைகளில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. கம்பனி, ஆண்டினுள் இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் (SLFRS/LKAS) கையாண்டு செயற்பட்டதுடன், அது முன்னைய ஆண்டுடனும் இயைபுறுவதாக இருந்தது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் விதப்புரைகளின்படி வருமானத்தை இனங்காண்பதிலும் அளவிடுவதிலும் LKAS 18 மூலம் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு மேலதிக கூற்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இல. 97 தொடக்கம் 125 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## நிறுவன, சமூகப் பொறுப்புடைமை (CSR)

விமானநிலையங்கள் மற்றும் விமானசேவைகள் கம்பனியினால் ஆண்டினுள் நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) மற்றும் நன்கொடைகளுக்காக வழங்கப்பட்ட முழு பங்களிப்பு 3.2 மி.ரூ. ஆக அமைந்தது.

## உள்ளக கட்டுப்பாட்டு முறைமை

கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்பாட்டைக் கண்காணிப்பும் பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும். கம்பனியின் உபாயமுறை சார்ந்த இலக்குகள், கூட்டு ஆளுகைப்

பணிச்சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கு அமைவான இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்குடன் முறைமைகளை மீளாய்வுசெய்தல், கண்காணித்தல் அடங்கலான எல்லா நிதிகள் மற்றும் நிதிசாரா செயற்பாடுகள் இந்த நோக்கெல்லைக்கு உட்படும்.

### எதிர்கால அபிவிருத்திகள்

ஓடுபாதை மேல்விரிப்பு பரப்புதலும் அதனோடிணைந்த வேலைகளும் தொடர்பான கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டில் முடுக்கிவிடப்பட்டதுடன், நீண்டகாலம் தாமதமடைந்த இப்பணியை பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய வகையில் 2016 செப்டம்பர் மாதம் 02 ஆந் திகதி ஒப்பந்த ரீதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 44 மில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனொன்றை HSBC Hong Kong வங்கியிலிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் ஒப்பந்தப் பெறுமதியில் 85% நிதியீட்டம் செய்யப்பட்டது. எஞ்சிய 15% உள்ளூர் நிதியங்கள் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டது. இந்த தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கருத்திட்டம் 2017 முதற்காலாண்டில் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாவது பயணிகள் முனையத்தை (T2) நிர்மாணித்து வருடமொன்றுக்கு பயணிகளைக் கையாளும் இன்றைய இயலளவான 6 மில்லியனை இன்னும் 9 மில்லியன்களினால் அதிகரிப்பதன் மூலம் ஆண்டொன்றுக்கு பயணிகளைக் கையாளும் இயலளவை 15 மில்லியன் வரை அதிகரிப்பதன் பொருட்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் உத்தேச இயலளவு விரிவாக்கல் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 29 பில்லியன் யப்பானிய யென்களுக்கான ஆரம்ப கடன் ஒப்பந்தம் 2012 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டதுடன், 45 பில்லியன் யென்களுக்கான மேலதிக கடன் ஒப்பந்தமொன்று JICA உடன் 2016 மார்ச் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதற்கு மேலதிகமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், ரத்மலானை மற்றும் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும் இணைந்த சொத்துக்களை அபிவிருத்திசெய்தலும் எதிர்வரும் 5 வருடங்களுக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களாக இருப்பதுடன், அதன்மூலம் நாட்டின் விமானசேவைகள் கைத்தொழிலில் நிச்சயமான ஒரு பெரு வளர்ச்சி ஏற்படும்.

## கம்பனியின் வருமானக் கூற்றும் நிதி நிலைமையும்

### வருமானம்

கம்பனியின் வரலாற்றில் இதுவரை அடைந்துகொண்ட அதிகூடிய மொத்த வருமானமாக 18.3 பில்லியன் ரூபா பெறுமானமொன்றைப் பதிவுசெய்துள்ளது. வருமானமும் இலாபமும் பற்றிய விரிவான பகுப்பாய்வொன்று நிதி மீளாய்வின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது.

### தொழிற்பாட்டு விளைவுகள்

கம்பனி 2016 ஆம் ஆண்டிறுதியில் 6.9 பி.ரூ. வரிக்கு முந்திய இலாபமொன்றை (PBT) பதிவுசெய்துள்ளது. கடந்த ஆண்டுடன் இதனை ஒப்பிடுமிடத்து 191% (4.5 பி.ரூ.) குறிப்பிடத்தகு ஒரு வளர்ச்சியாகும். வருமானம் 2.6 பி.ரூபாவினால் அதிகரித்தமையும் ஐக்கிய அமெரிக்கா டொலருக்கு ஒப்பீடாக ரூபா பெறுமதியிறக்கம் மெதுவாக ஏற்பட்டதன் மூலம் நிதி வருமானம் மீதான பங்களிப்பு அதிகரித்தமையும் வருமான வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து செலவை குறைந்த மட்டத்தில் பேண முடிந்தமையும் இந்த விளைவுக்குக் காரணமாக அமைந்தது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) 747% வீத அதிகரிப்பைப் பதிவு செய்கிறது. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக வரிக்குப் பிந்திய இலாப அதிகரிப்பிற்கு, 2015 இல் பதிவாகிய வரி ஏற்பாடான 1.6 பி.ரூ. உடன் ஒப்பிடுமிடத்து, 11 மி.ரூ. வரிஏற்பாடு மீள்தோன்றலும் காரணமாக அமைந்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கான பெறுமானங்களின் ஒப்பீடொன்று கீழ்க்காணும் அட்டணையில் தரப்பட்டுள்ளது:

| விபரம் | 2016 மி.ரூ. | 2015 மி.ரூ. |
|---|---|---|
| எல்லா தொழிற்பாட்டுச் செலவுகளையும் கொடுப்பனவுசெய்வதன் மூலமும் தேய்மான ஒதுக்கீட்டின் பின்னரும் டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வரிக்கு முந்திய இலாபம் | 6,909 | 2,378 |
| குறைக்கப்பட்டது: வரியீட்டுக்கான ஏற்பாடு | 11 | (1,561) |
| ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபம் | 6,920 | 817 |
| ஆயுட்கால எடுகோள் மாற்றங்களின் பேரில் எழக்கூடிய இலாபம் / (நட்டம்) | 4 | 124 |
| வேறு முழு மொத்த வருமானம் | - | - |
| **மொத்த முழுமொத்த வருமானம்** | 6,924 | 941 |

### ஒதுக்குகள்

நிறுத்திவைத்த வருவாய்களின் அதிகரிப்புடன் கம்பனியின் ஒதுக்குகள் 2016 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு 16,416 மி.ரூ. வரை அதிகரித்துள்ளதுடன், 2015 ஆம் ஆண்டிற்காக அது 10,992 மி.ரூ. ஆக இருந்தது. கம்பனியின் ஒதுக்குகளின் அசைவு குறித்து 95 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள பங்குரிமை மாற்றக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### பங்கிலாபங்கள்

ஆண்டினுள் பணிப்பாளர்கள் 2015 ஆம் ஆண்டிற்காக 350 மி.ரூ. இறுதிப் பங்கிலாபமொன்றைப் பிரகடனப்படுத்தி செலுத்தியுள்ளனர். 2016, 2017 ஆகிய ஆண்டுகளுக்கு 1,150 மி.ரூ. இடைக்காலப் பங்கிலாபமொன்று செலுத்தப்பட்டுள்ளது. 2016 க்கான இறுதிப் பங்கிலாபம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முன்மொழியப்படவுள்ளது.

### மூலதனச் செலவு

2015 ஆம் ஆண்டிற்கான 617 மி.ரூ. உடன் ஒப்பிடுமிடத்து மீளாய்வு ஆண்டிற்கான கம்பனியின் மூலதனச் செலவு 2,400 மி.ரூ. ஆக இருந்தது. ஆண்டினுள் சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களிலான அசைவுகள் நிதிக்கூற்று இல. 11 இன் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது.

**விமானநிலையங்கள், விமானசேவைகள் கம்பனியின் அரச வருவாய்க்கான பங்களிப்பு**




### ஐந்தொகை திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதிக்கூற்றுகளில் சீராக்கம் செய்வதற்கு அவசியமான முக்கிய நிகழ்வுகள் எவையும் ஐந்தொகை திகதிக்குப் பின்னர் நிகழவில்லை.

### தொடர்ந்து செல்லல்

பொதுவான எதிர்வுகூறல் முறைகளைப் பின்பற்றுவதன் மூலம், எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் ஆபத்து நிலைமைகளை கவனத்திற்கு உட்படுத்துவதன் மூலமும் உசிதமான விசாரணை அலுவல்களை மேற்கொண்டதன் பின்னர் எதிர்வரும் காலத்துள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வதற்கு போதிய வளங்களும் கடன் வசதிபெறுவதற்கான ஆற்றலும் கம்பனியின் வசம் இருப்பதாக பணிப்பாளர் சபை கருதுகின்றது. அந்த அடிப்படையில், நிதிக்கூற்றுக்கள் யாவும் தொடர்ந்துசெல்லல் அடிப்படையில் தயார்செய்யப்பட்டுள்ளது.

### எதிர்பாராதவையும் பொறுப்புக்களும்

2016 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனப் பொறுப்புக்களும் பற்றிய விபரங்கள் 124, 125 ஆகிய பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 27, 28 ஆம் இலக்க நிதிக்கூற்று குறிப்புகளில் முன்வைக்கப்பட்டுள்ளது.

### முதலீடுகள்

அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ளவாறான நீண்டகால மற்றும் குறுங்கால முதலீடுகள் பற்றிய விரிவான ஒரு விவரணம் 14, 18 ஆகிய நிதிக்கூற்றுக் குறிப்புகளில் (பக்கம் இல. 118, 120) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக முதலீடொன்றாக 6.2 பி.ரூ. ஆண்டினுள் உயர் வருவாயுடன் தொகுதிக்கடன்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

### பங்கு மூலதனம்

கம்பனியின் பங்கு மூலதனம் கம்பனியின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன், அலகு ஒவ்வொன்றும் 100/- ரூபா பெறுமதியான சாதாரண பங்குகளைக் கொண்டதாகும். 2016 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பங்குரிமை விபரம் கீழ்க்காணுமாறு அமையும்:

| பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ) | வகிப்போன் |
|---|---|---|
| 200,000 | 20,000,000 | திறைசேரியின் செயலாளர் |
| 1 | 100 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் |
| 1 | 100 | சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் |
| **200,002** | **20,000,200** | |

### பணிப்பாளர் சபையும் பணிப்பாளர் சபை உப குழுக்களும் பற்றிய தகவல்கள்

### பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபை 2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. 2016 மார்ச் 17 ஆந் திகதி புதிய பணிப்பாளரொருவர் 2016 ஆம் ஆண்டிற்காக நியமிக்கப்பட்டார். நிதியாண்டு இறுதியில் பதவிவகித்த பணிப்பாளர்களின் நிரலொன்று, வகிக்கும் அல்லது வகித்த பதவி, நியமனத் திகதி, கேட்டுவிலகல்கள், மீள்நியமனம் ஆகிய விபரங்களுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது. தவிசாளரை நியமித்தல் (பிரிவு 79), நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களின் நியமனம் (பிரிவு 82), சி.வி.சே.கம்பனியின் அமைப்பு அகவிதியின் மேற்குறிப்பிடப்பட்ட சட்டவாசகங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.

2016 நிதியாண்டு இறுதியில் பதவி வகித்த பணிப்பாளர்கள் பற்றிய விபரம்

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| எஸ்.எஸ்.எதிரிவீர | தவிசாளர் | 12/10/2015 |
| கே.வி.பி.ஆர். டி சில்வா | உப தவிசாளர் | 12/10/2015 |
| ஜொஹான் ஜயரத்ன | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 12/10/2015 |
| என்.ஆர். ஹேவதந்திரி | பணிப்பாளர் | 12/10/2015 |
| என்.பி.எல்.பி.பர்னாந்து | பணிப்பாளர் | 12/10/2015 |
| டப்ளியு.எம்.ஏ.விஜேகோன் | பணிப்பாளர் | 12/10/2015 |
| எஸ்.ஈ.டப்ளியு.குணசேக்கர | பணிப்பாளர் | 12/10/2015 |
| எல்.டப்ளியு. ஏ. டி சொய்சா | பணிப்பாளர் | 16/11/2015 |
| எஸ்.ஆர்.ஆட்டிகல | பணிப்பாளர் | 16/11/2015 |
| ஆர்.கெட்டவலகே | பணிப்பாளர் | 16/11/2015 |
| ஜே.எம்.குணவர்தன | பணிப்பாளர் | 17/03/2016 |

## பணிப்பாளர் சபை உப குழுக்கள்

செயற்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுக்கு மிகச்சிறந்த வழிகாட்டலொன்றையும் கண்காணிப்பொன்றையும் ஏற்படுத்தும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (AMC) நிறுவப்பட்டுள்ளது. இது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் மூவரை உள்ளடக்கியதாகும். எல்.டப்ளியு.ஏ. டி சொய்சா, எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் என்.பி.எல்.பி. பர்னாந்து ஆகியோர் மீளாய்வு ஆண்டினுள் இக்குழுவில் பணியாற்றினர். கணக்காய்வாளர் திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் திருமதி. ஏ.டி.தில்ருக்ஷி, உள்ளகக் கணக்காய்வு மற்றும் தரச்சான்றுப்படுத்துகை பிரிவுத் தலைவர் திரு. சி.வன்னிகம ஆகியோர் மீளாய்வு ஆண்டினுள் குழுவில் அங்கம் வகித்தனர். உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை முன்னேற்றும் பொருட்டும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி சார்ந்த ஆபத்துக்களைத் தணிப்பதற்காக AMC இனால் பணிப்பாளர் சபைக்கு பல்வேறு சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஐஎஸ்ஓ 9001:2008 ஏற்பாடுகளுக்கு அமைவாக வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் தர முகாமைத்துவ முறைமை (QMS) நிறுவப்பட்டது. தராதரம் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் முக்கிய செயன்முறையை உள்ளடங்கியது. ஆண்டினுள் திட்டமிடப்பட்ட சகல QMS உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளும் சகல பிரிவுகள் தொடர்பிலும் அமுல்படுத்தப்பட்டது.

## பங்குகளும் தொகுதிக்கடன்களும் சம்பந்தமான பணிப்பாளர்களின் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வெளிப்படுத்துகை

எந்தவொரு பணிப்பாளரும் பங்குகள் அல்லது தொகுதிக்கடன்களின் உரிமையைக் கொண்டிருப்பதில்லை.

## ஒப்பந்தங்களும் உத்தேச ஒப்பந்தங்களும்

தொடர்பிலான பணிப்பாளர்களின் தொடர்புகள் மீளாய்வு ஆண்டினுள் கம்பனியின் வியாபார நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது உத்தேச ஒப்பந்தங்களுக்கு எந்தவொரு பணிப்பாளரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புபடவில்லை.

## பணிப்பாளர்களின் ஊதியங்களும் ஏனைய நன்மைகளும்

நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மூவருக்கு (கம்பனியின் அமைப்பு அகவிதியின் 77 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட) 7.7 மி.ரூ. ஆண்டினுள் ஊதியமாகச் செலுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளர் கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், உபசரணைச் செலவு மீள்நிரப்பல், தொலைபேசி, விடுமுறை நாள் ஊதியம் அடங்கலான ஏனைய கொடுப்பனவுகள் என்ற அடிப்படையில் சகல நிதிசார் நன்மைகளும் இதில் அடங்கும். நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அல்லாதவர்களுக்கு பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு பிரயாணச்செலவு மற்றும் பணிப்பாளர் கட்டணமாக 1.24 மி.ரூ. ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது.

## கூட்டிணை ஆளுகை

சகல அக்கறையுள்ள முக்கிய தரப்புகளுடன் நீண்டகாலத் தொடர்புகளைப் பேணி அதனை முன்னேற்றுவதற்கு கம்பனியின் முழுதளாவிய ஆளுகைச் செயன்முறையில் விளைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை பணிப்பாளர்கள் வகிக்கின்றனர்.

## நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கு வேறு ஒழுங்குறுத்தல் நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டிய சகல நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் உரிய காலத்துள் செலுத்தப்பட்டதாக அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தாம் அறிந்தவரையிலும் நம்பிக்கை அடிப்படையிலும் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

## கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரைக்கு 2015 மே 15 ஆந் திகதியன்று செய்யப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான ஒரு சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சகல அரச தொழில்முயற்சிகளையும் கணக்காய்விற்கு உட்படுத்தும் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2016 ஆம் ஆண்டிற்கான விமானசேவைகள் மற்றும் விமானநிலையங்கள் கம்பனியின் கணக்காய்வு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்டது. காலப்பகுதிக்குரிய கணக்காய்வுக் கட்டணம் 750,000 ரூ. (2015 ஆம் ஆண்டில் 940,753) ஆக இருந்ததுடன், கணக்காய்வு சார்ந்த சேவைகளுக்காக அல்லது கணக்காய்வு அல்லாத சேவைகளுக்காக கணக்காய்வாளர்களுக்கு வேறெந்தக் கட்டணமும் செலுத்தப்படவில்லை.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

ஆண்டுப் பொதுக்கூட்டம், 2017 ஜூன் 30 ஆந் திகதி பி.ப. 03.00 மணிக்கு சிவில் விமானசேவைகள், விமான நிலையங்கள் கம்பனியின் பணிப்பாளர் சபை அறையில் நடைபெறவுள்ளது.

## நன்றி நவிலல்

கம்பனியினால் அடையப்பெற்ற வெற்றிநிலைகளில் காண்பிக்கப்பட்ட அயராத முயற்சி, ஊக்குவிப்பு, தொழில்வாண்மை என்பவற்றையிட்டு முகாமைத்துவக் குழுவிற்கு பணிப்பாளர் சபை தனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றது. அக்கறையுள்ள ஒரு தரப்பினராக இருந்தும் கம்பனியை ஒழுங்குறுத்தியும் எமக்களித்த தொடர் ஒத்துழைப்பையிட்டு போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகும். மேலும் எம்மீது தொடர்ந்தும் நம்பிக்கைவைத்த எமது வாடிக்கையாளர்கள் அடங்கலாக கம்பனியின் வெற்றிநிலைக்காக பங்களிப்புச்செய்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விழைகின்றோம். இறுதியாக, எனினும் குறைவேதுமின்றி விமானசேவைகள், விமானநிலையங்கள் கம்பனியின் சகல பணியாள்தொகுதியினருக்கும் அவர்களின் பூரண அர்ப்பணிப்பு, நேர்மை, கடும் உழைப்புக்காக எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

**பொறியியலாளர் எஸ்.எஸ்.எதிரிவீர**
**தவிசாளர்**

**2017 ஜூன் 07**



# பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்திக் கருத்திட்டம்



“எதிர்வரும் ஆண்டுகளில்
15 மில்லியன் பயணிகளுக்குக்
கூடுதலானவர்களைக் கையாள்வது
யதார்த்தமாக மலரும்.”

# முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

பொது நோக்கொன்றாக வரையறுக்கப்பட்ட

விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பயணம்

2016 இல் 'Es 16' உடன்

“வளர்ச்சிப் பாதையில் காலூன்றி...”






11% வளர்ச்சியுடன்
**9,466,248** பயணிகள்



10% வளர்ச்சியுடன்
**61,637** விமான நகர்வுகள்



14% வளர்ச்சியுடன் **248,347**
மெ.தொ. விமான சரக்குகள்

# உலக விமானநிலைய போக்குவரத்து அறிக்கை – 2015



உலக விமானநிலையப் பயணிகள் எண்ணிக்கை **7.2 பில்லியன்** வரை அதிகரிப்பு.
அது 6.4% வளர்ச்சியாகும்.






**37 விமான நிலையங்களில்**
**40 மில்லியனைத்** தாண்டிய விமானப் பயணிகள்.




2016 முதலரைப் பாகத்தில் பயணிகள் போக்குவரத்திலான வளர்ச்சி




உலக விமான சரக்குகள் அதிகரிப்பு




**உலக விமான நகர்வுகள் 88.5 மில்லியன் அதிகரிப்பு.**
**அது 2.0% வளர்ச்சியாகும்.**

மூலம்: ACL வருடாந்த உலக விமானநிலைய போக்குவரத்து அறிக்கை (WATR) – 2015

# 2016 உலக விமானநிலைய போக்குவரத்துக்கான எதிர்கூறல்

**2015–2040 பயணிகள் போக்குவரத்திலான வளர்ச்சி**
**(கூட்டான வருடாந்த வளர்ச்சி வீதம்)**




உலக எதிர்வுகூறல் கூட்டான வருடாந்த வளர்ச்சி வீதம் (CAGR) 4.9%

**2029 இல் உலக பயணிகள் போக்குவரத்து இருமடங்கால் அதிகரித்து 14 பில்லியனைத் தாண்டும்.**

**சந்தைப் பங்கு (%)**




**2028 இன் பின் சர்வதேச பயணிகள் போக்குவரத்து, உள்நாட்டுப் போக்குவரத்தை மிகைத்துவிடும்.**







**விமானப் பயணிகள் போக்குவரத்தின் எதிர்கால வளர்ச்சி**

**எழுந்துவரும் சந்தைகளின் ஊடாக உருவாக்கம் பெறும்.**

(CAGR 2015-2040)




மூலம்: ACI உலக விமானநிலைய போக்குவரத்து எதிர்வுகூறல் (WATF) – 2016–2040

## உலக பொருளாதாரம்

சர்வதேச நாணய நிதியத்தின் உலக பொருளாதார நோக்கின்படி தாராண்மைப் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தும் சந்தை மற்றும் வளர்முக பொருளாதாரங்களை எழச்செய்வதற்கு இட்டுச்செல்வதன் மூலம் முன்னேறிய பொருளாதாரங்களை எதிர்பார்த்த நன்மைக்கு மேலும் சக்தியை உறுதிப்படுத்திக்கொண்டதுடன், 2016 ஆம் ஆண்டின் ஈற்றரைப் பாகத்தில் உலக பொருளாதாரத்தில் எழுச்சியொன்று ஏற்பட்டது. கேள்வியின் மீதமைந்த சந்தை மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களைத் தூண்டும் பொருட்டு தொடர் முயற்சியில் ஈடுபட்ட முன்னேறிய பொருளாதாரங்கள், பொதுவாக உலக நிதிச் சந்தையில் கடும் நிபந்தனைகள் மூலம் ஏற்படும் பாதிப்புக்களைக் கவனத்திற்கொள்ளாமல் ஒவ்வொரு நாட்டின் சென்மதிநிலுவை நிலைகள், நிதி நிலைமைகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளின் மீது தங்கியிருந்து பல்வேறு வளர்ச்சிகளுடன் செலாவணி விகித பெறுபேறுகளைச் சுட்டிக்காட்டியது. உலக உற்பத்தி வளர்ச்சி வேகம் 2015 இல் 3.4% ஒப்பீடாக 2016 இல் 3.1% வளர்ச்சியைச் சுட்டிநிற்கின்றது. வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் பொருளாதார செயற்பாடுகளில் வீழ்ச்சிகள், பிரதானமாக கனிப்பொருள்கள், எரிசக்தி, விவசாயம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மீள் சமநிலைப்படுத்தல் அடங்கலாக தெளிவாகக் காணக்கூடிய பல்வேறு துறைகளில் பணவிறக்கத்திற்கு உள்ளான பண்டங்களுக்கான விலைகளின் பெறுபேறாக அமைந்தது. பலதரப்பட்ட சவால்கள் எதிர்பார்க்கப்பட்டபோதும், உலக பொருளாதாரம் 2017 இலும் 2018 இலும் முறையே 3.5%, 3.6% வளர்ச்சியை எட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை பொருளாதாரம்

இலங்கை மத்திய வங்கியின் கருத்துப்படி 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 4.8% வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து, பல்வேறு உலக மற்றும் உள்ளூர் சவால்களுக்கு மத்தியில் இலங்கை பொருளாதாரம் 2016 இல் மெய்ப் பெறுமானத்தில் 4.4% வளர்ச்சியொன்றை அடைந்துள்ளது. 2015 இல் போன்றே 2016 இலும் பெரும்பாலும் நிகரான விவசாயம், கைத்தொழில்கள், சேவைகள் ஆகிய பிரதான மூன்று துறைகளும் இதற்கு பங்களிப்புச் செய்துள்ளன. சேவைத்துறை 2015 இல் அடையப்பெற்ற 56.6% க்கு நிகராக 2016 இல் 56.5% பங்களிப்பொன்றைச் செய்துள்ளது.

2016 இல் அடையப்பெற்ற பொருளாதார வளர்ச்சி அடிப்படையில் வருடத்தினுள் விரிவடைந்த முதலீட்டுச் செலவுகள் மூலமே முன்னெடுக்கப்பட்டது. பொருளா-தாரத்தின் உற்பத்தி ஆற்றல் உயர் இயலளவை நோக்கி இட்டுச்செல்வதற்கெனில், 2016 இல் இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றுகையின் ஆழமான கட்டமைப்புசார் பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

## உலக விமானசேவைத் துறை

விமானசேவைக் கைத்தொழிலை தாராண்மைப்படுத்துவதன் மூலம் போட்டிகர விலைகளில் விமான சேவைகளையும் பயண சேரிடங்களையும் பரந்ததொரு பரப்பினுள் தெரிவுசெய்வதற்கு வாய்ப்பு கிட்டியதுடன் பயணிகளுக்கும் சிறப்பான நன்மைகள் கிட்டியுள்ளன. தாராண்மைப்-படுத்தலானது விமானநிலையங்களுக்கும் நன்மைகளை கிட்டச்செய்துள்ளது. வர்த்தக மையங்கள், சுற்றுலா சேரிடங்கள், உள்ளூர் சமூகங்கள் போன்ற பிரிவுகளுக்கு நுழைவாயில்களாக சேவையாற்றுவதன் காரணமாக விமானநிலையங்கள், விமானசேவை பங்காண்மையினரும் உயர் போக்குவரத்து மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். விமானப் போக்குவரத்து பெறுமான சங்கிலித் தொடரும் உலக பொருளாதாரமும் தாராண்மைப்படுத்தல் மீதான பெறுபேறாக அமைந்த பெருக்க விளைவிற்குச் சான்றாக சுற்றுலா நடவடிக்கைகளில் அதிகரிப்பையும் எல்லை கடந்த முதலீட்டையும் வர்த்தகத்தையும் குறிப்பிடலாம். தாராண்மைப்படுத்தலின் பெறுபேறொன்றாக அடையப்பெற்ற பரந்தளவிலான அடைவுகளைப் பொருட்படுத்தாமல் ஆட்புல அரசியல் அச்சுறுத்தல்களும் பொருளாதார ஆபத்துக்களும் தொழிலுக்கு தலையிடியாக அமைந்தது. 2016 ஆம் ஆண்டில் அது பிரெக்சிட் (Brexit) அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அல்லது சிரியா உள்நாட்டுப் போர் ஆனபோதும் உலக பொருளாதாரம் விசேடமாக விமானசேவை துறையின் பொருளாதார நிச்சயமற்றதன்மை பற்றிய உணர்வு வியாபகம் அடைந்திருந்தது. பாதுகாப்பை நோக்குமிடத்து, தொழில் ஸ்தாம்பூல் அத்தாதூர்க் மற்றும் பிரசல்ஸ் விமானநிலையங்கள் அடங்கலாக நேரடி பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு உள்ளாகினது. இன்னும் தொழிலின் பாதக நிலைமைகளினால் அல்லது சூழ்நிலையினால் வழமைநிலைக்குத் திரும்புவதற்கான வாய்ப்பை எடுத்துக்காட்டி வருகின்றன. 2016 இல் வான்வழிப் போக்குவரத்திற்கான கேள்வியிலிருந்து இது துலாம்பரமாகின்றது.

## தொடுவானத்திற்கு அப்பால் நோக்குதல்

விமாநிலையங்கள் பற்றிய சர்வதேச கவுன்சிலின் (ACI) வருடாந்த வளர்ச்சி விகிதம் 4.9% என வர்ணித்து முன்வைத்த எதிர்வுகூறலின் அடிப்படையில் 2029 ஆம் ஆண்டில் வான்வழிப் போக்குவரத்து 14 பில்லியனைத் தாண்டி இரட்டிப்பாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பரீட்சார்த்த நன்நோக்குடைமையின் தவறின் பேரில் குறுகிய கால மற்றும் நடுத்தர கால அடிப்படையில் விமானப் போக்குவரத்திற்கான கேள்வியின் வளர்ச்சி நோக்கத்தை தடைப்படுத்தக்கூடிய தடங்கல்கள் சில உள்ளன. குறிப்பாக இவை அரசியல் அமைதியீனமும் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தலும் தொடர்ந்தும் பொருளாதார ஒருமையாக்கமும் வான் போக்குவரத்தைத் திறந்துவிடுவதன் மூலம் பின்னடையும் பாதுகாப்புக் கொள்கைகளுடன் தொடர்புடையதாகும். இறுதியாக, விமானநிலையங்கள் பற்றிய சர்வதேச கவுன்சிலின் உலக, நடுத்தர கால பயணிகள் முற்கோள் 2016 இலிருந்து 2000 வரையில் சுட்டிக்காட்டிய 33% வளர்ச்சியுடன் பெரும்பாலான தேசிய அரசாங்கங்கள் இன்றைய விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகளை விஞ்சிச்செல்லும் விமானப் போக்குவரத்துக்கான கேள்வியின் வேகமான உயர்நிலைக்கு முகங்கொடுத்தன. இந்த சவாலுக்கு நீண்டகால அடிப்படையில் முகங்கொடுப்பதற்கு முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதன்படி, பெரும்பாலான அரசாங்கங்கள் தேவைப்படும் வளங்களுக்காக தனியார் துறையிடமிருந்து தகவல்களைப் பெற்றன. விமானநிலைய சேவை விலை மட்டங்களின் அடிப்படையிலான ஒழுங்குறுத்துகை பணிச்சட்டத்தின் மாறாத்தன்மைப்படி நன்கு தூண்டப்பட்ட பொருளாதார ஊக்குவிப்புகளை நோக்கியதாக பயணிப்பதன்மூலம் தனியார் மூலதனத்திற்கு விமானநிலையக் கைத்தொழிலுக்கு உட்பாய்வதற்கு முடிந்தது. இந்த அணுகுமுறையின் மூலம் முதலீடுகள் கவரப்பட்டதுடன், அத்தகைய நீண்டகால மூலதன நுண்பாக நிதியங்களின் முழுதுமளாவிய ஆபத்து மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அது உதவியது. அதேபோல், ACI ஐ விளித்த பிரதான துறை யாதெனில், விமானநிலைய அருந்தலான இயலளவின் சிறந்த முகாமைத்துவமாகும். குறிப்பாக, இத்திசையின் பால் திரும்பியது கைத்தொழிலுக்கு முன்னுரிமையொன்றை வழங்கும் வேலைத்திட்டமொன்றுக்கு ஒதுக்கும் வினைத்திறனை முன்னேற்றும். விமானநிலைய இயக்குநர்கள் மிகமிக உலக வியாபகமான ஒரு வேலைத்திட்டத்திற்கு வழிகாட்டல்களின்படி நவீனமயப்படுத்தும் செயன்முறையொன்றுடன் இணைய வேண்டுமென ACI அடிக்கடி ஆலோசனை வழங்குகிறது.

**கூட்டு நோக்கை நோக்கியதான விமானநிலைய, விமானசேவைகள் பயணத்துடன் 2016 ஆம் ஆண்டில்**

**"16Es"**

**உடன் வளர்ச்சிப் பாதையில் காலூன்றி.....**

**1. வினைத்திறன் (Efficient) - வினைத்திறனுடன் வளர்ச்சிப்பாதையில் காலூன்றி...**

நவீன கூட்டிணைவான உலகில் அனைவரும் நேரம் போதாமை பற்றி முணுமுணுக்கின்றனர். “நேர முகாமைத்துவம்“ பற்றிய கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பயிற்சிகளையும் விரிவுரைகளையும் ஒழுங்குசெய்கின்றனர். எனினும், உரிய முறையில் நேரத்தை நிர்வகிப்பவர்கள் இல்லையெனலாம். இது குறிப்பானதும் நிலைபெற்றதுமாகும். இந்த எதிர்நிலையினுள் ஓர் அரச தொழில்முயற்சி என்ற வகையில் நாம் இயங்கும் அரசியல், பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, சூழலியல், பண்பாட்டு, சட்ட (Pesteel) சூழலில் வழங்கப்பட்டுள்ள வரையறுத்த காலத்திலிருந்து எம்மால் பெறக்கூடிய சிறந்தவற்றைப் பெற்று “எம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வதே” எம்மால் செய்ய முடிந்ததாகும். அதனை சாதிக்கக்கூடிய ஒரே வழி, எமது செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக மாற்றுவதே. வீண்விரயம், செயன்முறைகளினதும் அங்கீகாரமளிப்புகளின்போது ஏற்படும் தாமதங்கள், குறைபாடுகள், பின்னடைவுகள் முதலியவற்றைக் குறைப்பதும் இதில் அடங்கும். 2016 ஆண்டு முழுவதும் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள்(இலங்கை) கம்பனி வினைத்திறனானதாக இயங்குவதுடன் கிடைக்கத்தக்கதாகவுள்ள வரையறுத்த வளங்களைக்கொண்டு அதன் செயற்பாடுகளை நிர்வகிக்க முடிந்தது.

**2. பயனுறுதி (Effective) - பயனுறுதியுடன் வளர்ச்சிப் பாதையில் காலூன்றி...’**

இந்த அழிதகு மாற்றமடையக்கூடிய, நிச்சயமற்றதான, சிக்கலான, பொருள்மயக்கமான (“VUCA”) உலகில் பயனுறுதியடைவது மாத்திரம் போதுமானதன்று. ஆளொருவருக்கு வினைத்திறனான முறையில் பிழையான நோக்கங்களை அடைந்துகொள்ள முடியும். விளைவுப்பெருக்கம் முயற்சியின் பெறுபேறாகும். அரசுடைமையான சேவை வழங்குநர் ஒருவர் என்ற வகையில் விமானநிலைய, விமானசேவைகள் கம்பனி எதிர்பார்த்த பெறுபேறுகளுடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது. வினைத்திறனும் பயனுறுதியும் ஒன்றுக்கொன்று இணக்கப்பாடானதாக அமையும் அநேக சந்தர்ப்பங்கள் உள்ளன. “வினைத்திறன்” எப்பொழுதும் “பயனுறுதியுடன்” இணைந்துசெல்ல வேண்டியிருப்பதால், 2016 ஆம் ஆண்டில் இவ்விரு நோக்கங்கள் மூலம் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தனது விளைவுப்பெருக்கத்தை அதிகரித்துக்கொண்டது எவ்வாறு என்பது பற்றி நாம் அலசுவோம்.

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சூரிய சக்திப் பிறப்பாக்கம்**

எல்லா அளவுகளிலுமான விமானநிலையங்களில் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வும் சுற்றாடல் நட்புறவும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுவருகிறது. புவி வெப்பநிலையைத் தணிப்பதற்கு உதவும், சுற்றாடலுக்கு அதிசிறந்ததாக அமைவதால், சூரிய சக்தியைப் பயன்படுத்துவது குறித்த முற்செயற்பாடுகள் பிரபல்யமடைந்து வருகின்றன. மேலும், அது பணத்தை மீதப்படுத்துவதுடன், எரிசக்தி வழங்குநர்கள் மீது தங்கியிராமல் எரிசக்தியின் நம்பகத்தன்மையையும் எரிசக்தி பாதுகாப்பையும் வழங்குகிறது. புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்துவைத்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் சூரிய சக்தியைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இது 14 மில்லியன் மொத்த செலவிலான 75 கிலோ உவோற் (KWP) கொள்ளளவும் ஆயுட்காலம் 25 வருட ஆயுட்கால உத்தரவாதமும் கொண்ட வலையமைப்பாக்க சூரியசக்திப் பிறப்பாக்க கிரயத்தின் பேரில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாகும். பிற்கொடுப்பனவுக் காலம் 6 ஆண்டுகளாக அமையும் ஒரு முதலீட்டுடன் சராசரி மாதாந்த சேமிப்பு 2000,000 ரூபாவாகும்.

இன்று சராசரி எரிசக்திப் பிறப்பாக்கம் 10,000 உவோற் (KWP) ஆகும். முன்னோடிக் கருத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்ததுடன், விமானநிலைய, விமானசேவைகள் கம்பனி பிரதான பயணிகள் முனையங்களுக்கும் கட்டிடங்களுக்கும் மெகா உவோற் வீச்சில் சூரிய சக்தியை விஸ்தரிக்க தற்போது திட்டமிட்டுள்ளது. தற்போதும்



1

ஆண்டொன்றுக்கு 1 பில்லியன் ரூபாவாக அமை வருடாந்த எரிசக்திக் கிரயமொன்றைக் குறைப்பதற்கும் சூழலுக்கு காபன் விடுவிக்கப்படுவதைக் குறைக்கும் அதேவேளை முனையத்திற்கு விஸ்தரிக்கப்படும் கருத்திட்டம் காரணமாக எதிர்கால எரிசக்திக் கேள்வியைக் குறைப்பதற்கும் விமானநிலைய, விமானசேவைகள் கம்பனி எதிர்பார்க்கிறது.

**எரிசக்தி நுகர்வு (2001-2016)**




சிறப்பான விதத்தில் விமானநிலைய, விமானசேவைகள் வரலாற்றில் பயணி ஒருவருக்கான ஆகக்குறைந்த மின்சக்தி நுகர்வு 2006 இல் பதிவாகியுள்ளது. அது 4.09 கி.வோட் மணித்தியாலம் (KWT) ஆகும்.

பயணி ஒருவருக்கான மின்சக்தி நுகர்வு (2001 - 2016)




**சூரிய சக்தி பிறப்பாக்கப் பொறித்தொகுதி புள்ளிவிவரங்கள் - 2016**

| மாதம் | பிறப்பாக்கம் (கிலோ உவோற் மணித்தியாலம்) | விளைவு(ரூ) (கிலோ உவோற் மணித்தியாலம்) |
|---|---|---|
| ஆகஸ்ட் | 10,190 | 210,933 |
| செப்டம்பர் | 9,540 | 197,478 |
| அக்டோபர் | 10,940 | 226,458 |
| நவம்பர் | 8,680 | 179,676 |
| டிசம்பர் | 10,260 | 212,382 |



2




3

## செயலாற்றுகை அடிப்படையிலான வான்செலவு முறைமை (PBNS)

வான்செலவு முறைமைகளின் ஒழுங்குறுத்துகைக்கான அதிநவீன தொழில்நுட்பத் தீர்வொன்றாக வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரத்தில் 2016 ஆகஸ்ட் மாதத்தில் செயலாற்றுகை அடிப்படையிலான வான்செலவு முறைமையொன்று (PBNS) அமுல்படுத்தப்பட்டது. PBNS வான்செலவு உதவியுடன் இட உள்ளடக்கம் அல்லது சுயஉதவி ஆற்றல் எல்லையினுள் அல்லது இவ்விரண்டினதும் இணைக் கலப்புடன் விரும்பும் எந்தவொரு விமான ஓடுபாதையிலும் வான் செயற்பாடுகளுக்கும் வாய்ப்பளிக்கும் முறைமை அடிப்படையிலானதாகும். PBN கைந்நூல் (ICAO) ஆவணங்கள் 9613) இந்த வான்செலவு இயல் ஆற்றல்களை பொருள்கோடல் செய்து தராதரப்படுத்தியுள்ளது. வான்செலவு கட்டளை நியமங்கள் விமான இயக்குநர்கள் மற்றும் வான்செலவு சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கு வழிகாட்டும் பட்டி (menu) ஒன்று அதில் அடங்கும். அமுல்படுத்துவதை ஒன்றுகோர்க்கும் தீர்வுத்திட்டம் A37-11 இன்கீழான உடன்பாடுகளை விட மந்தகதியாக இருப்பதன் காரணமாக RNAV மற்றும் RNP வான் போக்குவரத்துச் சேவை பயண வழிகள் மற்றும் அணுகுமுறை செயல்ஒழுங்குகள் குறித்த PBN அமுல்படுத்தல், இன்று ICAO இன் ஓர் உயர் முந்துரிமையாக மாறியுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மொத்த எரிபொருள் சேமிப்பு 1,821,555 கி.கி. ஆக அமைந்ததுடன், காபனீரொட்சைட்டு (CO2) வெளியேற்றக் குறைப்பு 5,737,900 கி.கி. ஆக அமைந்தது.

எரிபெருள் சேமிப்பும் காபனீரொட்சைட்டு $CO_2$ வெளியேற்றக் குறைப்பும்




1. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய - சூரியசக்திப் பிறப்பாக்க பொறித்தொகுதியை அமுல்படுத்தல்.

2. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் செயலாற்றுகை அடிப்படையிலான வான்செலவு முறைமை (PBNS)

3. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பெயர்ச்சிப் பகுதிகளில் துப்புரவேற்பாட்டு வசதிகளை முன்னேற்றுதல

### பண்டங்கள், சேவைகளின் காலப்பொருத்தமான பெறுகை

மீளாய்வு ஆண்டில் மொத்த பெறுகைகளின் பெறுமதி 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பீடாக 5.2 பி.ரூ. வரை 90% ஆல் அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டில் வெளியேறும் பெயர்ச்சிப் பகுதியில் (Transit area) 18 கேள்விகள் பூர்த்திசெய்யப்பட்டன. பெயர்ச்சிப் பகுதியின் வாடகை வருமானம் 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 295 மி.ரூ. பெறுமானத்திற்கு ஒப்பீடாக 541 மி.ரூ. வரை அதிகரித்தமை இதன் பெறுபேறாக அமைந்ததுடன், அது 83% அதிகரிப்பாகும். முழு பெறுகைச் செயன்முறையும் கம்பனிக்கு நன்மைகளைக் கொண்டுவந்து வெளிப்படைத்தன்மையுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டுநெறிகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது.

### 3. அனுபவ முதிர்வு (Empathic) : அனுபவ முதிர்வின் ஊடாக வளர்ச்சிப் பாதையில் காலூன்றி...'

அனுபவ முதிரிவு என்றால் "மற்றையவரின் பாதணிகளுக்குள் புகுந்து அவர்கள் போல் நடக்க எத்தனிப்பதாகும்." (அதாவது, மற்றவரின் ஆளுமையில் புகுந்து மற்றையவரின் அனுபவத்தை அனுபவித்தலாகும்) இதன் மூலம் கருதப்படுவதாவது, ஏனையோரின் பார்வைக்கோணத்தில் பிரச்சினை அல்லது சிக்கலொன்றின் மீது பார்க்கும் ஆற்றலுள்ளது என்பதாகும். விமானநிலைய, விமானசேவைகள் கம்பனி தீவிரமாக பயணிகளின் சொகுசு, வசதி, வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு ஆகியன குறித்து கரிசனை கொண்டுள்ளது. ஊழியர் நலன்புரி, பயிற்றுவிப்புகள், பதவியுயர்வுகள் மற்றும் தொழிற்சங்கங்கள் தொடர்பான அலுவல்களில் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் முகாமைத்துவம் அனுபவ முதிர்வுடன் செயலாற்றும். உணர்வுபூர்வ விவேகத்தால் கிடைக்கும் அனுபவ முதிர்வு தற்கால சூழமைவில், ஆக்கபூர்வமான வியாபார தலைமைத்துவப் பண்புகளில் மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

### சர்வதேச நியமங்களுக்கமைவான பயணிகளுக்கான வசதியளிப்பு

துப்புரவேற்பாட்டு வசதிகளை முன்னேற்றுவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய பெயர்ச்சிப் பகுதியினுள் துப்புரவேற்பாட்டு வசதிகள் புதுப்பிக்கப்பட்டதுடன், 2016 அக்டோபர் 19 ஆந் திகதி பயணிகளுக்காக திறந்துவைக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான மதிப்பீட்டுக் கிரயம் 13 மில்லியன் ரூபாவாகும். கருத்திட்டத்தின் வேலைகள் யாவும்


1


2

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பயிற்றப்பட்ட மனிதவளத்தின் மூலம் பூர்த்திசெய்யப்பட்டதன் காரணமாக 4.3 மில்லியன் ரூபா தொகையை மீதப்படுத்தியதன் மூலம் கருத்திட்டத்திற்குச் செலவான கிரயம் 8.7 மி.ரூ. ஆக அமைந்தது.

கருத்திட்டத்திற்கான நிர்மாணிப்புகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லும்போது வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பல பிரிவுகளும் (அதாவது பொறியியல், கட்டிடக்கலை, நிலத்தோற்றவமைப்பு, நிதி மற்றும் வழங்கற் சங்கிலி முகாமைத்துவப் பிரிவு) தொடர்புபட்டது. இது வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பணியாள்தொகுதியின் குழுநிலைப் பணியொன்றாக முன்னெடுக்கப்பட்டது. உயர் முகாமைத்துவத்தின் முன்னெடுப்புடனும் வழிகாட்டலுடனும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகவும் இலக்கிட்ட திகதிக்கு முன்னரும் பூர்த்திசெய்து முழு கருத்திட்டத்தையும் வெற்றிபெறச் செய்ய முடிந்தது.

**ஊழியர்களின் நலன்புரியும் தொழில் வாழ்வுச் சமநிலையும்**

சுகாதார காப்புறுதித் திட்டம், தனிநபர் விபத்து காப்புறுதித் திட்டம், பணியாள்தொகுதி போக்குவரத்துச் சேவைகள், விடுமுறை பங்களா வசதிகள், பணியாள்தொகுதி குடிமனைகள், பணியாள் தொகுதியினருக்கான கடன்வழங்கல் திட்டம் போன்ற பல்வேறு நலன்புரி நன்மைகளை வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி முன்னெடுத்துச்செல்ல முடிந்தது. எமக்கு ஆண்டினுள் ஊழியர் கடன் தயார்படுத்தலுக்கான காலத்தை குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், ஊழியர் வசதி கருதி பணியாள்தொகுதியினருக்கான கடன்களை நேரடியாக வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்க முடிந்தது.

கம்பனியின் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் சகல தகுதிபெறும் ஊழியர்களுக்கும் வித்தியாசமான மூன்று திட்டங்களின்கீழ் உள்ளக மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் மருத்துவ உதவித் திட்டத்தின்கீழ் 3592 ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டனர்.

**அனுபவ முதிர்வுள்ள வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பணியாள்தொகுதியினரின் வெள்ள நிவாரணப் பணி**

கடும் காற்றும் பெரு மழையும் அடங்கலாக, 2016 நடுப்பகுதியில் ஏற்பட்ட பாரதூரமான காலநிலை நிலைமைகள் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் வெள்ளப்பெருக்கும் சுழல்காற்றும் மண்சரிவு ஏற்பட்டது. 2016 மே மாத பருவப் பெயர்ச்சியுடன் ஏற்பட்ட பயங்கர வெள்ளப்பெருக்கு காரணமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டுச் செல்ல நேரிட்டது. கொடைவழங்கும் பல நாடுகள் அவசர நிவாரண உதவிகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தன. வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பணியாள்தொகுதியினர் விமான நிலையத்தின் ஏனைய அக்கறையுள்ள ஏனைய தரப்புகளுடன் இணைந்து நிவாரணப் பொருள்களை விமானங்கள் மூலம் எடுத்துச்சென்று விரைவில் சரக்கு இறக்கும் சவாலுக்கு முகங்கொடுத்ததுடன், மிக விரைவாக பகிர்ந்தளிப்பதற்காக குறிப்பிட்ட நிவாரணப்பொருள்கள் சம்பந்தப்பட்ட முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதற்குப் புறம்பாக, அனுபவ முதிர்வுள்ள வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் ஊழியர்கள், வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மாலான எல்லா வழிகளிலும் தேவைப்படும் வசதிகளை செய்துகொடுத்தனர்.

1. கதிர்காமத்தில் விடுமுறை விடுதி வசதி.

2. வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியினால் தண்ணீர் போத்தல்கள் பகிர்ந்தளிக்கப்படல்.

3. விமான ஓடுபாதையில் ஹெலஜன் விளக்குகளுக்குப் பதிலாக LED பொருத்துதல்.

4. கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் முன்னிலையில் 2 ஆவது வேலைப்பகுதியின் 2 ஆம் கட்டத்திற்காக ஜைக்கா நிறுவனத்துடன் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்.

**4. ஊக்கமுடைமை (Energetic) - ஊக்கமுடைமை ஊடாக வளர்ச்சிப் பாதையில் காலூன்றி**

ஆசிய பிராந்தியத்தில் மிகவும் வினைத்திறனும் நட்புறவும்கொண்ட பிரதான விமானசேவைக் கேந்திரமாக மாறும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் முக்கிய அபிலாசையை அடைந்துகொள்வதற்காக தெளிவாகவே “மறைவான தூரநோக்கினை” விட “உயிர்ப்பான தூரநோக்கு” மூலம் அதனை உருவாக்குவதற்கு, பலமான உடல் மற்றும் உள சமநிலையொன்றைப் பேணி வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பணியாள்தொகுதியினர் அனைவருக்கும் பொதுவாக கணக்கிலெடுக்கக்கூடிய கூட்டுணர்வுள்ள தடலக விளையாட்டு வீரர்களாக மாறுவது அவசியமாகும். கூட்டுச் சூழமைவில் தைரியம், சுய உந்துகை, அமுல்படுத்தமுடியாத மற்றும் சவால்மிக்க குழுக்களின் வேலைகளின் ஊடாக பெருகிவரும். 2016 ஆம் ஆண்டு முழுவதும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பெரிதும் ஊக்கமுள்ளதாக விளங்கியது.

2016 ஆம் ஆண்டில் நடைபாதைகளைப் புதுப்பிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு மொத்த செலவு 39 மில்லியன் ரூபாவுடன் பௌதிக முன்னேற்றம் 30% பூர்த்திசெய்யப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்தப் பெறுமதி 190 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், முழுமைபெற்ற பின் இதனை முனையக் கட்டிடத்தின் அதிகூடிய பயணிகள் கேள்வியை வழங்குவதற்கான முக்கிய முன்னேற்றமொன்றாக விளங்கும். இதற்குப் புறம்பாக, சுங்கத்திற்கு புதிய கட்டிடப் பிரதேசமொன்று அடங்கலாக விமானப் பயணிகளை வேறுபடுத்துவதற்காக கண்ணாடிகள்



3



4

இட்டு பிரிவுகளாக்குவதன் மூலம் வெளிச்செல்லல் பரிசோதனை பகுதியை விரிவாக்குவது 21 மில்லியன் ரூபாவான மொத்த கிரயத்துடன் பூர்த்திசெய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வெளியேறும் முனையத்தின் ஓய்வறையின் நிர்மாணப் பணி 65 மில்லியன் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்பட்டதுடன், 2017 ஜனவரி 10 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டது. பிரதான கருத்திட்டங்களில் ஒன்றான பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய பயணிகள் முனையக் கட்டிடத்தின் புதிய உள்வருவோர் சாலையொன்றையும் இலத்திரனியல் வர்த்தகநிலையமொன்றையும் நிர்மாணிப்பதற்கு 374 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் கிரயமொன்றுடன் கருத்திட்டம் 2016 ஈற்றரைப்பாகத்தில் வழங்கப்பட்டதுடன், நிர்மாணப் பணிகள் 2017 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

குறிப்பாக, தீவிர கவனிப்பும் தீர்வுச் செயல்களும் தேவைப்படும் மிகவும் நெரிசலான பகுதிகளை மிக வசதியாகவும் சிறந்தமுறையிலும் கண்காணிப்புச்செய்யக்கூடிய வகையில் கடமை முகாமையாளர் அலுவலகத்திற்காக மொத்தம் 292 கமராக்களுக்கு கட்டமைப்புசார் முன்னேற்றமொன்றாக CCTV கமரா வசதி அளிக்கப்பட்டது.

**ஓடுபாதை ஒளியூட்டல் முறைமையை முன்னேற்றுதல்**

2016 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு விமானநிலையத்தில் சூரிய சக்தியில் இயங்கும் நுனு ஓடுபாதை ஒளியூட்டல் முறைமையொன்று நிறுவப்பட்டது. மதிப்பீட்டுக் கிரயம் 300 மில்லியன் ரூபாவுக்கு கூடுதலான கம்பி வடங்களுடன்கூடிய சம்பிரதாய ஹெலஜன் விளக்குகளுக்கு ஒப்பீடாக இக்கருத்திட்டத்தின் பெறுமதி 30 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதன் காரணமாக, இக்கருத்திட்டம் எல்லா வழிகளிலும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனிக்கு கிரயத்திலும் மின்சாரம் சேமிப்பிலும் உயர்ந்த விளைவுப்பெருக்கத்தைக் கொண்டுவந்தது.

சேதமாதல்களும் மின்னல் தாக்கமும் குறைந்த ஒரு முறைமையாதலால், இதன்மூலம் செயற்பாட்டு வினைத்திறனும் அதிகரிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி சமமான சூரிய சக்தி LED ஓடுபாதை ஒளியீட்டல் முறைமையொன்றை ஏனைய உள்நாட்டு விமான நிலையங்களிலும் நிறுவும் செயல்முனைப்பில் உள்ளது.

மேலும், கனடா நட்புறவு மாவத்தையில் நிறுவப்பட்டுள்ள 300 மின்விளக்குப் பொருத்துதல்கள் LED மூலம் பெறுகை செய்யப்பட்டதுடன், பழைய மற்றும் வினைத்திறனற்ற எல்லை வெளிச்ச விளக்குகள் யாவும் அகற்றப்பட்டன.

350 KVA UPS / ஜெனரேட்டர் கூட்டிணைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக ஓடுபாதையில் எரிசக்தி வழங்கல் முறைமையை CAT II வரை தரமுயர்த்தப்பட்டதுடன், விமானநிலைய வான்செலவுசார் உதவிகள் ஏற்படுவது வெற்று பூச்சியம் ஆக்கப்பட்டது. அதன் காரணமாக இலங்கை மின்சார சபையின் எல்லைகள் காரணமாக நெருங்குவதற்கோ அல்லது தரையிறக்குவதற்கோ தடங்கல் ஏற்படாது என்பதுடன், விமானங்களுக்கு தற்போது எல்லை தாண்டாமல் அடைவதற்கும் தரையிறக்குவதற்கும் முடியும்.

**ADS - B நில நிலையங்களை நிறுவுதல்**

220 மி.ரூ. மொத்தக் கிரயத்துடன்கூடிய இக்கருத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், கொழும்பு வான் தகவல் வலயத்தின் (FIR) பாதுகாப்பை மேம்படுத்துவதாகும். 2017 இல் உபகரணங்களைப் பரிசோதிப்பதற்கும் இயக்குவதற்கும் முடியுமான விதத்தில் 2016 ஆம் ஆண்டில் பூமியைத் தயார்படுத்தலும் நிறுவுதல்களும் முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் நிலையத்தின் பணியாள்தொகுதியினருக்கான குடிமனைகள்

மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச நிலையத்தில் 24 மணிநேரமும் வாரத்தில் 7 நாட்களும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஊழியர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு 2016 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டம் 63 மில்லியன் ரூபா மொத்த கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டது.

**உத்தேச மாபெரும் கருத்திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி ஊழியர்கள் 2016 ஆம்ஆண்டில் மிகவும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனும் ஊக்கத்துடனும் கடமை அலுவல்களில் ஈடுபட்டதன் பயனாக பின்வரும் விமான சேவை உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கூடுதல் உத்வேகத்துடன் முன்னெடுத்துச்செல்ல முடிந்தது.

**பண்டாரநயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் படிநிலை**

ஆண்டொன்றுக்கு மேலும் 9 மில்லியன் பயணிகளைச் சேர்ப்பிக்கும் நோக்குடன் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாம் முனையத்தை (T2) நிர்மாணிக்கும் உத்தேச இயலளவுக் கருத்திட்டம், எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக திட்டமிடப்பட்ட பாரிய கருத்திட்டங்களில் ஒன்றாகும். இது முக்கிய முன்னுரிமையாக இருந்ததுடன், கருத்திட்ட நடவடிக்கைகளை தடையின்றி ஆரம்பிக்க குறித்த கட்டமைப்புசார் சூழல் 2016 ஆம் ஆண்டு முழுதும் தயார்செய்யப்பட்டது. இக்கருத்திட்டம் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (JICA) ODA கடன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டதுடன், இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மேற்குறிப்பிட்ட மூலத் திட்டத்தை அமுல்படுத்தும் பொருட்டு உடன்படிக்கை (SL-P 104) JICA மற்றும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனிக்கும் இடையில் 2012 மார்ச் 28 ஆந் திகதி 28,969 மில்லியன் யப்பான் யென் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. மூலத்திட்டம் மாற்றமடைந்தவுடன் கிரயத்தை மாற்றியமைத்ததன் காரணமாக 45,428 மில்லியன் யப்பான் யென்னுக்கான இரண்டாவது நிவாரணக் கடன் உடன்படிக்கை (SLP- 114) வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி மற்றும் JICA க்கு இடையில் 2016 மார்ச் 24 அன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த இரண்டு மாடி முனையக் கட்டிடம் (T2) அண்ணளவாக 180,000 சதுர மீற்றர் பரப்பு கொண்டதாகும். இங்கு, உள்வரவும் வெளிச்செல்லவும் நெடுங்குத்தாகப் பிரிந்துள்ள முனையக் கட்டிடத்தில் 02 விமானப் பயணிகள் மண்டபங்கள் உள்ளன. அவை விமானப் பயணிகள் மண்டபம் 2, 3 எனப் பெயரிடப்பட்டுள்ளன. சூழல் நட்புறவான முனைப்புகளுடன் தடைகளின்றிய நுழைவிற்காக இது திட்டமிடப்பட்டுள்ளது. புதிய தொலைவான வானூர்தித் தளம் 23 விமானங்களை நிறுத்திவைப்பதற்கு வசதியானதாக, நிலத் துணை உபகரணங்களுடன்கூடிய (GSE) பாதைகளும் ஓடுபாதைக்கு 03 உப நுழைவாயில்களும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. முனையக் கட்டிடமானது மேலதிக 96 பரிசோதனைக் கருமபீடங்களையும் பயணப்பொதிகளுக்கான 8 தோல்பட்டை வார்களையும் பண்டங்களைக் கொண்டுசெல்லும் 7 செல்வழிகளையும் விமானத்திற்கு ஏறும் 28 பயணிகள் பாலங்களுடன் விமானப் பயணிகளுக்கான 16 இணைந்த நுழைவாயில்களையும் பேருந்துகளுக்கான 6 நுழைவாயில்களையும் கொண்டமைந்துள்ளது. திண்ம கழிவுப்பொருள் தகனகூடம், நீர் சுத்திகரிப்பகம், சாக்கடை துப்புரவாக்கல் பொறியமைப்பு என்பவற்றின் இயலளவை அதிகரிப்பதும் இதிலடங்கும்.

யப்பானிய நவீன தொழில்நுட்பத்துடனும் நுட்பமுறைகளுடனும் சுற்றாடல் நட்புறவான விமானநிலையம் பற்றிய கருத்துருவின் அடிப்படையில் இக்கருத்திட்டம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. நிலத்தோற்ற அலங்கார வேலைக்காக மழைநீரைச் சேகரித்தல், மலசலகூடங்கள் துப்புரவாக்கலுக்கான மலக்கழிவுகளை துப்புரவாக்கும் பொறியமைப்பு மூலம் நீரை மீள்சுழற்சி செய்தல், இலத்திரனியல் கதிர்களை பிறப்பிக்கும் சக்திப் பிறப்பாக்கம், சூரிய சக்தியை சேமித்தல், LED ஒளியூட்டல், எரிசக்தி வினைத்திறனான கண்ணாடிகளைப் பொருத்துதல் முதலியன இதிலடங்கும்.

இலங்கைக்கு சர்வதேசத்தின் கதவுகளை அகலத் திறந்துவிடும் இந்த சிறப்பான முனையக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு யப்பானிய நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. யப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் தொழில்நுட்ப பரிமாற்றத்தையும் பொருளாதார ஒத்துழைப்பையும் ஊக்குவிக்குமுகமாக JICA கடன், பொருளாதார ஒத்துழைப்பிற்கான விசேட நிபந்தனைகளின் பேரில் ஆண்டொன்றுக்கு 0.2% வட்டியும் 10 வருட சலுகை காலமும் உள்ளடங்கும் 40 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகின்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் புதிய பயணிகள் முனையக் கட்டிடத்தை திறந்துவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ப.ச.வி. நிலைய ஓடுபாதையின் மேற்பரப்பை பரப்புதல் மற்றும் அதுசார்ந்த வேலைகள்**

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கடந்த கால காலநிலைத் தரவு மீளாய்வின் அடிப்படையிலான ஓடுபாதையின் மேற்பரப்பு



பரப்பும் நடவடிக்கைகளுக்கு மிகவும் உசிதமான உலர் காலநிலை மாதிரிகள் கவனத்திலெடுக்கப்பட்டன. மேற்பரப்பை பரப்பும் வேலைகளுக்கான ஒப்பந்தம், கூட்டு முயற்சியொன்றான சீன தேசிய வான் தொழில்நுட்ப சர்வதேச குழுவிற்கும் (CATIC), சன்ஹாய் நிவ் ஈரா எயார்போர்ட் டிசைனிங் நிறுவனத்திற்கும் 2016 செப்டம்பர் மாதம் 02 ஆந் திகதி வழங்கப்பட்டது. இந்த கூட்டு முயற்சிக் கம்பனி சீன சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் கீழ் இயங்கும் புகழ்பூத்த ஒரு நிறுவனமாகும். ஓடுபாதையின் மேற்பரப்பு பரப்புவதுடன், “திட்டமிட்டு கட்டியெழுப்பும்“ அடிப்படையில் துணை வேலைகளைப் பூர்த்திசெய்வதே ஒப்பந்தமாகும்.

முழு கருத்திட்டத்திற்கும் ஏற்பட்ட செலவு (வரியும் தீர்வை வரிகளும் நீங்கலாக) 48 மில்லியன் ஐ.அ.டொலராகும்.

விமானநிலைய ஓடுபாதைப் பரப்பை ஒளியூட்டுவதுடன் இயைபுறுவதன் காரணமாக மாற்றப்பட்ட CODE F வரை தரம் உயர்த்தப்பட்டது. ப.ச.வி. நுழைவுப் பாதைத்தொகுதி ICAO இன்படி CAT II வரை தரம் உயர்த்தப்பட்டது. சகல புதிய பொருத்துதல்களும் எரிசக்தியைப் பொறுத்தளவில் வினைத்திறனான LED ஒளியூட்டல் தொகுதியாகும். ஓடுபாதையின் மேற்பரப்பு அசைவு செயற்பாட்டுத் தொகுதி, வாடகை வாகன வீதித் தொகுதி, புதிய வான் கள ஒளிக் கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வைத் தொகுதி ஆகிய எல்லா ஓடுபாதைக் குறியீடுகளும் ACI புதிய சேர்மானங்களின்படியானவையாகும். அதேபோல், ஓட்டத் தொகுதியின் இயல்திறன் அடுத்த 20 ஆண்டு கால வளர்ச்சிக்கு ஏற்றவாறு முன்னேற்றப்படுகிறது.

மேலும் A380 விமானங்களை தரையிறக்குவதற்கு வசதியானவாறு ஓடுபாதையின் அகலம் 15 மீற்றர்களினால் (இருபுறமும் 7.5 மீற்றர்கள் வீதம்) விஸ்தரிக்கப்பட்டுள்ளது.



1986 இல் கொழும்பு சர்வதேச விமானநிலைய அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கட்டம் 1 இன்கீழ் ஓடுபாதையை நிர்மாணித்து இயக்கிச்செல்லும் போது நெதர்லாந்து விமானநிலைய உசாவுநர்கள் (NACO) ஓடுபாதையின் திட்ட மற்றும் மேற்பார்வைக்கான உசாவுநர்களாக இருந்தனர்.

2017 தொடக்கத்தில் பகற்காலங்களில் குறைந்த போக்குவரத்து அளவையும் பயணிகளுக்கான அசௌகரியங்களையும் குறைப்பதற்காக ஓடுபாதை நடவடிக்கைகளுக்காக மு.ப. 08.30 மணி – பி.ப. 04.30 மணி வரை அது மூடப்பட்டிருந்தது.

**5. ஆர்வமிகுதி (Enthusiastic) - 'ஆர்வமிகுதி' ஊடாக வளர்ச்சிப் பாதையின் காலூன்றி..**

ஆராய்ச்சிகள் மூலம் தெரியவருகின்றவாறு உந்துதல் அடைந்த ஊழியர்கள் முயற்சியுள்ள ஊழியர்களாவர். அதேபோல், சில அமைப்புகள் உபாயமான முறையில் "ஒரு மணித்தியாலத்திற்கு சிரித்தல்களின்" அளவை கணக்கிடுவதன் பால் கவனம் செலுத்தியுள்ளன. ஆளொருவருக்கு கைவிடமுடியாத கீழ்மட்ட யதார்த்தங்கள் உள்ளன. ஒன்றில் ஆளொருவர் அவர் விரும்பும் வேலைகளைத் தேடிப் பெற வேண்டும். அன்றேல், அவர் செய்யும் வேலைகளை விரும்பி நேசிக்க வேண்டும். இது நிபந்தனையின்றிய வேலைகளுக்கான நேர்ப்படியான அணுகுமுறையாகும். தியடோர் ரூஸ்வெல்ட் கூறியவாறு "நீர் எங்கிருந்தாலும் உம்மிடமுள்ளவற்றுடன் உம்மால் முடிந்ததைச் செய்யும்".

கருத்திட்டம் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.)ப.ச.வி. பயணிகள் உள்வரும் முனையக் கட்டிடத்தில் புதிய குடிவரவுச் சாலையொன்றையும் இலத்திரனியல் வர்த்தக நிலையத் தொகுதியொன்றையும் நிர்மாணித்தல்374ப.ச.வி. பயணிகள் வெளியேறும் முனையக் கட்டிடத்தில் பொதுமக்கள் நுழைவு மண்டபத்தையும் பூங்காவின் கடைகளையும் விஸ்தரித்தல் 255 குடியகல்புப் பிரதேசம் - வெளிச்செல்லலை மீண்டும் நிறுவுதல் 400 அத்திடிய உயர் அதிர்வெண் (HF) பரப்பீட்டு இடத்தில் வானூர்தி HF பரப்பீடுகளுடன் அன்ரனா வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும் 320 ப.ச.வி. இன் பரிசோதனைப் பகுதியை விஸ்தரித்தல்1,000ப.ச.வி. இல் வான் போக்குவரத்து முகாமைத்துவ (ATM) தொகுதியை வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும் 320 வானோடல் தகவல் முகாமைத்துவ (AIM) தொகுதியை வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும். 260ப.ச.விமான நிலையத்தையும் ரத்மலானை தொடர்பாடல் தொகுதியையும் முன்னேற்றுதல் 420ப.ச.வி. இல் புதிய வானோடல் சேவைக் கட்டிடம்200ப.ச.வி. இன் கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் கபின் விஸ்தரிப்பு. 120வான் நடமாடும் தொடர்பாடல் நிலையத்தை (உயர் அலைவரிசை) நவீனமயப்படுத்தல்100

2016 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பணியாளர்கள் அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளை, புதிதுகாண்டல், உள்ளக முன்னேற்றங்கள். விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் இன்னும் ஏராளமானவை குறித்து அதிகளவு ஆர்வம் மேலிட்டவர்களாக உள்ளனர். வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியில் விளையாட்டு, நலன்புரி, கேளிக்கை நிகழ்ச்சிகள் கழகம் (SWRC) இனால் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், இரத்மலானை மற்றும் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றின் சகல பிரிவுகளில் ஆர்வமிக்க விளையாட்டுக்களில் வீரர்களை பங்குபற்றச்செய்து 2016 யூலை மாதத்தில் வெகு விமர்சையாக கிரிக்கட் ஆட்டப் போட்டியொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பளுதூக்கும் அணி தேசிய பளு தூக்கும் விளையாட்டில் கலந்துகொண்டதுடன், தங்கப் பதக்கம் உட்பட பல பதக்கங்களை வென்றெடுத்தது. ஹொக்கீ அணி 2016 இல் நடாத்தப்பட்ட வர்த்தக சேவை ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் துணைச் சாம்பியனாக தெரிவானது. 2016 இல் நடைபெற்ற 33 ஆவது வர்த்தக சேவை மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் எமது வீரர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்குபற்றியதும் அர்ப்பணிப்பும் காரணமாக அநேகமான நிறுவனங்கள் மத்தியில் 03 ஆம் இடத்தைப் பிடிக்க வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி துணிந்தது.

2016 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பாதுகாப்புச் சேவை பணியாள்தொகுதியினர் முக்கிய முக்கிய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டனர். பயணிகள் சம்பந்தப்பட்ட 1,042 சம்பவங்களில் 41 சம்பவங்களை வெளிப்படுத்த முடிந்ததுடன், அப்பதார்த்தங்கள் ஏனைய தொடர்புபட்ட விமானநிலையங்களில் கண்டுபிடிக்கப் படாத, தடைசெய்யப்பட்ட அல்லது மட்டுப்பாடு விதிக்கப்பட்ட பதார்த்தங்களாகும்.

**6. எதிர்பார்ப்பு (Envisioning) ஊடாக வளர்ச்சிப்பாதையில் நோக்கிய காலூன்றி.**

"கனவு காணுங்கள், செயல்படுங்கள். தோல்வி தழுவுங்கள். வெற்றி பெறுங்கள்". இவ்வாறானதொரு பழைய செப்புமொழி உள்ளது. எதிர்பார்ப்புடனேயே அனைத்தும் ஆரம்பிக்கிக்கின்றன. வோல்ட் டிஸ்னி கூறியவாறு "உமக்கு அதைப் பற்றி கனவு காண முடியுமாயின், அதனை நீர் நிறைவேற்ற முடியும்". தொலைநோக்கின் அடிப்படையிலான துரித வளர்ச்சியொன்றை நோக்கி விமான சேவைகளை விஸ்தரிப்பதே தற்போதுள்ள மிக முக்கிய தேவையாகும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி முகாமைத்துவம் உறுதியாகவே எதிர்காலத்தை நோக்குவதுடன், அதன் காரணமாகவே எதிர்காலத்தில் யதார்த்தங்களாக மாற்றப்படவேண்டிய பின்வரும் "கனவுக் கருத்திட்டங்களை" அடையாளம் கண்டுள்ளது.

அனைத்துக் கருத்திட்டங்களிலும்போல் எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு ஏலவே பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) |
|---|---|
| ப.ச.வி. பயணிகள் உள்வரும் முனையக் கட்டிடத்தில் புதிய குடிவரவுச் சாலையொன்றையும் இலத்திரனியல் வர்த்தக நிலையத் தொகுதியொன்றையும் நிர்மாணித்தல். | 374 |
| ப.ச.வி. பயணிகள் வெளியேறும் முனையக் கட்டிடத்தில் பொதுமக்கள் நுழைவு மண்டபத்தையும் பூங்காவின் கடைகளையும் விஸ்தரித்தல் | 255 |
| குடியகல்புப் பிரதேசம் - வெளிச்செல்லலை மீண்டும் நிறுவுதல் | 400 |
| அத்திடிய உயர் அதிர்வெண் (HF) பரப்பீட்டு இடத்தில் வானூர்தி HF பரப்பீடுகளுடன் அன்ரனா வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும் | 320 |
| ப.ச.வி. இன் பரிசோதனைப் பகுதியை விஸ்தரித்தல் | 1,000 |
| ப.ச.வி. இல் வான் போக்குவரத்து முகாமைத்துவ (ATM) தொகுதியை வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும் | 320 |
| வானோடல் தகவல் முகாமைத்துவ (AIM) தொகுதியை வழங்குதலும் பொருத்துதலும் செயற்படுத்துதலும். | 260 |
| ப.ச.விமான நிலையத்தையும் ரத்மலானை தொடர்பாடல் தொகுதியையும் முன்னேற்றுதல் | 420 |
| ப.ச.வி. இல் புதிய வானோடல் சேவைக் கட்டிடம் | 200 |
| ப.ச.வி. இன் கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் கபின் விஸ்தரிப்பு. | 120 |
| வான் நடமாடும் தொடர்பாடல் நிலையத்தை (உயர் அலைவரிசை) நவீனமயப்படுத்தல் | 100 |

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய உத்தேச விமானநிலைய ஹோட்டல்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 4 நட்சத்திர விமான நிலைய ஹோட்டல்கள் இரண்டிற்காக விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்கு விமான நிலையத்திற்கு அருகில் 2.5 ஹெக்டேயர் வர்த்தக நிலப் பிரதேசமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. கருத்திட்டம் ப.ச.வி.நி. உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அபிவிருத்திசெய்வதை நோக்காக் கொண்டுள்ளதுடன், விமான நிலையத்தினுள் விமானப் பயணிகளுக்கு விமானசேவை பணியாளர் தொகுதியினருக்கும் அத்தியாவசியமான வசதியான, சொகுசு வசதிகளை வழங்குவதும் அதன் மூலம் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனிகளுக்கு கூடுதல் வருமானமொன்றை ஈட்டிக்கொள்வதும் நோக்கங்களாகும்.

**7. மேம்படுத்தல்** ("Enhancing") **- 'மேம்படுத்தல்' ஊடாக வளர்ச்சிப் பாதையில் காலூன்றி'**

பிரபல மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர்களில் ஒருவரான மகாத்மா காந்தி ஒருமுறை "நீர் உலகைக் காண விரும்புகின்ற விதத்தில் மாற்றமடையும்" எனத் தெரிவித்தார். உண்மையில், உலகில் பெருவாரியாக வன்செயல்களும் ஒழுக்க பண்பாட்டு முரணான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுவதன் காரணமாக இன்று நிலவும் குழப்பநிலையிலான வியாபார முரண்படு மெய்ம்மையினுள் (யசயனழஒ) "மாற்றம்" இன்றியமையாதது ஆகிறது. ஆகையால், வேலைத்தளங்களில் "டைனோசர்களை விட டொல்பின் ஆவதற்கு" வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பணியாள்தொகுதிக்கு மாற்றமுறும் திசையில் அறிவையும் ஆற்றல்களையும் முன்னேற்றுவது அவசியமானதாக உள்ளது. கற்றல் என்பது இலக்குகளை அடைந்துகொள்வதை நோக்கிய சவால்மிகுந்த வேலைகளில் ஒரு பகுதியாக மாறியுள்ளது. நாம் கூர் அறிவினால் கூர்மையடைவது போட்டிக்கு முகங்கொடுக்கும் குறிக்கோளாகும். சோக்ரடீஸ் கூறியவாறு நாம் "பிறப்பிலிருந்து மரணம்" வரையில் கற்றுக்கொள்வோம். வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் முகாமைத்துவம் 2016 ஆம் ஆண்டில் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதில் கரிசனைகொண்டதுடன் மாத்திரமன்றி, ஊழியர்களின் புலமைசான்ற அறிவையும் ஆற்றலையும் முன்னேற்றுவதன் மீதும் தீவிர கவனம் செலுத்தியது.

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தமது உபாயமுறை ரீதியான பெறுமானங்களை உருவாக்கும் செயன்முறையை பணியாள்தொகுதியின் புலமைசான்ற ஆற்றல்களை தொடர்ந்தும் முன்னேற்றுவதன் ஊடாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றது. அதேபோல், கவர்ச்சி, தேர்வு, உந்துகை, அபிவிருத்தி, அமைப்பிற்குச் சிறந்த மனிதவளத்தை வைத்துக்கொள்ளல் என்பவற்றின் ஊடாக வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் மனிதவளக் குழாம் மேலும் முன்னேற்றப்பட்டது. மனிதவள முகாமைத்துவ (ர்சுஆ) மீளாய்வின்போது கலந்துரையாடப்பட்டவாறு தற்போதுள்ள திறன் வழங்கல்களின் மூலமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்றுவிப்புகளின் மூலமும் மனித மூலதனத்தின் மீது முதலீடு செய்வதன்மூலம் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பணியாள்தொகுதியின் அறிவையும் ஆற்றல்களையும் முன்னேற்றி வருகிறது.

**8. ஈடுபடுத்தல்** ("Engaging") **- 'ஈடுபடுத்தல்' ஊடாக வளர்ச்சிப் பாதையில் காலூன்றி.**

வியாபார வட்டத்தினுள் ஊழியர்களை ஈடுபடுத்தல் ஏலவே கொந்தளிப்பான ஒரு பதமாக மாறியுள்ளது. அது H3 சிறப்பான கூடுதலாக விமர்சையடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பணியாள்தொகுதியினால் கையாளப்பட்ட பின்வரும் சந்தர்ப்பங்கள் முக்கிய கருமங்களில் ஈடுபடும்போது அவர்கள் எந்தளவு திறமையானவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு சான்றாக அமையும்:

அ) 2016 ஆம் ஆண்டில் மிக முக்கிய 12331 ஆட்களையும் (VIP) அரசுத்தலைவர்கள் உட்பட 50 முக்கிய ஆட்களையும் (VVIP) கையாண்டது.

ஆ) ஆசிய-பசுபிக் பிராந்திய சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகங்களின் (DGCA) 53 ஆவது சம்மேளனம்.

இ) உலக சுகாதார தாபனத்தின் 69 ஆவது பிராந்தியக் குழுக் கூட்டம்.

ஊழியர் ஈடுபடுத்தலை மேலும் விருத்திசெய்தல்

மனிதவள மீளாய்வின்போது தெளிவுபடுத்தப்பட்ட புதிய ஊழியர்களுக்கான வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி ஆரம்ப மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், சிரேட்ட ஊழியர்களின் ஈடுபாட்டை திரட்டி வைப்பதற்கான "எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்திற்காக முன்வந்து அணிதிரளுங்கள்" நிகழ்ச்சித்திட்டம் ஊழியர் ஈடுபடுத்தல்களுக்கு சில உதாரணங்களாகும்.

12 பயணிகள் விமானங்களுக்கு மீள எரிபொருள் வழங்குவதற்கு தீக்காப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எரிபொருள் ஒழுகிச்செல்வதை தடுத்தல்கள் 10 இல் ஈடுபட்டுள்ளனர். மேலும், வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தீயணைப்புப் படையினர் விமானங்களை 15 திடீர் சந்தர்ப்பங்களுக்கு பதில்குறிப்பு காட்டியிருப்பதுடன், 302 பயணிகளுக்கு தீயணைப்பு அம்பியூலன்ஸ் வண்டிச் சேவைகளை வழங்கியுள்ளனர்.

இரத்மலானை விமானநிலையத்துடன் இணைக்கப்பட்ட தீயணைப்புப் படையினர், 2016 மார்ச் 07 ஆந் திகதி மொரட்டுவை சொய்சாபுர வீடமைப்புத்தெகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு தலையிட்டதுடன், ஆண்டினுள் 12 பயணிகளுக்கு அம்பியூலன்ஸ் வண்டிச் சேவைகளை வழங்கியுள்ளனர்.

மத்தல விமானநிலையத்துடன் இணைக்கப்பட்ட தீயணைப்புப் படையினர், 22 பயணிகள் விமானங்களுக்கு மீண்டும் எரிபொருள் வழங்குவதற்கு தீயணைப்பு காப்பை வழங்கியதுடன், பயணி ஒருவருக்கு அம்பியூலன்ஸ் சேவையை வழங்கியுள்ளனர்.

**9. ஆய்வுப்பயணம்**"Exploring"**- ஆய்வுப்பயணம் ஊடாக வளர்ச்சிப்பாதையில் காலூன்றி நோக்கி பின்தொடர்ந்து.....**

இன்றியமையாதவாறு இது ஆக்கபூர்வமாயுள்ளதை, எல்லைக்கு வெளியே சிந்திப்பது தொடர்பாகும். எமது நீண்டகால அனுபவமுள்ள எழுத்தாளரான குமாரதுங்க முனிதாச நீண்ட காலத்துக்கு முன்பு கூறியது இதன் மூலம் எமக்கு நினைவூட்டுகின்றது."புதுமைப்படுத்தல் இல்லாத ஒரு தேசம் வளமையுறுவதில்லை" ஆனாலும் யாசகம் கேட்டு பிழைக்க முடியாததனால் ஒப்பாரிவிட்டு கிடந்துள்ளது. புதுமைப்படுத்தல் உலகளாவிய ரீதியிலான போட்டியை வெற்றிகொள்வதற்காக அதிகளவு அமைப்புகளுக்கு வழி திறக்கப்பட்டுள்ளது. சம்சுன்ங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி கூறியவாறு "புதுமைப்படுத்தல் நாளொன்றின் 24 மணித்தியாலங்கள் மற்றும் வாரத்தின் 7 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மீளாய்வு வருடத்துக்குள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பதவியணி தமது விமானநிலைய தொழிற்பாடுகள் - "தனித்தன்மை வாய்ந்த பெறுமதிகள் ஆய்வுபொருள்" (UVP) தோற்றுவிக்க முடியுமான வகையில் நிறைவேற்றும் இயலுமைகள் தொடர்பாக சகல துறைகளும் ஊடாக ஆராய்தல். பின்வரும் உள்ளக அபிவிருத்திகள் இதற்காக நிரந்தர சான்றுகளை வழங்குகின்ற உதாரணங்களில் சிலவாகும்.

அ) ஓய்வறை முகாமைத்துவ முறைமை

பயணிகளின் அனுமதிச் சீட்டுக்களில் உள்ள தகவல்களை ஸ்கான் செய்து செயற்படுத்துவதன் ஊடாக வரவேற்பு மேசையில் உள்ள வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள்(இலங்கை) கம்பனி ஊழியர்களை மேலும் வினைத்திறனுடன் தமது பணிகளை மேற்கொள்ள கூடியதாக்குதல். ஓய்வறை செயல்பாடுகளை முகாமை செய்வதுடன் தேவையான முகாமைத்துவ தகவல்களை பெறக்கூடிய செயல்கூறையும் இது கொண்டுள்ளது.

ஆ) பாதீடு முகாமைத்துவ முறைமை

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள்(இலங்கை) கம்பனி மூலதன மற்றும் செயல்பாட்டு பாதீடுகளை தயாரிப்பதிலும் ஒதுக்கீடு செய்தலிலும் கண்காணிப்பதிலும் உதவுதல்.

இ.) நீற்றுலை முகாமைத்துவ முறைமை

நீற்றுலை பாவனைக்கான கட்டணங்களை கணிப்பீடு செய்தல்.

ஈ) பின்னூட்டல் முறைமை (கழிவறை)

கழிவறை,பாதுகாப்பு சாவடிகள், பயணிகள் உதவி மையங்களில் காணப்படும் கியூ.ஆர் குறியீடுகளை ஸ்கான் செய்வதன் மூலம் பயணிகள் தமது பின்னூட்டலை அளிக்க முடியும் . கண்காணித்து புள்ளிவிபரவியல் அறிக்கைகளை உருவாக்க மேற்பார்வையாளர்களுக்கு இது இடமளிக்கிறது.

உ) ஊழியர் வரவு முறைமை

கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்தவும் தேவையான வரவு அறிக்கைகளை முகாமையாளர்களால் உருவாக்க முடியும்.

ஊ) விமானநிலைய விருந்தினர் திருப்தி கணிப்பாய்வு முறைமை (ஏஜிஎஸ்எஸ்)

விமானநிலைய விருந்தினர் திருப்தி கணிப்பாய்வு முறைமையின் கையடக்க வடிவம்(அன்ரோயிட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளின் பின்னூட்டலை பெறுகிறது. இந்த முறைமை பயணிகள் தமது பதில்களை அனுப்பகூடியதாக வினாக்களை வழங்குவதுடன் பின்னூட்டலானது பயணிகளின் வசதிகள், சௌகரிகம், பாதுகாப்பு முதலியவற்றை மேம்படுத்த பயன்படுத்தப்படும்.

எ) வாகன தரிப்பிட முறைமை

வாகன தரிப்பிடத்திற்கான நுழைவு அனுமதி டிக்கெட்களை வழங்க உதவுவதுடன் தேவையான புள்ளிவிபரங்களையும் வழங்குகிறது.

ஏ) அழைப்பு/வரவேற்பு பலகை முறைமை

நுழைவாயில் டக்சி நிலையங்களில் அழைப்பு.ஃ.வரவேற்பு பலகைகளுக்கான டிக்கட்டுக்கள் வழங்கலை செயற்படுத்துதலும் அறிக்கை உருவாக்கமும்.

ஐ) இடது பயணப்பெட்டி முறைமை மற்றும் ஒப்பந்த பயணப்பெட்டி முறைமை

பயணிகளின் பயணப்பெட்டியை கையாளும் செயற்பாட்டை இலகுபடுத்துகிறது . இயக்குநர் மேலும் வினைத்திறனுடன் பயணப்பெட்டியை பெற்றுக்கொள்ளவும் வழங்கவும் முடிவதுடன் அறிக்கை உருவாக்கலுக்கும் அனுமதிக்கிறது.

ஒ) சுகாதார காப்புறுதி திட்டம்

ஊழியர்களின் சுகாதார காப்புறுதியை கையாளுவதற்காக வடிவமைக்கப்பட்டது. ஊழியர் சேர்ப்பு, உள்ளக / வெளியக கோரிக்கைகள், கடுமையான நோய் கோரிக்கைகள், திட்ட முகாமைத்துவம், வைத்தியசாலை கடிதங்கள் மற்றும் அறிக்கையிடல் என்பன இந்த முறைமையின் முக்கிய அம்சங்களாகும்.

ஓ) விமான தகவல் முகாமைத்துவ முறைமை ( பிட்ஸ்)

பயணிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் வசதிக்காக கொழும்பு விமான நிலையத்தின் தற்போதைய விமானங்கள் தொடர்பான தகவல்களை முகாமை செய்தலும் காண்பித்தலும்.

## புதிய வருமான வாய்ப்புக்களை ஆராய்தல்

### புறப்படும்/மாறும் பகுதிகளில் புதிய கடைகள் மற்றும் உணவகங்கள்

வாழ்வின் அனைத்து தரப்பினரையும் சேர்ந்த பயணிகளின் தேவையை பூர்த்தி செய்ய குறிப்பாக இந்தியா மற்றும் சீனா முதலிய நாடுகளின் வேகமாக வளர்ந்து வரும் செழிப்பான மத்தியதர மக்களை கொண்ட வளர்ந்து வரும் மக்கள்தொகை வடிவங்களை கருத்தில் கொண்டு புதிய கடைகள் மற்றும் உணவகங்கள் புறப்படும்/மாறும் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டன.


1



2

சலுகை அமைவிட மாற்றங்கள் :

புறப்படும்/ மாறும் பகுதியில் உள்ள கடைகள் தற்போது ஒத்த சலுகைகளை வழங்கக்கூடியதாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளதுடன் புதிய வணிக அமைவிடத்தின் சுற்றாடல்

பயணிகளை மிகவும் கவரும் வகையில் சலுகையாளர்-களுக்கும் நன்மையளிக்கும்.

1. ஐநா செயலாளர் நாயகம் திரு. பான் கி மூன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)கம்பனியால் வரவேற்கப்பட்டார்.

2. கழிவறை பின்னூட்டல் முறைமை.

3. மாறும் இடத்தில் புதிதாக திறக்கப்பட்ட தேநீர் கடை.

4. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - கழிவு நீர் மறுசுழற்சி வசதி.

புதிய முயற்சிகள்

சேவா பிரணாம 2016

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை)கம்பனி வரலாற்றில் முதல் தடவையாக 2016 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற ஊழியர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பினை அங்கீகரிக்கும் நோக்குடன் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. மனித வள முகாமையாளரின் கீழ் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

### 10. அதிகாரமளி - வளர்ச்சிப் பாதையில் காலூன்றி 'அதிகாரமளித்தல்'.

"சிறந்த தலைவர்கள் சிறந்த வளர்ப்பவர்களாவர்" என பல ஆண்டுகளுக்கு முன்பாக லாவோ சூ கூறினார். அத்தகைய மாற்றம் அதிகாரமளிப்பதன் மூலமாக மட்டுமே சாத்தியமானது. இது அதிகாரமளித்தலையும் பொறுப்பு கூறத்தக்கதாக மற்றவர்களுக்கு பணிகளை கையாள ஒதுக்குதலையும் உள்ளடக்கியது. இன்னுமொரு வகையில் இது அபிவிருத்தியில் பங்கேற்கிறது. அதிகாரமளித்தலை பொறுத்தவரை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி நிறுவனம் அதனது சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கீழ் கவரக்கூடிய விதத்திலான குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.

அரச நிறுவன நோக்கம் (அ.நி.நோ)

2017 - 2019 காலப்பகுதியில் இலங்கையின் அரசாங்கத்திற்கும் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)கம்பனியிற்கும் இடையில் முன்மொழியப்பட்டுள்ள நிறுவன நோக்க அறிக்கை "வலுவூட்டல் அரங்கில்" முக்கிய மைல்கற்களுள் ஒன்றாகும். 2016 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக சபையினரது அடைவுகளை எளிதாக்க தேவையான போதிய மற்றும் நியாயமான நிர்வாக மற்றும் சுயாட்சி மிக்க செயற்பாடு தேவைப்படுவதை அங்கீகரிக்கும் நோக்குடன் இதற்கான அடித்தளம் இடப்பட்டது. இந்த அதிகாரமளிக்கும் வழிமுறை பொது வளங்களின் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதோடு முடிவுகளுக்கும் பொறுப்புக் கூறும். இதன் பிரகாரம் மார்ச் 15, 2017 அன்று, நிதி அமைச்சின் செயலாளர், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தலைவர் ஆகியோர் மேற்கூறப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.

### 11. சகிப்பு - வளர்ச்சிப் பாதையில் காலூன்றி 'சகித்திருந்தல்'.

இவை யாவும் தொடர்ச்சி பற்றியது. வணிக தோல்விகளின் மத்தியில் பேண்தகுமை ஒரு முக்கிய காரணியாக மாறிவிட்டது. உலகம் முழுவதும் காணப்படும் குழப்பமான காலநிலை அமைப்பு சூழலுக்கு உகந்த வேலை நடைமுறைகள் தொடர்பில் கூடிய கவனம் தேவை என்ற கடுமையான நினைவூட்டலை வழங்கியுள்ளது. இலாபம், மக்கள் மட்டுமல்லாது சூழலும் முக்கியமானதே. இந்த விடயத்தில் 2016 ம் ஆண்டிலும் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் அதன் உத்வேகத்தை தொடர்ந்தது .

கூட்டாண்மை சமூக பொறுப்பு (கூ.ச.பொ)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சமூக அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து 2016 ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவுவதன் மூலமாக கூ.ச.பொ செயற்பாடுகளில் ஈடுபட்டது. போபிட்டிய பமுனுகம மகாவித்தியாலயத்தில் 574 மாணவர்களுக்கு குடிநீர், உலர் உணவு, பாடசாலை உபகரணங்களும் அரநாயக மண்சரிவால் பாதிக்கப்பட்ட 62 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்களும் நன்கொடையாக வழங்கப்பட்டது.



3


4



1



2

## சுற்றாடலுக்கு உகந்த வளிமண்டலமும் பச்சை வாயு கொள்கையும்

கழிப்பறை மற்றும் நிலம்சார் வசதிகளுக்கு நீர் விநியோகிப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு நீர் மறுசுழற்சி வசதி முன்மொழியப்பட்டது.இந்த முன்மொழியப்பட்ட முறைமை மாசுபடுவதை தடுக்கும் அதேநேரம் முக்கிய சுற்றுச்சூழல் அமைப்புகளிலிருந்து தண்ணீர் திசை திருப்பப்படுவதை குறைத்து பற்றாக்குறை பகுதியில் நீரை பாதுகாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய கார் தரிப்பிடம் மற்றும் வி.ஐ.பி பிரதேசங்களில் கழிவுநீர் நிரம்பி வழிவதை தடுக்க பல்வேறு தானியங்கு கழிவுநீர் நிலத்தடி பம்ப் குழிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

பயணிகள் முடிவிட கட்டிடம் மற்றும் ஏனைய கட்டிடங்களில் உள்ள மத்திய வளி சீராக்கி முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக கட்டிடங்களுக்குள் பச்சைக் காற்று கொள்கையை வழங்க வளி சீராக்கி முறைமைகளின் நம்பகத்தன்மையை மேம்படுத்த முன்மொழியப்பட்டுள்ளன.

## கூட்டாண்மை சமூக பொறுப்பு செயற்திட்டங்கள்- மகிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையம்.

மகிந்த இராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஒருகென்கல ரஜமகா விகாரை சில மைல்கள் தொலைவில் காணப்படுகிறது. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்திற்கு அருகே உள்ள பாழடைந்த கிராமிய கோயில் இதுவாகும் .

குறைந்த வசதிகள் மற்றும் மிகுந்த சிரமங்களுடன் வறிய கிராமவாசிகளுக்கு தங்கள் வாழ்க்கைப் பாதையை ஒளியேற்ற இது உதவுகிறது. கோயிலை குறிப்பிடத்தகு நிலைக்கு அபிவிருத்தி செய்து அவர்களது வாழ்கைக்கு ஒளியேற்றி தோள் கொடுத்தல் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் முக்கிய கூட்டாண்மை சமூக பொறுப்பு திட்டங்களில் ஒன்றாகும்

பின்வருவன வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டன.

- தற்போதுள்ள “புது மேதுற” வை வர்ணம் பூசி மேம்படுத்தல்.
- சதர மகா தேவாலயம் மற்றும் ஸ்தூபியை கட்ட ஆரம்பித்தல்
- வீதி விளக்குகளுடன் கோவிலுக்கு செல்லும் பாதையை திருத்தி மறுசீரமைத்தல்.
- மின் அமைப்பு, மின்விசிறி முதலியவற்றை உள்ளடக்கி சுவர்களுக்கு பூச்சு பூசி “தர்ம சாலவை” யை பூரணப்படுத்தல்.

மற்றொரு கூட்டாண்மை சமூக பொறுப்பு நிகழ்ச்சியாக 2016 மார்ச் 17 ஆம் திகதி மஹிந்த இராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் இரத்த தான முகாம் நடத்தப்பட்டதுடன் இதுபற்றிய விபரங்கள் ம.வ.மு இல் சேர்க்கப்பட்டுள்ளன.

## 12. தழுவல் -வளர்ச்சிப் பாதையில் காலூன்றி ‘அரவணைத்தல்’

2016 ஆம் ஆண்டில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி பல்வேறு கற்கைகளுக்குரிய பணிக்குழாத்தினைச் சேர்ந்த 131 உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கியது. அவர்கள் 23 நாடுகளில் நடாத்தப்பட்ட 72 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றதுடன் பெறுமதி வாய்ந்த அறிவு மற்றும் வெளிப்படுத்தல்களை நிறுவனத்திற்குப் பெற்றுத் தந்தார்கள். பணிக்குழாத்தின் அனைத்து உறுப்பினர்களும் கம்பனியினால் வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் நிறுவன ரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டனர். குறித்த ஆண்டின் போது ஊழியர் ஒருவருக்கு 11.7 மணி நேர பொதுவான பயிற்சியினை வழங்கி 2016 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட பிரதான பயிற்சி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் முடிந்துள்ளது.

1 விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி உத்தியோகத்தர்கள் பனாமா மாநாட்டின் போது

2 தீயணைப்பு உத்தியோகத்தர்களுக்கான நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி

1


2




1



2

**2016-12-31 ஆம் திகதியில்**
**ஊழியர்களின் வயதுப் பகுப்பாய்வு**

3810 ஒட்டு மொத்த ஊழியர் தொகையினர் 4 வயதுத் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்




**செயலாற்றுகையை முகாமை செய்தல்**

குறித்த ஆண்டில் நிறைவேற்றுத்தரம் சாராத தரங்களுக்காக புதியதொரு செயலாற்றுகை முகாமைத்துவ முறைமை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் வெற்றிக்காக பாரியளவு பங்களிப்புச் செய்த முகாமைத்துவத்தினரின் உதவியுடன் ஊழியர் இயக்கங்களுடனும் தொழிற் சங்கங்களுடனும் எப்பொழுதும் உரையாடல்களை மேற்கொண்டு பணிக்குழாத்தினருக்கு அறிவூட்டப்பட்டது. “180 பாகை மதிப்பீட்டு முறைமை” ஆக பிரசித்தமடைந்த முறைமை மூலம் மதிப்பீட்டு நேர்காணல்களின் போது முகாமைத்துவத்தினருடன் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட உரையாடலின் ஊடாக கூட்டுச் சேர்வதற்கு ஊழியர்களுக்கு முடிந்ததுடன் ஒவ்வொரு பிரிவினதும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தனியான இலக்குகளை வகுக்க முடிந்தது. இதற்காக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியானால் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ தரங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட செயலாற்றுகை முகாமைத்துவ முறைமையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு தைரியமூட்டப்பட்டு குறித்த ஆண்டில் படிப்படியாக நிறுவப்பட்டது.

**ஊழியர் பணிக்கொடை நன்மைகள்**

ஊழியர்களுக்கான நன்மைகள் தொடர்பான சர்வதேச நிதி அறிக்கையிடல் தரங்களுக்கு ஏற்றவாறு 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பணிக்கொடையினை கணக்கிடலானது சுயாதீன காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட காப்பீடு மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

பணிக்கொடைக்கான ஒதுக்கீடு 2.6 மில்லியன் ரூபாவாக இருந்தது. தொழிலிலிருந்து விலகிச் செல்லும் போது அல்லது ஓய்வு பெறும் போது இறுதி நன்மையினைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்காக பணிக்கொடைப் பொறுப்பிற்குப் பொருந்தும் வகையில் நீண்டகால படுகடன்களின் மீதான ஒரு முதலீட்டினை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி உருவாக்கியுள்ளது. கணக்கிடலுக்காகப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 22ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஊழியர்களை ஈடுபடுத்துவதை ஊக்குவித்தல்**

ஊழியர்களை ஈடுபடுத்தல் உருவாக்களின் போது விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான ஆரம்ப நடவடிக்கைகளுள் முதலாவதாக அமைவது திசையமைவு மற்றும் தூண்டுமுறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முதலிடம் பெறுகிறது. இது விமான நிலையத்துடன் இயைபாக்கமடையும் ஒரு சுற்றுப்பயணம் உள்ளிட்ட சாதாரணமாக மூன்றுநாள் வேலைத்திட்டம் ஆகும். இந் நிகழ்சித்திட்டமானது புதிய ஊழியர்களுக்கு நிறுவனத்தின் இதயத் துடிப்பினை உணர்த்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆகும்.

சிரேஷ்ட ஊழியர்களின் ஈடுபாட்டினை ஒன்றுதிரட்டி வைப்பதற்காக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி இரண்டு கட்டங்களை உள்ளடக்கிய “நாம் எதிர்பார்க்கும் மாற்றமாக நீங்கள் அமையுங்கள்” நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாவது வகுப்பறை விரிவுரையின் போது ஊழியர்கள் தற்போதைய விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வார்கள். இதன் இரண்டாவது கட்டம் விமான நிலைய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு அறிவுரைகள் வழங்கும் விமான நிலையத்தை உள்ளடக்கியவறு அமையப் பெற்ற ஒருநாள் சுற்றுப் பிரயாணம் ஆகும். இது எதிர்வரும் ஆண்டுகளில் கூடுதல் எண்ணிக்கையிலான ஊழியர்கள் மத்தியில் பரவச் செய்ய முடியுமான எல்லோருடைய ஆதரவைப் பெற்ற ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆகும்.

வரலாற்றில் முதல் தடவையாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி நீண்ட காலம் முன்மாதிரியான சேவையினைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற 62 ஊழியர்களை






1 விமான நிலைய இயைபாக்கமடையச் செய்யும் சுற்றுப் பயணத்தின் முதலாவது குழுவினர்

2 “சேவைப் பாராட்டு 2016” நிகழ்சித் திட்டத்தில் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற ஊழியர்கள்

3 உப தலைவர் சிங்கப்பூரில் நடைபெற்ற விழாவின் போது வழங்கப்பட்ட “ஆசியாவின் சிறந்த சேவைத் தூதுவர் 2016 விருது” பெற்றுக் கொண்ட போது

4 விமான நிலைய மற்றும் விமான சேவைகளட கம்பனியின் தலைவரினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள் கையளிக்கப்பட்ட போது

கௌரவிப்பதற்காக “சேவைப் பாராட்டு 2016” என்ற தொனிப் பொருளின் கீழ் பாராட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை முன்னெடுத்தது. விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தலைவர் கூட்டத்தில் உரை நிகழ்த்தியதுடன் ஓய்வு பெறும் ஊழியர்களின் சலைக்காத பங்களிப்பிற்காக கம்பனியின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

### ஊழியர் நலன்புரி தொடர்பாக கவனம் செலுத்துதல்

2016 ஆம் ஆண்டு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் தனது ஊழியர்கள் பேணிப் பாதுகாக்கப்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டிய சிறப்பான உதாரணங்கள் நிறைந்த மற்றும் ஓர் ஆண்டாக அமைந்தது. விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியில் ஊழியர்களைப் பேணிப் பாதுகாக்கும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் பல வருட காலமாக நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் சுகாதார வசதிகள் தொடர்பான திட்டங்கள், பிணிக்குழாத்தினருக்கான போக்குவரத்து, பணிக்குழாத்தினருக்கான கடன் திட்டம், சுற்றுலா விடுதி வசதிகள், பணிக்குழாத்தினருக்கான வீட்டு வசதி மற்றும் மரணச்சடங்கு உதவித்திட்டம் ஆகியன உள்ளடங்கும். அனைத்து முறைமைகளும் குறித்த ஆண்டில் பயன்படுத்துவோருக்குச் சதகமான மற்றும் செயற்திறனுடையதாக ஆகக் குறைந்த நேரத்திற்குள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் பாவனைக்காக மலிவு விலையில் கதிர்காம விடுமுறை இல்லத்தினை ஆரம்பித்து வைத்தமை இதற்கான மற்றுமொரு உதாரணமாகும்.

குடும்ப அங்கத்தவர்கள், விசேடமாக எமது பணிக்குழாத்தினரின் பிள்ளைகள் தொடர்பாகக் காட்டும் ஆர்வம் ஊழியர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமானதொரு அம்சம் ஆகும். ஆகவே 2016 ஆம் ஆண்டு முதன் முறையாக க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த(உ.த) பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்கு “பரீட்சை தொடர்பான அழுத்தத்தை குறைத்தல்” தொடர்பான ஒரு நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்ட எமது ஊழியர்களுக்குத் தேவையான நிவாரணங்கள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு முகாமைத்துவத்தினர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டது. ஊழியர்களைப் போன்றே தொழில் சங்கங்களும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்காக தன்னீர் போத்தல், உலர் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியவசியப் பொருட்களை சேகரித்தும் அவற்றை விநியோகித்தும் அவர்கள் தமது ஒத்துழைப்பினை வழங்கினார்கள். இந்த மனிதாபிமான உதவிகள் சுமார் 574 மாணவர்கள் மற்றும் அரநாயக்காவில் 62 குடும்பங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

### சிவில் விமான சேவைகள் பயிற்சி நிலையத்தின் உள்ளக பயிற்சி

1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிவில் விமான சேவைப் பயிற்சி நிலையமானது விமான நிலைய மற்றும் விமான சேவை தொடர்பான பயிற்சியளிக்கும் ஆயுதமாகும். தற்போது விமான மற்றும் விமானம் அல்லாத நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி அதன் பூரணமான அங்கத்துவத்தினைப் பாதுகாத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு தொடர்பில் நடாத்தப்பட்ட மொத்த பயிற்சிக் காலம் 46,596 மணித்தியாலங்கள் ஆகும். இதில் 32,592 மணித்தியாலங்கள் கம்பனியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி என்பதுடன் எஞ்சியது வர்த்தக பயிற்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இலகு திறமை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 236 ஊழியர்களுக்கான 11 குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இதில் உள்ளடங்கும்.

நடாத்தப்பட்ட பயிற்சி வழங்குதல் தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **துறை** | **பயிற்சி மணித்தியால எண்ணிக்கை** |
|---|---:|
| இலகு திறமை அபிவிருத்தி | 2,160 |
| புதிய ஆட்சேர்ப்பு பயிற்சி வழங்கல் | 8,700 |
| தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 21,246 |
| ஆலோசனைப் பயிற்சி வழங்குதல் | 354 |
| நெறிப்படுத்தல் பயிற்சி | 132 |
| வெளிவாரி தரப்பினர்-களுக்கான பயிற்சி | 14,004 |
| **மொத்தம்** | **46,596** |

### பணிக்குழாத்தினருக்கான மதியுரை

நிறுவனத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி திறனை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு 2008 ஆம் ஆண்டு கம்பனியில் ஒரு மதியுரைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டதுடன் தகைமையுடைய அனுபவம் வாய்ந்த மதியுரை நிபுணர்களின் பங்கேற்பில் இது இன்னமும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தியானம், மோதல் தவிர்ப்பு, மன உளைச்சலைக் கட்டுப்படுத்தல், மாற்றங்களை முகாமை செய்தல் போன்றவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பணி / செயலாற்றுகையுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கு தொழில்சார் மதியுரை வழங்குதலும் மதியுரை சேவையின் ஓர் அங்கம் ஆகும். குறைபாடுள்ள செயலாற்றுகையைக் கொண்டுள்ள ஊழியர்கள் தமது சுயவிருப்பில் அல்லது மேற்பார்வையாளர்களின் நேரடி ஈடுபாடு ஆகிய இரண்டினதும் அடிப்படையில் மதியுரை நிபுணரிடத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

### ஏனைய செயற்பாடுகள்

2016 ஆம் ஆண்டு புது வருடம் சர்வ மத தலைவர்களின் ஆசீர்வாததத்துடன் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் பணிக்குழாத்தினரால் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஏனைய முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதனைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

விமான சேவைகள் பௌத்த சங்கம் ஏற்பாடு செய்த வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி 2016 மே மாதம் 25 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. தலைவர், உப தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் அனைத்து பிரிவுத் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். 2016 யூன் மாதம் 18ஆம் திகதி கட்டுநாயக்க 18 ஆம் கட்டைக்கு அண்மையில் அமைந்துள்ள போதிரதனாராம விஹாரையிலும் 2016 நவம்பர் மாதம் 26ஆம் திகதி களனி ரஜ மகா விஹாரையிலும் விமானப் பயண சேவைக் கம்பனியின் பௌத்த சங்கத்தினால் சீல அனுஷ்டான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

2016 டிசம்பர் 16ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பழைய பொதுமக்கள் கேட்போர் கூடத்தில் மாலை நேர ஆராதனை, பக்திப் பாடல் மற்றும் உபசரிப்புடன் நத்தார் கொண்டாட்டம் அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வு குடும்ப உறுப்பினர்கள் சகிதம் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் கிறிஸ்தவ□சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் மடுமாதா ஆலயத்திற்குச் செல்லும் பாக்கியம் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் திறந்து விடப்பட்டுள்ளது. மடு ஆலயத்திற்குச் செல்லும் இந்த வருடாந்த பயணம் 2016 செப்டம்பர் மாதம் 23 – 25 ஆம் திகதி வரை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் கிறிஸ்தவ சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. குடும்ப அங்கத்தவர்கள் உள்ளிட்ட சுமார் 600 பேர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.


1


2

நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2016ஆம் ஆண்டுக்கான சித்திரைப் புத்தாண்டு விழா இரத்மலானையில் அமைந்துள்ள கொழும்பு விமான நிலையத்தில் 2016 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வெகு விமர்சையாக நடைபெற்றது. இந் நிகழ்வில் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டதுடன் இங்கு புராதன பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

விளையாட்டு விழாவின் போது கண்ணைக் கட்டி முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், கவி பாடுதல், தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல், போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் உள்ளிட்ட பல்வேறு வினோத விளையாட்டுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஊழியர்கள் ஓய்வாக காலங் கடத்தல் மற்றும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு வாய்யப்பினை ஏற்படுதிக் கொடுத்தல் மாத்திரமின்றி அவர்கள் மத்தியில் இடைத் தொடர்புகளை விருத்தி செய்தலே இதன் பிரதான நோக்கமாக அமைந்தது.

கம்பனியின் சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான துறைகளில் நிலவும் பிரச்சினைகளை அணுகி பிரேரணை சமர்ப்பிக்கும் பொருட்டு ஒரு சுயாதீன பிரதிநிதியாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

(அ) வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் நிலவும் சம்பளக் கட்டமைப்பினைப் பரீட்சித்தல் மற்றும் சந்தை, சம்பள விகிதாசாரம், ஊழிய வழங்கல் மற்றும் ஊழிய தேவைப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ப ஒரு சம்பளக் கட்டமைப்பில் ஊழியர்களை நிறுத்தும் போது சம்பள முரண்பாடுகள் காணப்படின் அது தொடர்பான பரிந்துரைகளை முன் வைத்தல்.

(ஆ) தற்போதைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தினைப் பரீட்சித்தல் மற்றும் ஊழியர்களின் தொழில்சார் அபிவிருத்தி, நிறுவனத்தின் உற்பத்தி திறனை விருத்தி செய்தல் போன்ற இரு பிரிவுகளும் தொடர்பான மாற்றங்கள் இருப்பின் அது தொடர்பான பரிந்துரைகளை முன் வைத்தல்.

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் முஸ்லிம் சங்கம் ரமழான் பண்டிகைக்காக 2016 யூன் மாதம் 14ஆம் திகதி விழா ஒன்றை ஏற்பாடு செய்தது. இதன் ஆரம்ப வைபவம் தலைவர், உப தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், பிரிவுத் தலைவர்கள், ஊழியர்கள், விமான சேவைகள் மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்பில் நடைபெற்றது. முஸ்லிம் சங்க உறுப்பினர்களின் ஒற்றுமையயை ஊக்குவித்தல் மற்றும் கூட்டு ஒத்துழைப்பு முயற்சிகளை மேம்படுத்தும் வகையில் ஏனைய மத ரீதியான அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்படல் ஆகியன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.




1 வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் பௌத்த சங்கம் ஏற்பாடு செய்த வெசாக் பக்கிப் பாடல் நிகழ்ச்சி

2. வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் கிறிஸ்தவ சங்கம் ஏற்பாடு செய்த நத்தார் பக்கிப் பாடல் நிகழ்ச்சி

# கூட்டாண்மை
# ஆளுகை

“ஒழுங்குமுறை கட்டமைப்புடனான இணக்கம்,
கூட்டாண்மை ஆளுகையின் உயர்ந்த தரங்கள்,
வெளிப்படைத்தன்மை,அர்ப்பணிப்பு
என்பன உயர்ந்த செயற்திறனை அடைந்து கொள்வதில்
எமது வெற்றிக்கான சாவிகளாகும்”

கூட்டாண்மை ஆளுகையின் உயர் தரங்களைச் அடைந்துகொள்வதில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி உறுதி பூண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை கோட்பாடுகள் பங்காளரது மதிப்பினை நிலைத்திருக்கக்கூடிய வழியில் பாதுகாப்பதிலும் அதிகரிப்பதிலும் அதனது வலுவான நம்பிக்கையை பிரதிபலிக்கின்றன. பணிப்பாளர் சபை, ஊழியர்களது அர்ப்பணிப்பு, துறைமைத்திறம், நேர்மை என்பன சிறந்த கொள்கைகளின் அமைப்பு, நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் உதவியுடனான பிரதான விடயங்களாக இதனது பங்காளர்களுக்கு நீண்ட கால மதிப்பையும், வருவாயையும் பேண உதவுமென வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)கம்பனி உறுதியாக நம்புகிறது.

**மேலோட்டம்.**

பணிப்பாளர் சபையின் வழிப்படுத்தலின் கீழ் அதன் பங்குதாரரின் மதிப்பைப் பாதுகாக்க உயர் நியமத்திலான கூட்டாண்மை ஆளுகையை அடைய வி.நி.வி.சே.கம்பனி உறுதிபூண்டுள்ளது. கூட்டாண்மையின் பொறுப்புகூறல் மற்றும் பேண்தகைமையை மேம்படுத்துவதில் தெளிவாக வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கையாளுவதின் முக்கியத்துவத்தை நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.

இந்த அறிக்கை 2016 நிதியாண்டின் போது நிறுவனத்தின் கூட்டாண்மை ஆளுகையையின் இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தின் சிறந்த நடைமுறைக்குறியீடு மற்றும் பொதுதொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாட்சிக்கான பொதுதொழில் முயற்சிகள் வழிகாட்டல்கள், நிதி அமைச்சினது “ஏ” வகையின் கீழுள்ள பொதுதொழில் முயற்சிகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட செயல்முறைகளையும் செயற்பாடுகளையும் கோடிட்டுக்காட்டுகிறது.

சட்டரீதியான ஒழுங்குகளுக்கு அமைவதற்கு மேலதிகமாக வினைத்திறன் மிக்க ஆளுகை அமைப்புகள், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், வெளிப்படுத்தல், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் பணியிட நெறிமுறைகள் என்பவற்றை நோக்கிய செயற்பாடுகள் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து பங்காளர்களினதும் ஒட்டுமொத்த விருப்பை உடைய கூட்டாண்மை ஆளுகையையின் உயர் நியமங்களை அடைவதற்கான அதனது அர்ப்பணிப்பினை மீள வலியுறுத்த சிறந்த கூட்டாண்மை ஆளுகை தொடர்ச்சியான பயிற்சியாகும் என்பதை வி.நி.வி.சே.கம்பனி அடையாளம் கண்டுள்ளது.

**பணிப்பாளர் சபை.**

நிறுவனத்திற்கு சிறந்த பயனளிப்பதுடன் பங்குதாரர்களுக்கு நீண்ட கால மதிப்பு மற்றும் வருவாயை உருவாக்கக்கூடியதென அவர்களால் நியாயமாக நம்பக்கூடிய முடிவினை செயற்படுத்தல் பணிப்பாளர்களின் பிரதான பொறுப்பாகும்.

நிறுவனத்தின் முழுமையான செயற்திறன் குறிக்கோள்கள்,நிதியியல் திட்டங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டம்,பிரதான முதலீடுகள் மற்றும் நிதி முன்வைப்புகள், நிதியியல் செயற்பட்டு மீளாய்வுகள்,இடர் முகாமைத்துவம், கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் என்பவற்றுக்கு பணிப்பாளர் குழு பொறுப்பாகும்.

பொறுப்புகள் வினைத்திறனுடன் மேற்கோள்ளப்படுவதை உறுதிப்படுத்தவும் முகாமைத்துவத்திற்கு சுயாதீன மேற்பார்வையை வழங்கவும் பணிப்பாளர் சபையால் கணக்காய்வுக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு பிரதானமாக நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**எமது நடைமுறையும் அர்ப்பணிப்பும்.**

வி.நி.வி.சே.க முழுமையாக அரசாங்கத்திற்குரிய கம்பனியாவதுடன். அதன் பணிப்பாளர் சபை கம்பனிக்கு உபாய முறையிலான வழிகாட்டல் தொடர்பாகவும் அதன் நிர்வாகம் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு பொறுப்பு கூறல் வேண்டும். எமது பங்காளர்களுக்கு மதிப்பினை அதிகரிக்கும் எமது பிரதான நோக்கத்தை அடைந்து கொள்ளும் செயற்பாட்டில் பயனுறுதியுடைய பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க சட்டப்படலினுள் வியாபார முடிவுகளை மேற்கொள்ளுவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

நிதி அமைச்சு மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை ஒழுங்குப்படுத்தும் சட்டகம் மற்றும் நிதி அமைச்சினது “ஏ” வகையின் கீழுள்ள வணிக பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றால் நிறுவனமானது வழிப்படுத்தப்படுகிறது. இந்த ஆளுகை சட்டப்படலை 05 அடிப்படைக் கோட்பாடுகள் வலுப்படுத்துகின்றன.

1. தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்.

2. வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் வருநிலை இடர் முகாமைத்துவம்.

3. முக்கிய பங்காளராக அரசிற்கு பதில் கூறும் நிலை.

4. பங்காளர்களின் சட்டரீதியான தேவைகளை அடையாளம் காணல்.

5. உரிய நேரத்திற்கு சமநிலையில் விடயங்களை வெளிப்படுத்தல்.

**கோட்பாடு1: தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்.**

சங்க அமைப்பு விதிகளுக்கமைவாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படும் வியாபார முகாமைத்துவம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அறிவு அனுபவமுள்ள உறுப்பினர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையின் கண்காணிப்பின் கீழ் கம்பனியின் வர்த்தக மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் நிருவகிக்கப்படுகின்றன. கூட்டிணைப்பு ஆளுமை கொள்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவம்

வழங்கும் பொறுப்பை வகிக்கும் தலைவரும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் நியமிக்கப்படுகிறார் .

அரசாங்கம் மற்றும் கம்பனியின் பங்காளர்களுக்காக கம்பனியின் பொறுப்புடமை தொடர்பாக நியதிச்சட்ட பொறுப்பினை பணிப்பாளர் சபையால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதில் பிரதான இரண்டு பணிகள் பின்வருமாறாகும்.

1. அதன் குறிக்கோளை எய்துக்கொள்வதற்காக நிறுவனத்தை வழிநடாத்தல்.

2. நிறுவனத்தின் முகாமைத்துவம், தொழிற்படுத்தல் மற்றும் அபிவிருத்தியை கண்காணித்தல்.

பணிப்பாளர் சபை 11 பணிப்பாளர்களை கொண்டமைந்துள்ளதுடன், அதில் 8 பேர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களாவதுடன்,3 பேர் நிறைவேற்றுத் தரம் சார்ந்த பணிப்பாளர்களாவார்கள். பணிப்பாளர் சபையின் இந்த கட்டமைப்பு, கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் இரண்டு துறைகளினதும் முகாமைத்துவத்தின் சுயாதினத்தை பிரதிபலிக்கிறது. இது பணிப்பாளர் சபையின் தனிப்பட்ட தொடர்புகள் (தனியார், சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது வியாபாரங்களின்) மீது மட்டுமல்லாது முகாமைத்துவத்தின் மீதான பணிப்பாளர் சபையின் கருத்துமாகும். சுயாதீன தீர்ப்பினை வழங்கல் பணிப்பாளர் சபையின் பிரதான அம்சமாக விளங்குகின்றது.
உள்ளக மற்றும் வெளியக தகவல் தொடர்பாக சுயாதீனமாகவோ இணைந்தோ அணுகுவதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுமதியுண்டு. பணிப்பாளர் சபையின் நடைமுறைகளை கடைபிடித்தல் மற்றும் பணிப்பாளர் சபை கூட்டங்களில் சட்டத்துடனான தேவைகளை வழிகாட்டலும் கம்பனி செயலாளரால் உறுதிப்படுத்தப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக கம்பனியின் செயலாளரால் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்புகள், கூட்ட அறிக்கைகள், சபை பத்திரங்கள் மற்றும் பணிப்பளார் சபை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயன்றவாறு போதுமான அளவு தகவல்களுடன் ஏனைய கடித ஆவணங்கள் விநியோகிக்கப்படுகிறது. குழுத் தீர்மானங்கள் நடைமுறைப்படுதல் தொடர்பான தொடர் நடவடிக்கைகளையும் கம்பனி செயலாளரால் மேற்கொள்ளப்படுகிறது.

கம்பனியின் எல்லா திணைக்களங்களையும் ஆகக்கூடிய கண்காணிப்புடனும் சிறந்த நிர்வாகத்துடனும் பேணிச் செல்லும் பொறுப்பு மூன்று நிறைவேற்று பணிப்பாளர்களிடையும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட முகாமைத்துவத்திற்காக எல்லா பணிப்பாளர்களும் சுயாதீனமாக அணுகலாம்.

**பணிப்பாளர் சபையின் தலைமைத்துவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள்:**

1. 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவை சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயவெல்லைக்குள் கட்டியெழுப்பப்பட்டுள்ள விசேட கடமைப்பொறுப்புகளை அடிப்படையாகக்கொண்டு கம்பனியின் நோக்குகை, வழிகாட்டல் மற்றும் அதன் மூலம் அரசாங்கத்தினதும் ஏனைய பங்காளர்களினதும் தேவைகளுக்கு எந்தளவில் பணியாற்றப்பட்டுள்ளது என்பதை ஏற்புடையதாகக் கொள்ளுதல்.

2. சட்டரீதியான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதற்கு பொறுப்பு கூறுதல் மற்றும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தில் ஏற்பாடுகளுக்கும் சங்க அமைப்பு பத்திரத்திற்கும் சங்க அமைப்பு விதிகளுக்கமைவாக கம்பனி தமது தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்.

3. அரசாங்கத்திற்கும் ஏனைய பிரதான பங்காளர்களுக்கும் நன்மை மற்றும் ஆகக்கூடிய அனுகூலங்கள் கிடைக்கப்பெறும் வகையில் இடர் முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு வகையிலான கொள்கைகளை தயாரித்தல்.

4. பொது மக்களின் அபிப்பிராயங்களை அவ்வப்போது மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு நீண்ட கால இலக்குகள் மற்றும் அபிப்பிராயங்கள் தயாரிப்பதற்காக உபாய ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்

5. பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் போதியளவு வகைகூறுதலை உறுதிப்படுத்தல்

வினைத்திறனுடன் கூடிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களிடத்தில் பொருத்தமானவாறு அதிகாரத்துவத்தை பகிர்ந்தளிப்பதன் ஊடாக சிறந்த கலவையுடன் அதனை நடைமுறைப்படுத்தலின் ஊடாக நிறுவனத்தின் முழுமையான நிர்வாகத்திற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

**இந்த விடயவெல்லைக்குள் பணிப்பாளர் சபைக்கு உரிய கடமைப்பொறுப்புகள் பின்வருமாறாகும்.**

(அ) பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்ட கொள்கைகளை நிறுவனத்தினதும், மொத்த சமூகத்தினதும் ஆகக்கூடிய நன்மை கருதி நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு பொறுப்பாக இருத்தல்.

(ஆ) கம்பனி தமது தொழிற்பாடுகளின்போது உரிய வழியில் பயணிக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஊடாக முகாமைத்துவத்தின் செயலாற்றுகையை மதிப்பிடல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(இ) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ப பலன்கள் பொருந்தவில்லையெனில் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தாமதமின்றி பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) திறமையுள்ள நபர்களை முகாமையாளர்களாக நியமனம் செய்தல் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களிடத்தில் போதுமான அளவு அதிகாரத்துவம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்.

(உ) பொது தொழில்முயற்சி தொடர்பான கணக்கு குழு (COPE) கூட்டங்கள், பாராளுமன்ற ஆலோசனை குழு (PCC) கூட்டங்களில் பங்குபற்றுதல் அல்லது தேவையானவிடத்து சிரேஷ்ட முகாமைத்துவத்திடம் அதற்கான அதிகாரத்தை கையளித்தல்.

**கூட்டிணைப்பு ஆளுகையின் பார்வையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கடமைப்பொறுப்புகள்.**

1999.11.19 ஆந் திகதிய PF/ PE3 ஆம் இலக்க பொது திறைசேரி சுற்று நிருபத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது. இந்த குழுவானது, அதிகாரத்துவ விடயவெல்லை வரைவிலக்கணம் செய்கின்ற, நிருணய விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளுடன் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள நிறைவேற்று தரம் அல்லாத மூன்று பணிப்பாளர்களை கொண்டமைந்துள்ளது. இங்கு உள்ளக கணக்காய்வு பிரிவின் பொறுப்புகளை தீர்மானித்தல்,வருடாந்த கணக்காய்வு திட்டங்களின் மீளாய்வு, பிரிவின் எல்லா நடைமுறைகளுக்குமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பிடல் மற்றும் மீளாய்வு செய்தல். செலவுகளின் பயன் மிக்க தன்மை ஏற்படுத்தல் மற்றும் வீண்விரயங்களை தவிர்க்கும் பொருட்டு எப்போதும் செயல் நிறைவேற்றுகை மதிப்பீடு செய்தல் என்பன உள்ளடங்குகின்றன.

வெளியக கணக்காய்வாளர்களுடன் கூட்டிணைப்பு, கணக்காய்வாளர் அதிபதி மற்றும் வெளியக கணக்காய்வாளர்களால் வெளியிடப்படுகின்ற முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பாக அறிக்கையிடல், பிரமாணங்கள், சட்ட ஒழுங்குவிதிகள். சட்ட திட்டங்கள், மற்றும் சுற்றுநிருபங்களின் படி பணியாற்றப்படுவதாக உறுதிப்படுத்திக்கொள்ளுதல், இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் தரங்கள் மற்றும் இலங்கை கணக்காளர் நியமங்களுக்கேற்ப பணியாற்றப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தவதற்கான நிதிக் கூற்றுகளின் மீளாய்வு, பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழுவால் (ஊழுீநு) செய்யப்பட்ட பரிந்துரைகள் மற்றும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான மீளாய்வு என்பன இவற்றுள் அடங்கும்.

கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ குழுவானது, நிறைவேற்று தரமல்லாத மூன்று பணிப்பாளர்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்கள அத்தியட்சகர், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் தரச் சான்றிதழ் பிரிவின் தலைவர் ஆகியோரை கொண்டமைந்துள்ளது. உள்ளக கணக்காய்வாளர் மற்றும் தரச் சான்றிதழ் பிரிவின் பிரதான தலைவர் ஏற்பாட்டாளராக பணியாற்றுகின்றனர். பணிப்பாளர் சபையால் நியமனம் செய்யப்பட்ட நிறைவேற்று தரமல்லாத 03 பணிப்பாளர்களான திரு.அனோமால் த செயிஸா,(தலைவர்), திரு.எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் திரு.என்.பி.எல்.பெர்ணான்டோ ஆகியோர் ஆண்டின் போது மீளாய்வின் கீழ் இக் குழுவில் பணியாற்றியுள்ளனர்.

பணிப்பாளர் சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டங்கள் மற்றும் புலனாய்வு அறிக்கைகள் பெற்றுக்கொள்கின்றது. பணிப்பாளர் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் குழுவிற்கில்லாத சந்தர்ப்பங்களில், அவர்களின் பரிந்துரைகளை பணிப்பாளர் சபையால் அனுமதிக்கும் பொருட்டு எடுத்துரைக்கப்படும். இந்த குழுவின் தலைவரால் குழு கூட்டங்களின் தீர்ப்புகளை பணிப்பாளர் சபையிடம் அறிக்கையிடப்படுவதுடன், சம்பந்தப்பட்ட தீர்மானங்களை பணிப்பாளர் சபை கூட்டங்களின் அறிக்கைகளில் உள்ளடக்கப்படும்.

2016 நிதி ஆண்டில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் மேற்கொண்ட செயற்பாடுகளை கோட்பாடு 2 இல் வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் வருநிலை இடர் முகாமைத்துவம் என்பவற்றின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**கோட்பாடு 2: வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் வருநிலை இடர் முகாமைத்துவம்.**

நல்லாட்சி, வகைகூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை மேம்படுத்துவதை கோரும், கம்பனியின் நிதி அறிக்கையிடலில் ஒருமைப்பாடை பாதுகாத்துக்கொள்வதற்கு தற்போதுள்ள நிறுவனத்தின் பண்புசார் பயன்படுத்தல்களை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் மூலம் மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போதான நிறுவனத்தின் முழு கொள்முதல் செயற்பாடும் திறைசேரியின் பொது நிதி துறை திணைக்களத்தினால் வழங்கப்படும் வழிகாட்டுதல்களை அடிப்படையாக கொண்டு வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது.

**உள்ளக கணக்காய்வு.**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது, உள்ளக கணக்காய்வு மற்றும் தரச் சான்றிதழ் பிரிவின் உதவியை பெறுகின்றது. உள்ளக கணக்காய்வு மற்றும் தரச் சான்றிதழ் பிரிவின் தலைவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டுநராக செயற்படுவதோடு நிர்வாக ரீதியாக தலைவரிடம் அறிக்கையிடுவார்.

உள்ளக கட்டுப்பாட்டின் போதுமான தன்மை, நேர்மை, பயனுறுதி என்பன மதிப்பிடப்பட்டு முழுமொத்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக சுயாதீன மீளாய்வு மேற்கொள்ளுதலும், விமான நிலைய சேவைகளுக்குரிய தர நியமங்களை திருப்திகரமாக பூர்த்தி செய்யப்படுகின்றதென உறுதிப்படுத்தவதன் மீதும் உள்ளக கணக்காய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டு பிரிவின் கவனம் பிரதானமாக செலுத்தப்படுகின்றது. அதே போன்று உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளை முகாமைத்துவத்திடம் சமர்ப்பிப்பதன் மீதும் தங்கியுள்ளது. உள்ளக கணக்காய்விற்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீளாய்வு செய்தல்.

- பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்படும் பிரதான தீர்மானங்கள் பயனுள்ளவாறு நடைமுறைப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துதல்.

- வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் ஒவ்வொரு விடயவெல்லைக்குள் வருகின்ற முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான இடரை மதிப்பீடு செய்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடமும் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி தலைவரிடமும் பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

- முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக வெளியக கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் இடர் மதிப்பிடலை அவதானித்தல்

- வரவு செலவு மற்றும் அதன் அங்கிகாரம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பில் அவ்வப்போதான நிதியியல் மதிப்பாய்வுகள்

- தெரிவு செய்யப்பட்ட விமான நிலைய வசதிகள் மற்றும் விமான நிலைய சேவைகள் தொடர்பாக தரக் கணக்காய்வுகளை நடாத்துவதற்கு கையேற்றல்.

- தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தின் வழிகாட்டலுடன் பெறுகை நடைமுறை ஒழுங்கமைகின்றதா என மீளாய்வு செய்தல்.

**கோட்பாடு3: பிரதான பங்காளராக அரசாங்கத்திற்கு பொறுப்பு கூறுதல்**

அரசுக்கு சொந்தமான முழுமையாக வியாபார செயற்பாடாக அரசாங்கத்திடம் பொறுப்புக்கூறல் வி.நி.வி.சே.க. மூலம் பின்வரும் பொறிமுறை நடைமுறைப்படுகின்றது.

**பாராளுமன்றம்.**

2002 மே மாதம் 24 ஆந் திகதிய PE/PF 21 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றுநிருபத்தின் படி நிதியாண்டின் முடிவிலிருந்து 150 நாட்களுக்குள் கம்பனியின் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழு (கோப்)**

கம்பனியின் உரிய இலக்குகளை பூர்த்தி செய்கின்ற அளவு மற்றும் தமது சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் அளவு என்பன குறித்துரைக்கும் பொருட்டு கம்பனியின் செயலாற்றுகை மீளாய்வு செய்யும் அதிகாரம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கோப் குழுவால் அழைக்கப்படும்போது தலைவர்கள், பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களுடன் பிரதான கணக்கு வழங்கும் அலுவலராக அமைச்சின் செயலாளர் அதன் முன்னின்று கம்பனி நடவடிக்கைகள் தொடர்பான கேள்விகளுக்கும் விடயங்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். ஆண்டின்போது வி.நி.வி.சே.க கோப் குழுவால் அத்தகைய கூட்டமொன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளது.

**பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு.**

2015டிசம்பர் 15 ம் திகதிய பாராளுமன்றதில் அனுமதிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறைசார் மேற்பார்வை குழுவின் கீழ் வி.நி.வி.சே.க காணப்படுகிறது. ஒட்டுமொத்த செயற்திட்ட முன்னேற்றம் செயல்திறன் ஏனைய விசேட விடயங்கள் பற்றி மதிப்பீடு செய்து கண்காணித்தல் குழுவின் பிரதான நோக்கமாகும். முழு செயல்பாட்டில் குறிக்கோளை பேணுவதற்காக துறைசார் மேற்பார்வை குழு பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரால் தலைமை தாங்கப்படுகிறது விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் ஆண்டின் செயல் திட்ட முன்னேற்றத்தை கண்காணிக்க வி.நி.வி.சே.க 2016 ஆம் ஆண்டில் இரு தடவைகள் குழுவால் அழைக்கப்பட்டது.

**நிதி அமைச்சு / பொது திறைசேரி.**

பொது தொழிற்முயற்சி அடங்கலாக அரச துறையின் நிதி ஒழுகலாறு தொடர்பில் நிதி அமைச்சர் அல்லது அவரின் பொருட்டு பொது திறைசேரி பொறுப்பு கூறல் வேண்டும். செயலாற்றுகை கண்காணிப்பதற்கும், நியதிச்சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு அமைவானதென உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், முக்கியமான விடயங்களை அமைச்சர் அவர்களுக்கு அறிக்கையிடுவதற்கும் திறைசேரி முகவர் ஒருவர் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்படுவார். மிளாய்விற்கான ஆண்டில் இந்த பணியை பொது திறைசேரியின் பிரதிநிதி திரு.எஸ்.ஆர்.ஆட்டிகல அவர்களால் நிறைவேற்றப்பட்டது. அரச தொழில்முயற்சிகளில் நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பன கண்காணிக்கும் பொறுப்பு, பொது திறைசேரியின் அரச தொழில்முயற்சி திணைக்களத்தை சார்ந்துள்ளது.

**போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு.**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கு வழங்கும் அலுவலராக கம்பனியின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கத்திற்கு பொறுப்பு கூறல் வேண்டும். அதன் பிரகாரம் இந்த விடயவெல்லையின் கீழ் பின்வரும் விடயங்கள் பணிப்பாளர் சபையுடன் எப்போதும் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

1. கூட்டாண்மை திட்டம் மற்றும் வரவு செலவு திட்டம்.

2. நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் மூலதன கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றுகை.

3. முகாமைத்துவ கடிதங்கள் மற்றும் வருடாந்த நிதிசார் செயலாற்றுகை அடங்கலாக முழுமையான கணக்காய்வு கையளிப்புகள்.

4. பொது தொழிற்முயற்சி குழு கூட்டங்களின்போது அல்லது ஏனைய அவ்வாறான வேறு நியதி / ஒழுங்குமுறை நிறுவனக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சினைகள்.

**கோட்பாடு 4 : பங்காளர்களின் சட்ட ரீதியான அபிலாஷைகளை அடையாளம் காணல்.**

பங்காளர்களிடத்தில் நிறுவனம் நன்றாக கவனம் செலுத்தும்போதும் சமூக பொறுப்புகள் மற்றும் சட்டரீதியான ஏற்புடமைகள் தொடர்பான நற்பெயர் அதிகரிக்கும்போதும் பங்காளர்களின் பெறுமதி அதிகரிக்கின்றது. அதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)கம்பனியின் நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் அரசு, ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், விமான நிலையம் பயன்படுத்துநர்கள் (விமான சேவைகள், பிரயாணிகள், விமான நிலையம் உள்ளிட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக சமூகம்) வழங்குநர்கள், ஏனைய சேவை வழங்குநர்கள் மற்றும் முழுமொத்த சமூகம் உள்ளிட்ட அனைத்து சட்டத்துடனான பங்காளர்களிடத்தில் உள்ள சட்டரீதியானதும் ஏனைய பொறுப்புகளையும் கம்பனி அடையாளம் காணுகின்றது. இந்த பொறுப்புகளை பங்காளர்களின் நீண்டகால பெறுமதியினை அதிகரிப்பதற்கு தேவையான பாரிய கடமையின் பகுதியென கம்பனி கருதுகின்றது.

**பொருத்தமான நிறுவன நடைமுறைகள் தொடர்பாக அதன் அர்ப்பணிப்பு இதன் மூலம் புலனாகின்றது. பின்வரும் விடயங்களை அது கொண்டமைந்துள்ளது.**

1. ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டப்படல் பொருட்டு பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவத்தின் ஆர்வம்.

2. விமான நிலைய தொழிற்பாடுகள் பற்றி நியதிச்சட்ட சேவைகள் வழங்குநராக அரசாங்கத்தின் பொறுப்புகளை பூர்த்தி செய்தல்.

3. கடன்வழங்குநர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பவற்றுக்குள்ள கடப்பாடுகளை உரிய காலத்தில் நிறைவேற்றுதல்.

4. நியாயமான வியாபாரத்தின் மீது உள்ள பிணைப்புகளை எப்பொதும் நிறைவேற்றுதல், வழங்குநர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களுடன் பணியாற்றும்போது நியாயமான அடிப்படையினை உறுதிப்படுத்தல்.

5. சமூகத்திற்கு தேவையான வியாபார நெறிமுறைகளின் பரிச்சியங்களை உறுதிப்படுத்தல்.

6. அனைத்து தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளையும் சட்டங்களில் காட்டப்பட்டுள்ளவாறு நடைமுறைப்படுதல், பொருத்தமான உயர் பரிச்சியங்களை கடைபிடித்தல்.

7. விமான நிலையம் பயன்படுத்தும் அனைவரையும் பாராபட்சமின்றி கவனித்தல்.

8. ஊழியர்களை நியாயமானதாகவும் சமமாகவும் கவனித்தல்.

**கோட்பாடு 5 : நடப்பு ரீதியான மற்றும் சமநிலையில் விடயங்களை வெளிப்படுத்தல்**

அறிவாற்றலுடன் கூடிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான ஆழமானதும், விரிவானதும், நடப்பு ரீதியாக சரியான தகவல்களையும் வழங்குதல் எமது உள்ளக மற்றும் வெளியக தகவல்களை வெளியிடுவதன் அடிப்படை நோக்கமாகும். பொது திறைசேரியின் பொது தொழில்முயற்சி தொடர்பான திணைக்களம் மூலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரங்கள் உள்ளிட்ட அனைத்து சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் ஒழுங்கமைவதை உறுதிப்படுத்துவதற்காக கொள்கைகளையும் நடைமுறைகளையும் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வியாபாரங்களின் இடர் படிவம், நிதிசார் நிலைமை, தொழிற்பாட்டு செயலாற்றுகை மற்றும் நிறுவனத்தின் செல்நெறிகள் என்பன பங்காளர்கள் புரிந்துகொள்வதற்கு உதவு முகமாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பயனுள்ள நேரடி தொடர்பாடலை பங்காளர்களுடன் பேணிச் செல்கின்றது. வழமையாகவோ அல்லது கோரும்போதோ நடப்பு, நிமித்த செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு செய்த தகவல்கள் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. நிறுவனத்துடனான தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் செயலாற்றுகை தொடர்பாக உள்ளவாறான நிலைமைகள் தொடர்பாக ஊழியர்களை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு தகவல் விநியோகித்தலை தரப்படுத்தும் நோக்கத்தில் நிறுவனத்தின் அக இணையத்தினால் சேவையாற்றப்படுகிறது.

எமது தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் சமூகத்திற்கு பயனுள்ளதும் எமது வியாபாரத்திற்கு பயனுள்ளதுமான சட்டங்கள் மற்றும் கட்டளைகள் என்பவற்றின் அபிவிருத்தி, சட்டவாக்கங்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொண்டால் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி பொது கொள்கையுடனான உரையாடலுக்கு பங்களிப்பு வழங்கும்.

**நிறுவன செயலாளர்**

சபையின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதில் நிறுவன செயலாளர் பிரதான பாத்திரத்தை வகிக்கிறார்.

கூட்டங்களின் போதான வினைத்திறன் மிக்க தீர்மானங்களை மேற்கொள்ள அனைத்து தகவல்களும், விவரங்களும், ஆவணங்களும் பணிப்பாளர்களுக்கு கிடைப்பதை நிறுவன செயலாளர் உறுதிப்படுத்துகிறார். நிறுவன செயலாளர் பொருத்தமான சட்டப்பூர்வ, புதிய விதிமுறைகளுக்கு அமைவதை உறுதிப்படுத்துவதில் பிரதான பொறுப்பாளராவதுடன் ஆட்சி விடயங்களில் வழிகாட்டல் அதிகாரிகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையில் இடைமுகமாக செயற்படுவார்.

# இடர் முகாமைத்துவம்

''நீங்கள் எதற்குமே துணியவில்லையாயின் அனைத்தையும் நீங்கள் இடர்பாட்டிற்குள்ளாக்குவீர். எனவே, எவ்வித துணிச்சலும் எடுக்காமையாமையே மிகப்பெரிய இடராகும். இதுவே தோல்விக்கான உத்தரவாதம் அளிக்கப்பட்ட உபாயமாகும். இதனாலேயே விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் நாம் செய்யும் அனைத்திலும் நாம் இடருக்கு ஆட்படுகின்றோம். இதனாலேயே "இடர் முகாமைத்துவம் செயற்பாட்டில் உள்ளது"....."

## இடர் முகாமைத்துவம் ஒரே பார்வையில்

இடர் முகாமைத்துவத்தினை சர்வதேச சிவில் விமான அமைப்பு (ICAO) பின்வருமாறு வரையறை செய்கின்றது. "நிறுவனம் ஒன்றின் வாழுமையினை அச்சுறுத்துகின்ற பின்தொடர் இடரினை இனங்காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் இல்லாதொழித்தல் (மற்றும் ஏற்கத்தக்க அல்லது சகிக்கத்தக்க மட்டத்துக்கு தணித்தல்) இடர் முகாமைத்துவமாகும்" (ICAO Doc 9859).

விமானத்துறை பற்றிய நோக்கில் அண்மைக்கால மற்றும் நவீன அபிவிருத்தியொன்றாக "இடர்" என்ற பதம் "அபாயம்" என்ற பதத்தின் மூலம் மாற்றீடு செய்யப்பட்டு வருவதுடன் அது ஒத்த கருத்து சொல்லாக கொள்ளப்படுகின்றது. தற்காலத்தில் அது பற்றி புரிந்து கொள்ளப்படுகின்ற விதத்தில "இடர் முகாமைத்துவமானது" 1990களின் ஆரம்ப பகுதியிலேயே தோற்றம் பெற்றது. ஆயினும், "இடர் முகாமைத்துவம்" என்ற பதம் 1990இற்கு முன் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

## விமானதுறை ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு நோக்கில் இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

வானூர்த்தி தொழில்படுத்துனர்கள் மற்றும் விமான சேவை வழங்குனர்கள் மூலமான பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பிலான ஏற்பாடுகளை ஒத்திணங்குவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் சிக்காக்கோ சமவாயத்தின் பல முக்கிய ஏற்பாடுகள் நோக்காகக் கொள்கின்றன. இம் மாற்றங்கள், தொழிற்படுத்துனர்கள் அல்லது சேவை வழங்குனர்கள் மூலமான பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையொன்றினை அமுல்படுத்துவதற்கும் பேணுவதற்குமான கட்டமைப்பு ஒன்றினை அறிமுகப்படுத்துகின்றன.

"பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினுள் அமைந்த முறைசார்நத செயன்முறையான பாதுகாப்பு இடர் முகாமைத்துவமானது முறைமையினை விபரித்தல், தீங்குகளை இனங்காணுதல், இடர் கணிப்பிடுதல், இடர் பகுப்பாய்வு செய்தல் மற்றும் இடர் கட்டுப்படுத்தல் ஆகியவற்றினை கூட்டுச் சேர்த்துள்ளது. பாதுகாப்பு இடர் முகாமைத்துவ முறைமைச் செயன்முறையானது பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற செயன்முறைகளினுள் பொதிந்துள்ளது. இது வேறான அல்லது தனித்துவமிக்க செயன்முறை ஒன்றல்ல" (FAA AC120-92, வானூர்த்தி தொழில்படுத்துனருக்கான பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை அறிமுகம்).

## குறித்துரைத்த சர்வதேச சிவில் விமான அமைப்பு ஏற்பாடுகள்

சர்வதேச சிவில் விமான அமைப்பு ஏற்பாடுகளுக்கு இசைவாக ஐரோப்பிய ஒழுங்கு விதி 1035/2011 – விமான சேவை வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கான பொது தேவைப்பாடுகள் மற்றும் யூரோ கொன்றோல் எஸ்ஸார்3 என்பது பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் பாதுகாப்பு அடைவு அதிகார வரம்பின் அத்தியாவசிய கூறொன்றாக இடர் மதிப்பீட்டினையும் தணிப்பினையும் இனங்காண்கின்றது. அதற்கமைய இடர் முகாமைத்துவமானது, 3 முக்கிய கூறுகளை உள்ளடக்குகின்றது.

1. ஆபத்துகளை இனங்காணுதல் - தீங்கு ஏற்படுவதற்கு இட்டுச் செல்கின்ற விரும்பதகாத அல்லது பாதகமான நிகழ்வுகளை இனங்காணுதல் மற்றும் இந்நிகழ்வுகள் நிகழக்கூடிய அல்லது ஆபத்தினை உண்டுபண்ணக்கூடிய பொறிமுறைகளை பகுப்பாய்வு செய்தல். மீள் செயற்பாடு மற்றும் முற்செயற்பாட்டு முறைகள் மற்றும் நுட்பங்கள் ஆகிய இரண்டும் ஆபத்துகளை நிச்சயித்தலில் பயன்படுத்தப்பட வேண்டும்.

2. இடர் கணிப்பீடு - இனங்காணப்பட்ட ஆபத்துகள், அவற்றின் ஆபத்து விளைவு பற்றிய நெருக்கடியான நியதிகளில் கணிப்பிடப்படுவதுடன் அவை கொண்டுள்ள இடர்வாய்ப்பின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன. அவை, அனுபவமிக்க ஆளணியினரால் அல்லது மிகவும் முறைமை சார்ந்த நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் பகுப்பாய்வு நிபுணத்துவத்தின் மூலமும் கணிக்கப்படுகின்றன. விளைவுகளின் கடுமையான தன்மையும் ஆபத்துகள் நிகழும் தன்மையும் (நிகழ்தகவு) நிர்ணயிக்கப்படுகின்றன. இடர் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக கருதப்படுமாயின் ஏதேனும் தலையீடின்றி தொழில்படுத்தல் தொடரும். அது ஏற்க முடியாததாக இருப்பின் இடர் தணிப்பு செயன்முறை ஈடுபடுத்தப்படும்.

3. இடர் தணிப்பு - இடரானது ஏற்றுக் கொள்ள முடியாததாக கருதப்படுமாயின் அவ் இடருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது பாதுகாப்பு மட்டத்தினை அதிகரிப்பதற்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அல்லது பொருளாதார ரீதியாக சாத்தியமானதாக இருப்பின் இடர் அகற்றப்படும்.

பின்வரும் வரைபடம் இடர் முகாமைத்துவச் செயன்முறையினை காண்பிக்கின்றது.




இடர் முகாமைத்துவ செயன்முறை
(மூலம் - ICAO Doc 9859 – பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ வழிகாட்டி)

## விமான நிலையத்திலும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியிலும் இடர் முகாமைத்துவம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலான விமான நிலையம் ஆகிய மூன்று விமான நிலையங்களை முகாமை செய்கின்ற மற்றும் நாட்டில் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்கின்ற இலங்கை அரசாங்கத்தின் நியதிச்சட்ட சேவை வழங்குனராக : இரண்டு சர்வதேச விமான நிலையங்களை தொழிற்படுத்துகின்ற விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது இந்நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதிச் செயலாற்றுகைக்கான அச்சுறுத்தலாக மாத்திரமன்றி பாரிய அளவில் நாடு பற்றிய எண்ணப்பாங்கிற்கும் அச்சுறுத்தலாக கொள்ளப்படுகின்ற இடரின் பல்வேறுவகையான இடர்களை சூழ்ந்துள்ளது. எனவே, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் இடர் முகாமைத்துவமானது நிறுவன ஆளுகைக் கட்டமைப்பில் உள்ள முக்கிய கூறுகளில் ஒன்றாக விளங்குவதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினதும் இடர் முகாமைத்துவத்தினதும் செயல்திறனுக்கு சபை பொறுப்புடையதாக விளங்குகின்றது. நிறுவன மட்டத்தில் நீண்டகால இலக்குகளை அது பெற்றுக் கொள்வதில் இருந்து விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு தடையாக விளங்கிய இடர்கள் அதன் நிறுவன திட்டத்தின் சூழ்நிலையினுள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் குறுகிய, நடுத்தரகால குறிக்கோள்களுடன் தொடர்புபடுகின்ற இடர் இனங்காணப்பட வேண்டியதுடன் வருடாந்தம் தீர்வு காணப்பட வேண்டியதாகும்.

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் உருவாக்கப்படும் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகளானவை இடரினை இல்லதொழிப்பதை விட இடரினை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இடர் கணிப்பீடும் முகாமைத்துவமும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் அனைத்து மட்டங்களுக்கும் மிக முக்கிய அங்கமாக விளங்குகின்றது. குறிப்பாக சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மற்றும் சிரேஷ்ட அத்துடன் நடுத்தர முகாமைத்துவம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் வருகின்றது. எமது அளவுசார் இடர் தோற்றப்பாடானது அனைத்து தொழிற்படுத்தல், துணையளித்தல், தொழிற்பாடுகளையும் உள்ளடக்கி கீழிருந்து மேல்நோக்கிய பகுப்பாய்வு அணுகுமுறையொன்றினூடாக கணிப்பிடப்படுகின்றது. விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை பாதிக்கின்ற சாத்தியமான இடர்கள் தோற்றம் பெறுவதாயினும் அனைத்து




தொழிற்படு திணைக்களங்களும் விமான நிலையங்களின் தொடர்ச்சியான தொழிற்பாட்டினை நிலைநிறுத்துவதில் இன்றியமையாததாக விளங்குகின்ற தொழிற்பாட்டு விடயங்களுடன் தொடர்புடைய இடர் மற்றும் தொழில் தொடர்ச்சி முகாமைத்துவ செயன்முறைகளை மீளாய்வதற்கான மிகவும் ஆழமான இடர் இனங்காணுதல் பொறிமுறை ஒன்றினை அமுலாக்குவதற்கு வேண்டப்பட்டுள்ளன.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் எதிர்காலத்தின் முக்கிய கூறுகள் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் பல் படை இடராக காணப்படுவதுடன் வியாபார தொடர்ச்சி முகாமைத்துவ திட்டமானது இனங்காணப்பட்ட இடரினை தேடிக் கண்டுபிடிப்பதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் தடுக்கக்கூடிய மற்றும் ஏற்புத்தன்மையான நடைமுறைகளை உருவாக்குவதற்கும் தொடர்ச்சியாக சமகாலப்படுத்துவதற்கும் அவற்றின் செயல்திறன் தன்மையினை உறுதி செய்வதற்கான நடவடிக்கை திட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கும் தொழிற்பாட்டு இடர் பதிவேடு ஒன்றினை நிறுவுவதனை உள்ளடக்குகின்றது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது செயல்திறன் மிக்க இடர் முகாமைத்துவத்தினை கொண்டுள்ளது என்பதையும் கட்டுப்பாட்டு முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன என்பதனை உறுதி செய்வதற்கான அனைத்து பொறுப்புடைமையையும் சபை கொண்டுள்ளது. கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது இப்பொறுப்புடைமையை நிறைவேற்றுவதில் உதவியளிக்கின்றது.

## தொழிற்பாட்டு இடர்

| | |
|---|---|
| **01** | இடர் இனங்காணல் - ஆபத்தின்மை, பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய இடர்<br><br>ஆபத்தின்மை<br><br>ஆபத்தின்மை என்பது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தொழிற்பாட்டுக்கு மூலாதாரமாகும். விமான நிலைய வசதிகளைப் பராமரித்தலும் தொழிற்படுத்தலுமானது குறைக்கக்கூடிய, தணிக்கக்கூடிய மற்றும் இடமாற்றக்கூடிய ஆனால், முழுமையாக இல்லாதொழிக்கப்பட முடியாத இடரை அடையாளம் காண்பதுடன் தொடர்புபடுகின்றது. உரிய காலத்தில் தொழில்சார் ஆரோக்கியத்தினையும் ஆபத்தின்மை நிகழ்வுகளை குறைப்பதனையும் அடையாளப்படுத்தலானது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் நிலைபெறு தன்மைக்கான முக்கிய கூறுகளில் ஒன்றாக விளங்குகின்றது.<br><br>உதாரணமாக பறவைகள் தாக்குதலின் காரணமான விபத்துகளும் நிகழ்வுகளும் மோசமான காயங்களையும் வானூர்திகளுக்கான சேதங்களை தோற்றுவிக்கலாம். இதன் விளைவாக விமான நிறுவனம் பறப்பதலிருந்து தவிர்க்கலாம்.<br><br>பாதுகாப்பு<br><br>பயணிகளின் போக்குவரத்து அளவு அதிகரிப்பதிலிருந்தும் சிவில் விமானத்துக்கான அச்சுறுத்தல் விரிவுபடுகின்ற தன்மையிலிருந்தும் தோன்றுகின்ற சவால்களை விமான நிலையப் பாதுகாப்பு தொடர்ந்தும் எதிர்கொண்டது.<br><br>விமானப் பாதுகாப்புடன் இணையப்பெற்ற இடர் அதாவது, ஐஎஸ்ஐஎஸ் போன்ற உலகப் பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், ஆபத்தான திரவங்கள் மற்றும் திண்மங்கள், தொற்றொதுக்கம் செய்யப்படாத மிருகங்கள் மற்றும் தாவரங்கள், கட்டுக்கடங்காத பயணிகள், வானூர்தி மற்றும் ஏனைய விமானச் சொத்துக்களுக்கு எதிரான வன்மமான செயற்பாடுகள் மற்றும் எல்லைப்பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் வாடிக்கையாளரை ஏமாற்றுதல் போன்றன பிராந்தியம் முழுவதும் அதிகரிக்கும் போக்கில் காணப்படுகின்றது.<br><br>ஆரோக்கியம்<br><br>மீளாய்வுக்கு உட்படுகின்ற வருடத்தின் போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, ஆரோக்கிய இடர் அடிப்படையில் ஏதேனும் பாரதூரமான சவால்களுக்கு முகம் கொடுக்கவில்லை. எனினும் சர்வதேச விமான நிலைய சேவை வழங்குனராக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது ஆரோக்கிய இடருக்கான அதன் இடர் கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகளை தொடர்ச்சியாக பேணியதுடன் தரம் உயர்த்தியது.<br><br>இடர் மதிப்பீடு – (விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம்)<br><br>உலகளவிலும் அதே போன்று ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலும் இவ்மூன்று பிரதான இடர் மாறிலிகளின் வகைகளும் எப்போதும் அதிகரிக்கும் போக்கிலேயே காணப்படுகின்றன. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கமானது ஏதேனும் இடர் தணிப்பு அல்லது கண்காணிப்பு நுட்பங்களை பிரயோகிப்பதற்கு முன்னர் ''உயர்வானது'' ஆக தரப்படுத்தக்கூடியது.<br><br>இடர் கட்டுப்பாடும் தணிப்பும்<br><br>பாதுகாப்பு ஆபத்துகள் பற்றியும் நிகழ்வுகள் பற்றியும் அறிக்கையிடுவது அனைத்து மட்டங்களிலும் ஊக்குவிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. முன்னைய ஆண்டுகளைப் போன்று, விமான நிலைய ஊழியர்களினால் அளவிடப்பட்ட வீதத்திற்கமைய, விமான நிலையத்தில் வானூர்தி மற்றும் பயணிகள் காயங்கள், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டியாக இருந்து வருகின்றது. விமான களம், சுற்றுவட்டப் பிரதேசம், வாயில்கள் மற்றும் பராமரிப்பு பிரதேசங்கள் ஆகியவற்றில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தொழிற்பாடுகளின் அனைத்து பாகங்களையும் உள்ளடக்குகின்ற பல்வேறு தர நிர்ணய செயற்பாட்டு நடைமுறைகளையும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி கிரமமாக மீளாய்வு செய்கின்றது. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு ஏற்புடையவாறு பாதுகாப்பு முகாமைத்துவத்தின் முக்கிய நோக்கு, ஏற்கனவே எதிர்கொண்ட இடர்களை இனங்காண்பது மட்டுமன்றி விசேடமாக விமான களத்தில் பல்வேறு இடருக்கு இட்டுச் செல்கின்ற சாத்தியமான நிலைமைகளை இனங்காணுவதாகும். உதாரணமாக பறவைகள் சனத்தொகை போக்குகள் விபத்துகளுக்கும் நிகழ்வுகளுக்கும் இட்டுச் செல்கின்ற காரணியொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. (பறவைகள் தாக்குதல் காரணமாக).<br><br>இவ்விடரினைத் தவிர்க்கும் பொருட்டு பிராந்திய பறவை இனங்களை கணிப்பிடுதல் மற்றும் முகாமை செய்தல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் விமான தளத்தில் எடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, பாதுகாப்பு பிரிவின் கீழ் பறவை ஆபத்து கட்டுப்பாட்டு அலகானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் திணைக்களத்துக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை பறவை ஆய்வியல் பற்றிய ஆய்வுக்குழு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராபஜக்ஷ விமான நிலையங்கள் இரண்டிலும் அவர்கள் மேற்கொள்கின்ற காலமுறையான ஆய்வுகளில் வெளியிடுகின்ற பரிந்துரைகளை நிறைவேற்றுகின்றது. |

| | |
|---|---|
| | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது பாதுகாப்பு முகாமைத்துவ திட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. இது தேவைப்படுகின்ற போதும் தேவைப்படுகின்றவாறும் மீளாய்வு செய்யப்பட்டு சமகாலப்படுத்தப்படுகின்றது. இந்நிகழ்வுகள் இடம்பெறுவதை குறைந்தளவில் பேணுவதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் விமான நிலைய பாதுகாப்பு ஆளணியானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய உள்ளக மேற்பார்வை வளங்களுடன், அதாவது குடிவரவு குடியகல்வு திணைக்களம், வான்படை மற்றும் பொலிஸ் ஆகிய படைகளுடன் கூட்டாக இணைந்து பணியாற்றுகின்றது.<br><br>அதிகரிக்கப்பட்ட நடவடிக்கைகளும் செயல்திறன் மிக்க உபகரணங்களும் வசதிகளும் செயற்பாட்டில் உள்ளதுடன் உயர்வான பாதுகாப்பு தர நியமங்கள் பேணப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு அவை தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்படும்.<br><br>சாத்தியமான ஆரோக்கிய இடரினை கையாள்வதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது பிரதான பொதுச் சுகாதார பிரச்சினைகளுக்கான ஏற்புத் திட்டமொன்றினை வைத்திருப்பதனை தொடர்ந்தும் முன்னெடுத்தது. மேலும், வருடாந்த அவசர நிலை பயிற்சிகள் முழுமையான அளவில் மருத்துவ அலகுடன் அதன் மருத்துவ அலுவலர் குழாத்துடன் இணைந்து நடாத்தப்படுகின்றது. மேலும், தேவை ஏற்படுகின்ற போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி விமான பயணத்தின் ஊடாக தொற்று நோய் பரவுவதை தடுப்பதற்கான கூட்டு முயற்சி ஒழுங்கமைப்புடன் கைகோர்கின்றது.<br><br>இவ்விடரினை கையாளும் பொருட்டு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது. அதாவது, ஆபத்தின்மை, பாதுகாப்பு மற்றும் மருத்துவப் பிரிவு, இவற்றுக்கு துறையில் உள்ள அனுபவம் வாய்ந்த மற்றும் கல்விகற்ற தொழில்சார் நிபுணர்கள் தலைமை வகிக்கின்றனர். |
| **02** | இடர் இனங்காணுதல் - தேசிய விமான நிலையமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மீது அதிகளவில் தங்கியிருத்தல்<br><br>பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 50% பயணிகள் பருமனுடன் ஸ்ரீ லங்கன்ஸ் எயார்லைன்ஸ் பாரிய வாடிக்கையாளராக விளங்குகின்றது.<br><br>இடர் மதிப்பீடு (விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம்)<br><br>சந்தை மற்றும் வாடிக்கையாளர் தரம் என்ற நிதிகளில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது அதிகரித்த கட்டமைப்பு இடருக்கு ஆட்படுகின்றது. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம் ''உயர்வானது'' ஆக தரப்படுத்தப்படக் கூடியது.<br><br>இடர் கட்டுப்பாடும் தணிப்பும்<br><br>விமான நிலைய தொழிற்படுத்துனர் மற்றும் தேசிய விமானம் ஆகிய இரண்டினதும் வர்த்தகத் திட்டங்களை ஒரே நேரத்தில் நிகழச்செய்வதற்கான முயற்சியினை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் .(இலங்கை) கம்பனி தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. நாட்டின் விமானத்துறை முதன்மை திட்டமானது திறந்த வான் கொள்கையில் பரிமாற்றத்துடன் கூடிய தேசிய விமானத்தின் நலன்களை பாதுகாப்பதற்கான உபாயங்களை உள்ளடக்குகின்றது. |
| **03** | இடர் அடையாளப்படுத்தல் - இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கான சந்தை அபிவிருத்தி இடர்<br><br>மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தில் உறுதியான சேவை நாடித்தளம், பயணிகள் தளம் மற்றும் சரக்குகள் தளம் போன்றவற்றினைக் கொண்டிருக்காத காரணிகளின் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட ஆண்டு இலாபத்திருப்பு முனை மற்றும் கருத்திட்டத்தின் கடன் அடைத்தல் காலம் என்பன நீண்டதாக இருக்கும்.<br><br>இடர் மதிப்பீடு (விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சாத்தியமான தாக்கம்)<br><br>மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையமானது தற்போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் காசுப் பாய்ச்சலில் தங்கியிருப்பதால் மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தில் இலாபநட்ட திருப்புமுனையினை அடைவதில் ஏற்படும் ஏதேனும் தாமதம் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் காசுப்பாய்ச்சலிலும் இலாபத்திலும் பாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும்.<br><br>மேலும், தற்போது நிலவுகின்ற நிலைமையினைச் சார்ந்து இது, ''உயர்வான இடராக'' வகைப்படுத்தக்கூடியது.<br><br>இடர் கட்டுப்பாடும் தணித்தலும்<br><br>மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்துக்கான சந்தை வாய்ப்பினை இனங்காண்பதற்கும் விஸ்தரிப்பதற்கும் சந்தைப்படுத்தல் முயற்சிகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது. நடைமுறை பகுப்பாய்வு போக்குவரத்து எதிர்வுகூறல்கள், பயண வழி எதிர்வுகூறல்கள் மற்றும் ஊட்டல் பிரதேச பகுப்பாய்வுகள் காலமுறையாக மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>சுற்றுலாத்துறை மற்றும் விமான கொத்தணி ஆகியவற்றின் தொடர்புடைய நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் கூட்டாக சந்தைப்படுத்தல் பிரிவினால் பிரசார செயற்பாடுகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.<br><br>மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையம் வர்த்தக ரீதியிலான முதலீட்டுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல் அழைக்கப்பட்டுள்ளது. |

**04** இடர் அடையாளப்படுத்தல் - சட்டம், ஒழுங்குபடுத்தல் மற்றும் நற்பெயர் சார் இடர்

சட்டத்தை மீறுதல், இணங்காமை

சட்டத்தை மீறுதல், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டுடன் இணங்காமை, சுற்றாடல் தர நியமங்களுடன் இணங்காமை மற்றும் ஒப்பந்தங்களை மீறுதல் போன்றன வேண்டுமென்றே செய்யாதிருப்பினும் நற்பெயருக்கான சேதம், வியாபாரம் அல்லது தொழிற்பாடு தடைபடுதல், அமுலாக்கல் நடவடிக்கைகள் வழக்குகள் போன்றவற்றுடன் இணையப்பெற்ற பண இழப்பு என்பன உள்ளடங்களாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் மீது சட்டரீதியான பாதிப்புகளைக் கொண்டு வரும்.

நற்பெயர்சார் ஒரு சொல் இடரின் கீழ் பங்குதாரர்களின் எண்ணப்பாங்குகளும் தவறான எண்ணக்கருக்களும் நற்பெயரை களங்கப்படுத்தலாம். அத்துடன் பாதகமான பிரசாரம் ஒன்றினைத் தோற்றுவித்து வாடிக்கையாளர் அதிருப்தி, கம்பனியின் வியாபார குறி பெறுமதியில் வீழ்ச்சி, போட்டித் தன்மை அனுகூலம் இழத்தல் மற்றும் நிலைத்திருக்கத்தக்க வியாபார முகாமைத்துவம் மீதான பாதகமான தாக்கம் போன்றவற்றினை இறுதியாக தோற்றுவிக்கும்.

இடர் மதிப்பீடு (விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம்)

சில சட்ட இடர்கள் தனியாக இருக்கின்ற போதிலும் அவற்றில் பல தொழிற்படுத்தல், நிதி, நற்பெயர், அரசியல், வரி மற்றும் ஒழுங்குபடுத்தல் இடருடன் ஒன்றிணைகின்றன. எனவே, மோசமான நிலைமைகளும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கமும் ‘‘உயர்வானது’’ ஆக தரப்படுத்தக்கூடியன. தற்போது இது ‘‘குறைவானது’’ ஆக காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் இடர் பற்றிய செயல்திறன் மிக்க முகாமைத்துவமானது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் வியாபரம், தொழிற்பாடு மற்றும் அபிவிருத்தியில் அவசியமற்ற மற்றும் நுண்மதியற்ற இடர் எடுத்துக் கொள்வதை தவிர்ப்பதற்கு முகாமைத்துவத்துக்கு உதவியளிக்கும் என நாம் புரிந்து கொள்கின்றோம்.

இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

அரசாங்க கொள்கை மற்றும் சட்டவக்கங்களில் உள்ள மாற்றங்களை கண்காணிப்பதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி முற்செயற்பாட்டுடனும் முன்னோக்குடனுமான அணுகுமுறைகளை எடுக்கின்றது. இடர் பிரதேச வாய்ப்பினை இனங்காண்பதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு பொருந்தக்கூடிய தீர்ப்புகள், சட்டத்தீர்ப்புகள், ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் மீளாயப்படுகின்றன. சட்ட ரீதியாகவும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் இடர் ஏற்றுக் கொள்ளல் மட்டத்தினுள் தொழிற்படுவதற்கும் முகாமைத்துவத்தினை வழிநடத்துவதற்கான உரியகால விதம் ஒன்றில் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பொருத்தமான நடவடிக்கை முறைகள் மாற்றங்களை கையாள்வதற்கு உருவாக்கப்படுகின்றன. இம்மாற்றங்களை பின்பற்றுவதற்கு முகாமைத்துவதற்கு தொடர்ச்சியாக கல்வி வழங்கப்படுகின்றது. போதிய இடர் தணிப்பு நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளதுடன் மேம்படுத்தலுக்காக தொடர்ச்சியாக மீளாய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் இடர் அவதானிப்பினை முன்னோக்கும் விதத்தில் கண்காணிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி தொடர்ந்தும் செயற்படும். நேரடியான நேரடியற்ற சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் இடரினை கையாளுகின்ற நடைமுறைசார் தணிப்பு நுட்பங்களில் சில பின்வருமாறு:

விமான நிலைய தொழிற்படுத்துனர் பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தமானது முனையக் கட்டிடங்களினுள்ளும் அண்டிய பகுதியிலும் விபத்துக்களை காப்பிடுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

அவர்களது ஒப்பந்த பிரதேசங்களினுள் மூன்றாம் தரப்பினர் இறப்புகள் / சேதங்களுடன் இணையப்பெற்ற சட்ட இடரினை காப்பிடுவதற்கு விமான தொழிற்படுத்துனர்கள், தீர்வையற்ற கடைகள் மற்றும் ஏனைய சலுகை வழங்குனர்களின் ஒப்பந்தத்தில் பொதுப்பொறுப்பு காப்புறுதி ஒப்பந்தம் கட்டாயமாக்கப்பட்டது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்கின்ற வேளையில் அனைத்து ஒப்பந்ததாரர்களும் சமர்ப்பிக்க வேண்டிய ‘‘ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர்’’ காப்புறுதி ஒப்பந்தமானது விமான நிலையத்தினுள் நிர்மாண ஒப்பந்தங்களுடன் இணையப்பெற்ற இடர்களை காப்பிடுவதற்கான மற்றுமொரு ஒப்பந்தமாகும். எமது அனைத்து ஒப்பந்தங்களும் வழக்காடலுக்கு அல்லது நடுத்தீர்ப்புக்கு முன்னர் பரஸ்பர இணக்கம் ஒன்றுக்கு வருவதற்கான சாத்தியத்தினை கண்டறிவதற்கான ஏற்பாடொன்றினை கொண்டுள்ளது. அதிக செலவுமிக்க சட்ட இடரினை தணிப்பதனை ஊக்குவிப்பதற்காக இவ்வாசகம் அறிமுகப்படுத்தப்பட்டது. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் நிறுவன எண்ணப்பாங்கு மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய சாத்தியமான நற்பெயர்சார் இடரினை முகாமை செய்வதற்கும் முன்கூட்டியே தவிர்ப்பதற்கும் பொதுமக்கள் உணர்வு மற்றும் சமூகப் பொருளாதார போக்குகள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றன. அதேவேளை, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்திகள் பற்றிய புரிந்துணர்வினையும் ஆழமான நோக்கினையும் அதிகரிப்பதற்காக முக்கிய அக்கறைதாரர்களுடன் தொடர்ச்சியாக ஈடுபாடு காட்டப்படுகின்றது. நற்பெயர்சார் இடரினை அடையாளம் காணுதலும் அவற்றை தணித்தலும் ஒரு பிரிவுக்கு மாத்திரம் உட்பட்டதல்ல. மாறாக அனைத்து பிரிவுகளினதும் முக்கிய தொழிற்பாடுகள் முழுவதிலும் ஒன்றாக கருதப்படுகின்றது. அதேவேளை, பாதகமான பிரசாரத்தினை கையாள்வதற்கு ஊடகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு சந்தைப்படுத்தல் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட குறிப்பான பிரிவொன்று காணப்படுகின்றது.

**05** இடர் அடையாளப்படுத்தல்
- தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய இடர்

பின்வரும் காரணங்களின் விளைவாக தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய இடர் தணித்தல் நுட்பங்கள் இன்று மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

சமூக ஊடகப் பயன்பாடு

சமூக ஊடக தொழில்நுட்பங்களின் பயன்பாடு புதிய பிரதேசங்களுக்கு வியாபித்து வருகின்றது. பயன்பாட்டாளர் சமூகங்கள், வியாபார கூட்டு முயற்சி, இலத்திரணியல் வர்த்தகம் போன்றன உதாரணங்களில் உள்ளடங்கும். இரகசியமான தரவுகளுக்கான அங்கீகாரம் அளிக்கப்படாத அனுகுவழிகள், கொள்கை மீறுதல் போன்றன சாத்தியமான இடர்களாகும்.

சாதனங்களின் துரித வியாபிப்பு

பல எண்ணிக்கையிலான சாதனங்களும் செயல்கூறுகளும் துரிதமாக வியாபிக்கின்றன. (உதாரணம். 15 மில்லியனுக்கும் மேற்பட்ட ஐபேட்கள் இன்று புழக்கத்தில் உள்ளன) மல்டிமீடியா வர்த்தகமானது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தரவுகள், பாதுகாப்பு விடயங்கள் இழப்புகள் / முக்கிய விடுவிப்புகள் மற்றும் செயலி உருவாக்கும் சவால்கள் போன்ற புதிய இடரினை செல்லிடத் தொலைபேசி ஊடான வர்தத்கம் அறிமுகப்படுத்துகின்றது.

தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு முறைமையில் விரிவடைகின்ற அச்சுறுத்தல் போக்குகள்

2016ஆம் ஆண்டு இணையத்தள ஊடுருவல் உயர்வானதாக இருப்பின் 2017ஆம் ஆண்டு இணையத்தளத்தில் ஊடுபவர்கள் புதுமைப்படைக்கும் ஆண்டாக இருக்குமென சேர்போஜ் ஆய்வுகூடங்களின் பிரதம பாதுகாப்பு உபாய அதிகாரி எதம் மேயர் கூறுகின்றார். தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினதும் முறைமைகளினதும் செயற்திறன் தன்மையும் பாதுகாப்பும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் நம்பத்தகுந்த மற்றும் பாதுகாப்பான தொழில்பாடுகளை உறுதி செய்வதற்கு இன்றியமையாதவையாகும். எமது இரகசிய, உணர்வுமிக்க மற்றும் பாதுகாப்புடன் தொடர்புபட்ட தகவல்கள் போன்றவற்றுக்கான இணையத்தளத்தை ஊடுருபுவர்கள் மற்றும் வைரஸ், செயற்பாட்டில் உள்ள கணனி அரண் போன்றவற்றுக்கு மேலதிகமாக, மின்னலின் காரணமாக IP PABX வலையமைப்பில் செயிலித்தல், சாதனங்கள் / தொலைபேசி சாதனங்கள் செயலிழத்தல், ஒத்திசை வாயில்கள் செயலிழத்தல், வலையமைபபிலிருந்தும் மற்றும் மின்சார இணைப்புகளில் இருந்தும் மின்னலின் காரணமாக பிரதானமாக வலையமைப்பில் இருந்து EDGE முறைமைகள், (மின்னஞ்சல், இணையத்தள எல்லைய பெயர் முறைமை, மென்பொருள் சொத்து முகாமைத்துவம் (Sam) உள்ளடங்கலாக), கட்டட முகாமைத்துவ முறைமை, PA, வான்வெளிக்கள மின்னல் கட்டுப்பாடு, VDGS, தீ கண்டுபிடிப்பு முறைமைகள், கடிகார முறைமை, FDI முறைமை போன்ற முறைமைகளின் செயலிழப்புகள் இடர்களாக காணப்படுகின்றன.

உபாய தகவல் முறைகள் கிடைக்கப்பெறாமை

தற்காலத்தில் பிராந்திய விமான நிலையங்கள், ‘‘கிளவுட் கணனிமயப்படுத்தல்’’ நுட்பங்களை பரீட்சிப்பதற்கும் விமான சேவைகள் வழங்குவதன் ஊடாக தோற்றுவிக்கப்படுகின்ற ‘‘பெரிய தரவுகள்’’ ஐப் பயன்படுத்தி அதிக உபாய தகவல் முறைகள் மற்றும் விடயங்களுக்கான இணையத்தளம் போன்றவற்றினை பயன்படத்துவதற்கும் திட்டமிடுகின்றன. அவர்களின் பிரதான நோக்கம் உண்மையான தரவுகளை தகவல்களாக மாற்றுவதாகும். அதன் பின்னர் அறிவாக மாற்றுவதாகும். அத்துடன் இறுதியாக தரவுகளின் ‘‘எதிர்பார்க்கப்பட்ட பகுப்பாய்வுகள்’’ ஊடாக ‘‘போட்டி அனுகூலத்தினை’’ அடையும் பொருட்டு அத்தரவுகளை மெய்யறிவாக மாற்றுவதாகும்.
எவ்வாறாயினும், ‘‘வரலாற்று தரவுகள்’’ இனை அடிப்படையாகக் கொண்ட ‘‘உண்மைத் தகவல் முறைமைகள்’’ இல் மாத்திரம் இதுவரை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி தங்கியிருப்பதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் உபாய தகவல் முறைமைகள் இன்னும் பயன்படுத்தப்படவில்லை.

இனிவரவுள்ள ஆண்டுகளில், ‘‘ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் வினைத்திறன் மிக்க நட்புமிக்க முதன்மை விமான மையமாக’’ ஆக விளங்கும் அதன் இறுதி அவாவினை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி அடைந்து கொள்வதாயின் இது பிரதான தடையாக அல்லது இடர் ஒன்றாக அமைந்திருக்கும். ஏனெனில், போட்டி அனுகூலத்தைக் கொண்டிராது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி அம்மட்டத்துக்கு செல்ல முடியாது. அத்துடன் போட்டி அனுகூலத்தைப் பெற வேண்டுமாயின் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி உபாய தகவல் முறைமையினைப் பயன்படுத்தி தரவுகளை விவேகமானதாக மாற்ற வேண்டும்.

இடர் மதிப்பீடு - விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம்

தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய இடர் இறுதியாக தொழிற்பாடுகளுக்கு தடைகளை உண்டுபண்ணும். வாடிக்கையாளர் அதிருப்தி, போட்டி நலன் இழத்தல் போன்றவற்றையும் தோற்றுவிக்கும். விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான தாக்கமானது ஏதேனும் இடர் தணிப்பு நுட்பங்களை பிரயோகிப்பதற்கு முன்னர் ‘‘உயர்வானது’’ ஆக தரப்படுத்தக் கூடியது.

எனினும், இன்றுவரை நவீன இடர் தணிப்பு கருவிகள் செயற்பாட்டில் உள்ளதுடன் இதன் காரணமாக எஞ்சிய இடர் ‘‘குறைவானது’’ அல்லது ‘‘மிதமானது’’ ஆக வகைப்படுத்தக் கூடியது.

## இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

தற்போது தகவல் தொழில்நுட்ப கொள்கை வரையப்பட்டுள்ளதுடன் திணைக்களத் தலைவர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர், உதவித் தலைவர் மற்றும் தலைவர் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் அனுமதியைப் பெறுவதற்காக அடுத்துவரும் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

கணனிகளுக்கு அனுமதிக்கப்படாத ஊடுருபவர்களை தடுப்பதற்கும் சட்டத்துக்கு புறம்பான தலையீடுகளை தடுப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்புக்கு மேலதிகமாக வலையமைப்பு அனுகுவழி கட்டுப்பாடு மற்றும் செருகுதல், கண்டுபிடித்தல் போன்றன மீது விசேட கவனம் செலுத்தி முன்னேறிய கணனி அதிகாரமளித்தல் கட்டுப்பாடுகள் செயற்பாட்டில் உள்ளன.

தகவல் தொழில்நுட்ப சேவைகளின் ஏதேனும் இடைத்தடங்கள், அவசர கணனிகள் செயலிழத்தல் போன்றன விமான நிலைய தொழிற்பாடுகளை தடைப்படுத்தக் கூடியனவாகும். இவ்விடரினை கையாள்வதற்கு தொழிற்பாட்டு தடங்கல்கள் இடர் தணிப்பிற்காக தடுப்பு பராமரிப்பு, கண்டுபிடித்தல், கண்காணித்தல் மற்றும் வலிமையினை வளர்த்தல் ஊடாக நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், தடுப்பு நடவடிக்கைகள் ஊடாக தணிக்கப்பட்டுள்ளதுடன் வலையமைப்பிற்கான அனுகு வழியினை மட்டுப்படுத்தல் உள்நுழைபவர்களை கண்டுபிடிப்பதற்கான முறைமைகளை பொருத்துதல், இடர்கள் மற்றும் நலிவுத்தன்மைகள் பற்றிய முகாமைத்துவம் பற்றி முகாமைத்துவத்துக்கு தெரியப்படுத்துவதற்கு பாதுகாப்பு கண்காணிப்பு கருவிகளை பயன்படுத்துதல் போன்றன உள்ளடங்களாக கண்டுபிடித்தல் நடவடிக்கை ஊடாகவும் தணிக்கப்படுகின்றன.

தொடர்ச்சியான இடர் கணிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கு தகவல் தொழில்நுட்ப ஆளுகைக் கட்டமைப்பும் தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ கட்டமைப்பும் தாபிக்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப கருத்திட்டங்கள் நிறுவன மூலோபாயங்களுக்கு இசைவாக காணப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்காக வருடாந்த மீளாய்வுகள் பொறுப்பேற்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்ப வழக்கொழிதல் காலமுறையாக மீளாயப்படுகின்றன. தோற்றம் பெற்றுவரும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு இடர் கண்காணிக்கப்படுவதுடன் இடர் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக முற்செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் அமுலாக்கப்பட்டு வருகின்ற சில குறிப்பான இடர் தணிப்பு நுட்பங்கள் பின்வருமாறு:

பழுதுகளை உடனடியாக கண்டுபிடிப்பதனை உறுதி செய்யும் அதேவேளை இழப்புகளையும் சேதங்களையும் குறைப்பதற்கு தீ கண்டுபிடிப்பு மற்றும் அவசரகால திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன.

வலயமைப்பு மெய்நிராக்கம், சேவையகம் மெய்நிகராக்கம் மற்றும் திரட்டுதல் அத்துடன் களஞ்சிய மெய்நிகராக்கம் போன்ற முன்னேற்றகரமான தொழிநுட்பங்கள் விமான நிலையத்தில் உள்ள தரவு மையத்திற்கு துணையளிக்கின்றன. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது முதனிலை தரவு மையத்திலும் எட்ச் தரவு மையத்திலும் கிடைக்கப்பெறுகின்ற சேவையக தொகுதியினை மெய்நிகராக்குவதன் மூலம் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் செயலிழக்கும் காலத்தினை குறைப்பதற்கு இயலச் செய்கின்ற வியாபார தொடர்ச்சி சேவையினை நடைமுறையில் நிறைவேற்றுகின்றது. அத்துடன் அட்டவனைப்படுத்தப்பட்ட தரவு காப்பு பேணப்படுகின்றது. இதன் விளைவாக ஒட்டுமொத்த வன்பொருள் செயலிழப்பு இடம்பெறுகின்ற நிகழ்வின் போது ஆகக் குறைந்த தரவு இழப்புகளுடன் முறைமைகளை மீளமைப்பதற்கு அவை பயன்படுத்தக் கூடியனவான விருக்கின்றன.

கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள அனர்த்த மீட்பு நிலையத்தில் இருந்து தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் செயலிழக்கின்ற காலத்தினை குறைப்பதினை இயலச்செய்கின்ற வியாபார தொடர்ச்சி சேவைகளை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி தற்போது நிறைவேற்றுகின்றது. தற்போதய அனர்த்த மீட்பு பிரதேசத்தின் கூறுநிலை கட்டடமைப்பானது எதிர்காலத்தில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு இடமாற்றுவதற்கு அதிகளவு நெகிழ்வுத்தன்மையினை வழங்குகின்றது.

**06**

### இடர் அடையாளப்படுத்தல் - தொழில்முயற்சி வள திட்டமிடல் கிடைக்கப் பெறாமை

தொழில்முயற்சி வள திட்டமிடல் தீர்வு கிடைக்கப்பெறுதல் இற்றைவரையான, நம்பத்தகுந்த தரவு முகாமைத்துவ தகவல்களை வழங்குவதற்கு ஆதரவளிக்கின்றது.

நடைமுறையில் ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட ஏனைய அனைத்து வகையான இடர்கள் முழுவதிலும் எதிர்மறையான விளைவுகளைக் கொண்டுவரக்கூடிய "தகவல் வகை" இடர் ஒன்றை தோற்றம் பெறுவதற்கு இது இட்டுச் சென்றுள்ளது. தற்போது சிறிய நிறுவனங்கள் கூட தமது தொழிற்துறையினுள் நம்பத்தகுந்த முகாமைத்துவ தகவல்கள், போட்டி நன்மைகளை உருவாக்குவதனை மீட்பதற்கு தம்மை இயலச் செய்கின்ற தமது நிதி மற்றும் வழங்கள் செயற்பாடுகளில் அனைத்தையும் உள்ளடக்கிய தொழில்முயற்சி வள திட்டமிடல் தீர்வுகளைப் பயன்படுத்துகின்றன.

### இடர் மதிப்பீடு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சாத்தியமான தாக்கம்

தற்போது இவ்விடர் "உயர்வானதாக" வகைப்படுத்தக்கூடியது.

### இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

குறித்த இடரினைப் குறைப்பதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் மூலம் எடுக்கப்பட்ட முன்னைய இடர் தணிப்பு அனுகுமுறைகள் தோல்வியடைந்தன. எனவே, தொகுதியொன்றினை பணிக்கமர்த்துதல் மூலம் முறைமையொன்றினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது, நிதி மற்றும் வளங்கள் சங்கிலி முகாமைத்துவ பிரிவுகளில் தொழிற்பாட்டினை உள்ளடக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதன் மீது நிதி, வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவுகள் கூட்டாக இணைந்து பணியாற்றுகின்றன. அனைத்து தொகுதிகளும் பணிக்கமர்த்தப்படுகின்ற போது பெறுகை மேற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனூடாக, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் முழுமையான வசதியுடைய தொழில்முயற்சி வள திட்டமிடல் முறைமை கிடைக்கப்பெறும்.

**07**

### இடர் அடையாளப்படுத்தல் - வானூர்திகள் நிகழ்வுகளுடன் / விபத்துக்களுடன் தொடர்புபட்ட இடர்

ஏதிர்நோக்காத காரணங்களின் விளைவாக சாத்தியமான இடர்கள் காணப்படலாம்.

### இடர் மதிப்பீடு

தற்போது கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தில் இடர் காரணி குறைவாக காணப்படுகின்றது.

### இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

மேற்குறித்த இடரினை தணிப்பதற்கு ஒழுங்குவிதி, கல்வி, மற்றும் பயிற்சி என்பன ணையளிக்கின்றன. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களையும், பாதுகாப்பு, ஆளணி உத்தரவுப்பத்திரம் வழங்குதல், வானூர்தியினைப் தொழில்படுத்தல், விமான ஓடுதளம், விமான போக்குவரத்து சேவைகள், விபத்து விசாரணைகள் மற்றும் சுற்றாடல் போன்றவற்றில் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களையும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளையும் கடைப்பிடித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் மூலம் காலமுறையான கண்காணிப்பு கணக்காய்வுகள் போன்றன கொண்டுநடாத்தப்படுதல்.

**08**

### இடர் இனங்காணுதல் - மோசடிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் செயலிழத்தல்

இடரின் மட்டத்தினை அறிந்து கொள்வதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகள் இடர் முகாமைத்துவத்துக்கு வசதியளிப்பதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு உதவுகின்றது. உள்ளகக் கட்டுப்பாடுகள் மனிதர்களினால் நிறைவேற்றப்படுகின்றமையினால் மோசடிகளுக்கும் உள்ளக செயற்படுகள் செயலிழப்பதற்குமான இடர் காணப்படுகின்றது.

### இடர் மதிப்பீடு

உயர்வான இடர் காணப்படுமாயின் அது தொழில்படுத்தல்களுக்கு தடங்கல்களை ஏற்படுத்தும், இலாபம் இழப்பு ஏற்படும் மற்றும் மூலவளங்கள் விரயமாகும்.
எனினும், வரலாற்று அனுபவத்தினைக் கருத்திற்கொண்டு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கமானது "குறைந்தது" ஆக தரப்படுத்தக்கூடியது.

### இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

தரநிர்ணயமான நிதியில் நடைமுறைகள் மற்றும் ISO முறைமை கணக்காய்வுகள் (இணங்குவித்தல் கணக்காய்வுகள்) போன்ற முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொழில்படுத்தப்படுகின்றது. நிறுவனத்தினுள் உள்ளக அணியினால் கொண்டு நடாத்தப்படுகின்ற கிரமமான முகாமைத்துவ கணக்காய்வுகள் மூலம் துணையளிக்கப்படும் உள்ளக கணக்காய்வு மற்றும் தர உத்தரவாத பிரிவினால் செயல்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளின் காலமுறையான மீளாய்வு அமுலாக்கமும் மேற்கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| 09 | **இடர் அடையாளப்படுத்தல் - விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சொத்துகளுக்கான இழப்பு அல்லது சேதம்**<br><br>இது இயற்கை அனர்த்தங்கள் அல்லது ஆபத்துக்களினாலே பயணிகள் ஊழியர்கள், தொழிற்சங்கங்கள் போன்ற இணைந்த தரப்பினர் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகளினாலோ தோன்றலாம்.<br><br>**இடர் மதிப்பீடு**<br><br>மேலதிக செலவுகள் மற்றும் இலாபம் குறைவடைதல் என்பன விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் நிதி மீது நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.<br><br>எனினும், இவ்வகையான இடர் பற்றிய வரலாற்று ரீதியான தாக்க அனுபவத்துக்கு அமைய இவ்விடர் ''குறைவானது அல்லது மிதமானது'' ஆக தரப்படுத்தப்படலாம்.<br><br>**இடர் கட்டுப்பாடும் தணித்தலும் - விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி சொத்துகளுக்கான இழப்பு அல்லது சேதம்**<br><br>பொருத்தமான பாதுகாப்பு மற்றும் தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றுக்கு மேலதிகமாக அவசர திட்டங்கள் கிரமமான அடிப்படையொன்றில் ஒத்திகை பார்க்கப்படுகின்றன. காப்புறுதி காப்பீடு ஒன்றின் ஊடான தணித்தல் கட்டாயமான நடைமுறையாக விளங்குகின்றது. |
| 10 | **இடர் அடையாளப்படுத்தல் - பெறுகை / வழங்கல் செயன்முறைகளில் கேள்விச் சபை நடைமுறையுடன் தொடர்புடைய பல்வேறு இடர்**<br><br>**இடர் மதிப்பீடு**<br><br>தேசிய பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக பின்பற்றப்படுகின்ற பெறுகை நடைமுறை அதிக காலத்தை எடுப்பதன் காரணமாக நியாயமான விலையில் சிறந்த தரமுள்ள பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகள் இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அத்துடன் கேள்வியினை நிறைவு செய்வதற்கான கால அளவும் மிக நீளமானதாகும். அதேபோன்று, வழங்களில் விலைமனுதாரர்கள் ஆர்வம் காட்டாதிருக்கலாம். இவ்விடர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி வர்த்தகத்தினை பாதிக்கின்ற ஒன்றாகும். எனினும், சாதாரண முறையொன்றில் இவ்விடர் மதிப்பிட முடியாது என்பதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி தொழிற்படுகின்ற நியதிச்சட்ட கட்டமைப்பின் காரணமாக இவை தோன்றுகின்றன. எனவே, இவை ''குறைந்தது அல்லது மிதமான'' தாக்கமாக வகைப்படுத்தப்படலாம். |
| | **இடர் கட்டுப்பாடும் தணித்தலும்**<br><br>விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி உடன் வர்த்தகம் செய்வதற்கான வழங்குனர்களின் கொள்வனவு விலை குறிக்கப்பட்ட தொர்புகளை குறுக்கு பரிசோதனை செய்வதன் மூலமும் சந்தை ஆய்வு ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற சுயாதீன தொர்புகளில் இருந்தான சரிபார்த்தல்கள் மூலமும் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விழிப்புப் பரிசோதனைகள் ஊடாக மதிப்பிடப்படுகின்றது. வளங்கள் ஒன்றினை உறுதி செய்வதற்கு நாம் அவர்களின் முறைமைகள், செயன்முறைகள், பெற்றுக்கொள்ளும் மூலங்கள், சுற்றாடலுக்கும் சுற்றாடலில் இருந்தான தாக்கங்களை தொடர்ச்சியான பரிசோதிக்கின்றோம். உரிய நேரத்திற்கு விநியோகித்தல், இசைவுத்தன்மை, நிலைபெறு தன்மை, வழங்குனர்களின் நிதி உறுதிப்பாடு போன்றவற்றுக்கு சம முக்கியத்துவம் அளிக்கின்றோம். கேள்வி ஆவணங்களில் எமது எதிர்பார்ப்புகள் தெளிவாக விதந்துரைக்கப்படுகின்ற அதேவேளை பாரிய அளவிலான வெளிப்படைத் தன்மையினை ஊக்குவிப்பதற்காக நாம் வாசகங்களையும் நிபந்தனைகளையும் உள்ளடக்குகின்றோம்<br><br>வெளியிலிருந்து சேவையை பெற்றுக்கொள்ளுதல், தொடர்ச்சியான வழங்கள், உரிய கால விநியோகம், மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவை என்பவற்றுடன் இணையப்பெற்ற இடரினை கட்டுப்படுத்துவதற்கு ஒப்பந்த உடன்படிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன.<br><br>எமது உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய வழங்கள் சங்கிலியில் பங்கேற்பதற்கு வாய்ப்புமிக்க வழங்குனர்கள் தகமை பெற்று ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட உடன் வழங்குனர்கள் மூலமான செயலாற்றுகையின்மை இடரானது செயலாற்றுகை முறிகள் விலைமனு முறிகள் என்பன ஊடாக அறிமுகப்படுத்தப்படும் தர நியமமிக்க நிபந்தனைகள் ஊடாக தணிக்கப்படுகின்றன. |
| 11 | **இடர் அடையாளப்படுத்தல் - பயன்பாட்டுச் சேவைகள் தடைபடுத்தல்**<br><br>சர்வதேச விமான நிலையம் ஒன்றாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பல்வேறு பயன்பாட்டு சேவைகளை பெற்றுக்கொள்வதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு இச் சேவை வழங்குனர்கள் மிக முக்கியத்துவம் மிக்கவர்களாக காணப்படுகின்றனர். இச் சேவையில் ஏற்படும் ஏதேனும் தடங்கல்கள் காரணமாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தொழிற்பாடு நேரடியாகவும் பாதகமாகவும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.<br><br>**இடர் மதிப்பீடு**<br><br>போதிய தணித்தல் நடவடிக்கைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டும் செயற்பாட்டிலும் உள்ளதனால் சாத்தியமான தாக்கமான ''குறைவானது'' ஆகும். |

### இடர் கட்டுப்பாடும் தணித்தலும்

பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான இடைத்தடங்கலற்ற நீர் விநியோகத்தினை உறுதி செய்யும் பொருட்டு மேலதிக குழாய் கிணறுகள் ஊடாக நிலக்கீழ் நீர் பெற்றுக்கொள்ளும் முறைமையினை மேம்படுத்தல். மின்சாரம் தடைப்படுகின்ற வேளைகளில் தொடர்ச்சியான திட்டமாக வேண்டப்படும் கொள்ளவுடன் கூடிய போதிய எண்ணிக்கையான மின்பிரப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

### 12 இடர் அடையாளப்படுத்தல் - ஊழியர் புரள்வு/அறிவாளிகள் விலகிச்செல்லுதல் இடர்

தற்போது காணப்படுகின்ற போக்குரத்து கேள்வியினை நிறைவு செய்வதற்கு நடுத்தர காலத்திலும் நீண்ட காலத்திலும் முக்கிய கூறுகளில் ஒன்றாக பண்டார நாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கல் திட்டங்கள் குறித்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. விமான நிலைய அபிவிருத்திக்கு துணையளிப்பதற்கு திறமைவாய்ந்த போதுமையற்ற தொழிற்படை வழங்களானது வளர்ச்சியினை மோசமாக பாதிக்கும். விமான நிலைய தொழிற்பாட்டில் அனுபவமும் அறிவும், குறிப்பாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் முன்னெடுக்கின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களில் கீழ் முக்கியத்துவம் பெற்றதாகும்.

### இடர் மதிப்பீடு

அதி கூடிய ஊழியர் புரள்வு விகிதங்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியினை பல்வேறு வழிகளில் எதிர்மறையாக பாதிக்கக் கூடியன. புதிய ஊழியர்களை சேரத்துக்கொள்வதற்கும் பயிற்றுவிப்பதற்குமான தொடர்ச்சியான தேவையுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் உண்மையான நோக்கு மற்றும் பணியில் இருந்து இலகுவாக திசை திருப்பிக் கொள்கின்றது. ஊழியர்களை தக்கவைபதன் மூலம் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது அடிநிலையினை சாதகமாக பாதிக்கின்ற உயர்திறன் உள்ள தொழிற்படையினை வழங்க முடியும். போதிய பயிற்சி வழங்குதல் மற்றும் சிறப்பாக செய்யப்பட்ட வேலை ஒன்றுக்காக ஊழியர்களுக்கு வெகுமதி அளித்தல். நம்பிக்கையான நிறுவன கலாசாரம் ஒன்றினை தோற்றுவித்தல் என்பன ஊடாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது ஊழியர் புரள்வு விகிதங்களை குறைக்கலாம். கம்பனியின் வருவாயிலும் இலாபத்திலும் ஊழியர் புரள்வு நேரடியான தாக்கமொன்றினை கொண்டுள்ளது. ஆட்சேர்த்தல் செலவுகள், ஊழியர் பயிற்சி, விற்பனை இலக்குகள் மற்றும் உற்பத்தித் திறன் போன்றன இந் நோக்கில் பங்களிப்பவையாகும். வருமான தாக்கமானது தெளிவாக பிரிவு, ஊழியரின் பதவி மற்றும் ஊதியங்கள் மீது மிக உயர்ந்தளவில் தங்கியிருக்கக் கூடியன.

எனினும், தற்போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் ஊழியர் புரள்வு விகிதாசாரமானது 4 வீதத்திற்கு குறைவாக இருப்பதுடன் இடர் தாக்கம் மிதமானதாக காணப்படுகின்றது.

### இடர் கட்டுப்பாடும் தனித்தவும்

தொழில்சார் பதவியணியின் பாகம் ஒன்றினை தக்கவைக்கும் விதத்தில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் ஊதியக் கட்டமைப்பானது தொழில் சார், கல்வி மற்றும் தொழில்நுட்ப தகமைகளுக்கான விசேட கொடுப்பனவு ஒன்றினை வழங்குகின்றது. வெளிநாட்டு தொழில் மற்றும் வெளிப்பாட்டு வாய்ப்புகள் கொடுப்பனவு அற்ற நியதிகளில் வழங்கப்படுவதுடன் பிணைகப்பட்ட ஒப்பந்தங்களுடன் இணையப்பெற்றவை.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் எதிர்கால மனிதவலுத் தேவைப்பாடுகளுக்கான சிறப்பான தயார் படுத்தலுக்கான உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக மக்கள் அபிவிருத்தி மற்றும் பின்தொடர் திட்டமிடல் சட்டகம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

### இடர் அடையாப்படுத்தல் - வான்வழி வருமானத்தினை உகப்பாக்கம் செய்யாமை

(அ) முன்னெடுக்கப்படுகின்ற, எப்போதும் மாற்றமடைந்து வருகின்ற தொழில்நுட்ப மற்றும் நடைமுறைகளுடன் இணங்கும் விதத்தில் கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தினுள் விமான போக்குவரத்தினை முகாமை செய்து மற்றும் தொழிற்படுத்துகின்ற இடர் பிராந்திய ரீதியாகவும் உலக அளவில் ஏற்புடையதாகும்.

போதாமை என்ற அடிப்படையில் ஏதேனும் இடர் கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தின் எல்லைகளை இழப்பதற்கான வாய்ப்பிற்கு இட்டுச்செல்லும் (1,717,148.2 சதுரக் கிலோமீற்றர் பரப்பு) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கான மேலால் பறக்கும் வருமானத்தினை இலக்கச் செய்யும்.

உதாரணமாக: சர்வதேச சிவில் போக்குரத்து விமான அமைப்பின் ஏற்றுக்கொள்ளத்தக்க தரநிர்ணயத்திற்கு கீழ் பாதுகாப்பு மட்டத்தினை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பேணுமாயின் சர்வதேச சிவில் விமான போக்குரத்து அமைப்பு அயல்நாடுகளுக்கு வான் பரப்பின் பாகங்களை ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கும்.

(ஆ) கட்டண மாற்றங்களுக்கான கேள்வியின் உயர் நெகிழ்ச்சி இடர் (உயர் விலை உணர்வுத் தன்மை)

13 விமான நிறுவனங்களுக்கான சில கட்டண விகிதங்கள் கடந்த ஆண்டுகளில் மீளாயப்படாது / அதிகரிக்கப்படாதிருந்த போதிலும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தினை தவிர்த்து மாற்றுவழி விமானப் பாதைகள்/குறுக்குப் பாதைகள் போன்றவற்றினை நாடுவதற்கு அவர்களை ஊக்குவிக்கின்ற விமான நிறுவனங்களின் நோக்கிலிருந்து உயர் விலை உயர்வுத் தன்மையின் காரணமாக விலைகளின் சிறு அதிகரிப்பு ஒன்றுக்காகவும் வருவாய் இழப்பு இடரினை எதிர்கொள்கின்றது.

உதாரணம் மேலால் பறக்கும் கட்டணங்களுக்கான ஏதேனும் அதிகரிப்பானது இருபது நிமிடங்களுக்கும் குறைவாக கொழும்பு விமான பிராந்தியத்தில் இடமாறுகின்ற ஹொங்கொங் மற்றும் ஜொஹன்னஸ்பேர்க் நகரங்களுக்கிடையிலான இடையிலான எல் 894 மற்றும் எல் 774 மீதான விமானங்களுக்கு கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தை ஒட்டுமொத்தமாக தவிர்த்து பயண வழியினை மாற்றுவதற்கு வழியமைக்கும்.

(இ) வேறு சாத்தியமான இடர் காரணிகளாக பின்வருவன கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1) பிராந்தியத்தில் உள்ளவற்றுக்கு இணங்க நவீன விமான போக்குவரத்து முகாமைத்துவ முறைமை கிடைக்கப்பெறாமை

2) சர்வதேச சிவில் விமான அமைப்பின் வழிகாட்டல்களுடன் இணங்காமை.

## இடர் மதிப்பீடு

எவ்வாறாயினும் தற்போது இற்றைவரையான விமான வானோடல் சேவைகளை வழங்குவதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது உபகரணங்கள், நடைமுறைகள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதுடன் கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தினை பாதுகாத்தல் நோக்கிய விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் முற்செயற்பாடு மிக்க வகிபாகமும் காரணமான இடர் தாக்கம் குறைவானதான காணப்படுகின்றது.

## இடர் கட்டுப்பாடும் தனித்தலும்

முன்னேற்றமடைந்த தொழிநுட்பம் மற்றும் நடைமுறைகள் மற்றும் மனிதவள நிபுணத்துவம் போன்ற போதிய இடர் தடுப்பு பொறிமுறைக் கருவிகள் முறையாக செயற்பாட்டில் உள்ளதுடன் அறிவுப் பாய்ச்சல் கிரமமாக சமகாலப்படுத்தப்பட்டு வருகின்றது.

விமானத் தூரங்களை அடிப்படையாகக் கொண்ட வானோடலை குறைப்பதற்கும் செலாற்றுகை அடிப்படையாக கொண்ட வானோடலுக்கும் நேரடி விமான பாதைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தினை தவிர்ப்பதற்கான விமான நிறுவனங்களின் தெரிவு இடர் குறைக்கப்படக் கூடியது.

இடரினை குறைந்தளவில் பேணுவதற்கான கட்டுப்பாட்டு உபாயம் ஒன்றாக விகிதக் கட்டணங்களுக்கான உயர்வான கேள்வி நெகிழ்வுத் தன்மை காணப்படுகின்ற விகித உணர்வு மிக்க பயண வழிகளில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது விமான போக்குவரத்து முறமைகளில் உள்ள பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க நியம மட்டமொன்றில் சீர் செய்வதற்கு இயலுமாக விருக்கின்றது.

அ. விமான போக்குவரத்து முகாமைத்துவ எதிர்கால தேவைகளுடன் இணங்கும் விதமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

ஆ. தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டத்தினை அதிகரித்தல்.

இ. நடைமுறைகளை தொடர்ச்சியான கண்காணித்தலும் சமகாலப்படுத்தலும்.

ஈ. உலக அளவிலான பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் சிறந்த தரப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்காக ஏனைய நாடுகளுடன் அளவிடுதல்.

உ. அவசியப்படுகின்றவாறு அயல்நாடுகளுடனான ஒப்பந்தக் கடிதங்களை மீளாய்தல்.

ஊ. ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி செயன்முறைகளை கண்காணித்தல்.

எ. விமான போக்குவரத்து கட்டுப்பாடு ஊடாக விமான போக்குவரத்து கம்பனிகளின் மத்தியில் சர்வதேச சிவில் விமான அமைப்பின் தரநியமம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கான பிந்திய திருந்தங்களை வழங்குதல். ஒலி பெயர்த்தல் மதிப்பிடப்பட்டு சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஏ. மதிப்பீட்டுக்காககவும் சீராக்கல் நடவடிக்கைக்காகவும் அதி உயர் மீதிறன் ஒலி பெயர்த்தல் நிகழ்தகவாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

| 14 | இடர் அடையாளப்படுத்தல் - கொழும்பு தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் பிராந்தியத்தினுள்/விமான தகவல் பிராந்தியத்தினுள் தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் கொள்ளவுகள்.<br><br>வான்வழி நோக்கில் சர்வதேச சிவில் விமான அமைப்பின் வருடாந்த சமவாய ஒப்பந்தங்களுக்கான கடப்பாடு ஒன்றாக தொடர்புடைய தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் பிராந்தியத்தினுள் வானூர்தி நிகழ்வொன்றில் தப்பியவர்களை உயிர் பிழைப்பிப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் தேடுதல், கண்டுபிடித்தல், உதவுதலுக்கான பொறுப்பு தொடர்புடைய அரசை சார்ந்ததாகும். இப் பொறுப்புடமையை ஏற்றுக்கொள்வதற்கு இயலாமை இச் சமவாயத்தின் கையொப்ப நாடொன்றாக சர்வதேச சிவில் விமான அமைப்புடனான அத்தகைய ஒப்பந்தகங்களின் பாரதுாரமான மீறுகை ஒன்றாக இருக்கும்.<br><br>தற்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் அரிதாக காணப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவது குறைவாயினும் அவை நிகழுமெனின் அது பாரிய மோசமான நிகழ்வொன்றாக இருக்கும். அதனை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது<br><br>குறிப்பு:<br><br>சுனாமி, நில நடுக்கம், யுத்தம் போன்ற ஆபத்தான நிலமைகளில் விசேடமாக இக் கொள்ளளவுகள் மிக முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளதுடன் அத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு அனைத்து வேலைகளிலும் நாடு தயாராக இருக்க வேண்டும்.<br><br>பிரதான இடரானது சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு மற்றும் சர்வதேச விமானப் பயண அமைப்பு போன்ற தொடர்புடைய முகவர் நிறுவனங்களினால் கொழும்பு தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் பிராந்தியம்/விமான தகவல் பிராந்தியம் பாதுகாப்பற்ற வான்பரப்பொன்றாக பிரகடப்படுத்தப்படும் காரணத்தினால் விமான நிறுவனங்கள் கூட்டிணைவதை தவிர்க்கலாம். இதன் விளைவாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு வருவாய் இழப்பு ஏற்படலாம்<br><br>மிக முக்கியமாக அதன் பிரசைகள் பாதிக்கப்பட்ட துயரத்தக்குள்ளான நாட்டினை திருப்பதிப்படுத்துவதற்கான அத்தகைய கடப்பாடுகளை நாம் நிறைவேற்றத்த தவறினால் இராஜதந்திர எதிர்விளைவுகளை தோற்றுவிக்கலாம். இது எமது அரசுக்கு பங்கம் ஏற்படுத்தலாம்.<br><br>**இடர் மதிப்பீடு**<br><br>பிராந்தியத்தில் உயிர்ப்புமிக்க விமான வானோடல் சேவை வழங்குனராக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி தற்போது காணப்படுவதனால் ரத்மலானையில் அமையப்பெற்றுள்ள அதன் காப்பாற்றுதல் ஒருங்கினைப்பு நிலையம் ஊடாக தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் கொள்ளவு நியதிகளை ஆர்வத்துடன் ஒருங்கிணைக்கின்றது. சாத்தியமான இடர் காரனி குறைவானதாகும்.<br><br>**இடர் கட்டுப்பாடும் தனித்தலும்**<br><br>தனி ஒரு சேவை வழங்குனராக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது விமான காப்பாற்றுதல் ஒருங்கினைப்பு நிலையத்தினை குறித்தொதுக்கி உள்ளதுடன் வசதியினை செயற்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயன்முறையினையும் தேவையான மனித வளங்களையும் திரட்டுவதனை முன்னெடுக்கின்றது.<br><br>உயிர்ப்புமிக்க நியதிகளில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது இரு அயல்நாடுகளுடன் (அவுஸ்டேலியா மற்றும் மாலைதீவு) தாபிக்கப்பட்ட தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் பணி ஒப்பந்தங்களை கொண்டுள்ளதுடன் தற்போது இதே ஒப்பந்தங்களை தாபிப்பதற்கு இந்தியா மற்றும் இந்தோனேசியாவுடன் நெருக்கமான பணியாற்றி வருகின்றது.<br><br>மிக முக்கியமாக அவுஸ்ரேலிய கடல் பாதுகாப்பு அதிகார சபையினால் அனுசரனை அளிக்கப்படும் இந்து சமுத்திர தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இம் முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டத்தின் ஊடாக எமது தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் கொள்ளவினை அதிகரிப்பதற்கு நொருங்கி பணியாற்றுகின்றோம்.<br><br>அத்துடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது சா்வதேச சிவில் விமான அமைப்பின் ஆசிய பசுபிக் தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் படையணியில் உயிர்ப்புடன் ஈடுபட்டது. |
|---|---|

## நிதியியல் இடர்

| | |
|---|---|
| **01** | இடர் அடையாளப்படுத்தல் - கடன் இடர் / தவனை தவறுதல் இடர்<br><br>வேண்டப்பட்ட கொடுப்பனவுகளை செலுத்த தவறுவதன் மூலம் ஏதேனும் வகையான படுகடனை கடன் படுவர் ஒருவர் செலுத்தத் தவறுகின்ற இடர் ஒன்றினை இது குறிப்பிடுகின்றது. இவ் இடரானது கடன் வழங்குபவர் மற்றும் முதன்மை தொகை மற்றும் வட்டி இழப்பு, காசுப் பாய்ச்சலுக்கான தடங்கள், அதிகரிக்கப்பட்ட சேகரித்தல் செலவுகள் ஆகியவற்றினை அடிப்படையில் உள்ளடக்குகின்றது.<br><br>இடர் மதிப்பீடு<br><br>இவ் இடர், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி காசுப் பாய்ச்சல் தொடர்பில் நேரடி உறவினை கொண்டிருப்பதனால் ''உயர்வான இடர்'' காரணியாக வகைப்படுத்தக் கூடியது.<br><br>இடர் கட்டுப்பாடும் தனித்தலும்<br><br>கடன் தொடர் ஒன்றினை அனுமதிப்பதற்கு முன்னர் அல்லது வழங்குவதற்கு முன்னர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது தவணை தவறுதல் இடரை போதியளவு காப்பிடுகின்ற முன் நிர்ணயிக்ககப்பட்ட கடன் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அதன் பெரும்பான்மையான படுகடனாளிகளிடம் இருந்து வங்கி உத்தரவாதங்களை பெறுகின்றது.<br><br>படுகடனாளி அறவீட்டு மட்டத்தினைத் தாண்டுகின்ற இடர் ஒன்று காணப்படுமாயின் விமான நிலையத்தில் சேவை ஒன்றினை வழங்குவதற்கான அல்லது வர்த்தக ரீதியான இடம் ஒன்றுக்கான ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மேலும் சட்ட ஏற்பாடுகளை கொண்டுள்ளது. பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சலுகைகள் மூலம் உழைக்கப்படுகின்ற புரள்வுக்கான நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த வழியலகுகளுடன் உத்தரவாதம் அளிக்கப்பட்ட செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைசாத்திடப்படுகின்றன. வங்கி உத்தரவாதங்கள் ஒப்பந்தங்களுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளன இவை அறுதி செய்த இழ்பீடு, தண்டப்பணங்கள் மற்றும் காலம் மற்றும் தீர்பனவு நடவடிக்கைகளையும் காப்பிடுகின்றன.<br><br>தவணைக் கொடுப்பனவு தவறுவதிலிருந்து தோற்றுகின்ற திரவத்தன்மை இடரானது அரசாங்க பிணையங்கள் மூலம் வழங்கப்படுகின்ற கடன் விகிதங்களுக்கு மேல் அல்லது அதற்கு மேலான தவணை தவறுதல் வட்டி ஒன்றினை அறவிடுவதன் மூலம் தணிக்கப்படுகின்றது. |
| **02** | இடர் அடையாளப்படுத்தல் - அந்நியச் செலாவணி<br><br>நிலையான சம பெறுமதியனை கொண்டிருக்காத ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாணயங்களைக் கொண்டு கொடுக்கல்வாங்கல் செயப்படுவதில் உற்பொதிந்துள்ள வெளிப்பாடுகள் அல்லது நிச்சயமின்மைகள்.<br><br>இவ்வகையான இடர்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் கட்டுப்பாட்டை தாண்டியவை வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக இலங்கை ரூபாய் மதிப்பிறக்கம் உயர்வானதாயின் இவ் இடர் அதிகரிக்கும் உதாரணமாக : 2015 ஆம் ஆண்டின் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் இலாபம் ரூபா 3.5 பில்லியன் செலாவணி நட்டத்தின் மூலம் மோசமாக பாதிக்கப்பட்டது..<br><br>இலங்கை ரூபா எதிர் ஐக்கிய அமொரிக்க டொலர் நாணய மாற்று வீதத்தின் தாக்கத்தின் கடுமையான தன்மையை அறியும் பொருட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>வருடம் 201 முதல் 2016 வரை ரூபா / ஐ.அ.டொ செலாவணி மாற்று விகிதம் 110.95 இருந்து 149.80 ஆக 35 வீதத்தினால் அதிகரித்தது.<br><br>இடர் மதிப்பீடு<br><br>அடிப்படை அறிக்கையிடும் நாணயத்திற்கான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களின் மாற்றல்கள் மீதான இலாபம் மற்றும் திரவத் தன்மை மீதான பாதகமான தாக்கம்<br><br>எனினும், இவ் இடர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணய மற்றும் உறுதிப்பாட்டுக் கொள்கையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பாதகமான அதேபோன்று சதகமான நிதியியல் பெறுபேறுகள் இரண்டும் தளம்பலில் உருவாக்கலாம்.<br><br>இடர் கட்டுப்பாடும் தணித்தலும்<br><br>பொருத்த நுட்பம் ஊடாக உள்ள காப்பீடு (சாத்தியமான சந்தர்பங்களில் வெளிநாட்டு நாணயங்களில் உள்ள சொத்துகளையும், பொறுப்புகளையும் சமப்படுத்தல்) |

| | |
|---|---|
| **03** | இடர் அடையாளப் படுத்தல் - வட்டி வீத இடர் (குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால முதலீடுகள்)<br><br>இடர் மதிப்பீடு<br><br>காசுப் பாய்ச்சல் மீதான சந்தர்ப்ப செலவு முதலிடப்பட்டுள்ளதுடன் இலாபத்துக்கு முந்திய வரிக்கான குறைக்கப்பட்ட பங்களிப்பினை தோற்றுவிக்கின்ற முதலீடுகள் மீது குறைந்த இலாபங்கள்.<br><br>சாத்தியமான இடர் தாக்கத் "குறைந்தது அல்லது மிதமானது" ஆக தரப்படுத்தக் கூடியது<br><br>இடர் கட்டுப்பாடும் தணித்தலும்<br><br>வட்டி வீத இடரினை குறைப்பதற்கும் வருவாயினை மேம்படுத்துவதற்கும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பின்வரும் பொறிமுறைகளை பின்பற்றுகின்றது.<br><br>உயர் விகிதங்களில் நீண்டகால தொகுதிக் கடன்களில் முதலிடுதல்.<br><br>நாளாந்த ஒரே நாள் திறைசேரி உண்டியல்களில் முதலீடுதல்.<br><br>நாளாந்த, குறித்த தினங்களின் எண்ணிக்கை, மாதாந்த காலாண்டு வருடத்துக்கு இரு முறை மற்றும் வருடாந்தம் போன்ற பல்வேறு முதிர்ச்சிக் காலங்களின் கீழ் முதலிடுதல்.<br><br>திறைசேரி உண்டியல்கள் ரூபா நிரந்தர வைப்புகள் ஐக்கிய அமெரிக்க டொலர் வைப்புகள் போன்ற வேறுபட்ட உற்பத்திகளில் முதலிடுதல்.<br><br>குறித்தவாறு முதலிடப்பட வில்லையாயின் நாளாந்த மிகை காசு இடமாற்றலான நாளாந்த வட்டி உழைக்கும் நிதி முகாமைத்துவ கணக்கு ஒன்றை பேணுதல். |

| 04 | இடர் அடையாளப்படுத்தல் - உற்பத்தி விகிதாசாரத்தின் உயர் மட்டம் |
|---|---|
| | தொழிற்துறையில் உள்ள ஏனையோருக்கு இணங்க விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி உற்பத்தி விகிதாசாரத்தின் அடிப்படையில் மூலதனத்தினை கண்காணிக்கின்றது. நடைமுறையில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் உற்பத்தி விகிதாசாரம் 48 வீதமாகும்.<br><br>இடர் மதிப்பீடு<br><br>நாட்டுக்கான உத்தரவாதத்தின் கீழ் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் அபிவிருத்திக்காக பொதுத் திறைசேரியின் சம்மதத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தும் உள்ளடங்கி இருப்பதனால் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி மீதான சாத்தியமான தாக்கம் "குறைவானது" ஆக தரப்படுத்தப்படலாம். எனினும் உயர் வட்டிச் செலவானது இலாபத் தன்மை மீது எதிர்மறையான தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்கும்.<br><br>இடர் கட்டுப்பாடும் தணித்தலும்<br><br>அரசாங்க நாட்டுக்கான உத்தரவாதத்தின் கீழ் இது உள்ளடக்கப்பட்டுள்ளதனால் இப்படு கடன்களுடன் இடர் எதுவும் தொடர்புபட்டிருக்கவில்லை. |




சரக்குகள்

# 248,347

14% வளர்ச்சி




“நிறை மற்றும் பருமன்
உண்மையாகவே
முக்கியத்துவம்
பெறும் இடம்...”

# நிதி அறிக்கை மற்றும் நாட்காட்டி

**நிதி அறிக்கை**


| | |
|---|---|
| சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை | 87 |
| விரிவான வருமானக் கூற்று | 95 |
| நிதி நிலைக்கூற்று | 96 |
| பங்குகள் மாற்றங்கள் கூற்று | 97 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 98 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 99 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான தெளிவுபடுத்தும் குறிப்புகள் | 128 |


**நிதிசார்ந்த நாட்காட்டி**

2015 ஆம் வருடத்துக்கான இறுதி பங்கிலாபம் **2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆந் திகதி** செலுத்தப்பட்டது.

2016 மற்றும் 2017 இடைக்கால பங்கிலாபம் **2016 ஒக்டோபர் 21 ஆந் திகதி** செலுத்தப்பட்டது.

2016 ஆம் வருடத்துக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் **2017 ஜுன் 09 ஆந்** திகதி கைச்சாத்திடப்பட்டது.

34 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் **2017 ஜுன் மாதம் 30 ஆந் திகதி** நடாத்துவதற்குள்ளது.

# சுயாதீனக்
# கணக்காய்வாளர்களின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதி கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை.

**1.1** 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வுஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்துவரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

-கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

-2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்கேஏஸ்16 –ஆதனம், பொறி மற்றும் உபகரணம்: ரூபா 16,061 மில்லியன் கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் நியமத்தின் 51 ஆம் பிரிவின் பிரகாரம் அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமல் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) எல்கேஏஸ்36 –சொத்துக்களுக்கான காலக்கழிவு:ஆரம்பத்திலிருந்து மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்தின் (எம்ஆர்ஐஏ) தொழிற்பாடுகள் அதன் ஆரம்பத்திலிருந்து சரிவடைந்து காணப்பட்டதுடன் தற்போது விமான அசைவுகள் ஒரு சர்வதேச விமானத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும்,மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்திற்குச் சொந்தமான ரூபா 25,123 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பான காலக்கழிவு மதிப்பீடு மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன் காலப்பகுதியை விஞ்சிய ரூபா 1,027 மில்லியன் கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | தொகை ரூபா. மில்லியன் | ஆகக்கூடிய கடன் காலப்பகுதி |
|---|---|---|
| தரையிறங்குதல், தரித்தல் மற்றும் மேலாக பறத்தல் கட்டணங்கள் | 693 | நாட்கள் 59 |
| விமான பாலக் கட்டணங்கள் | 134 | நாட்கள் 30 |
| வாடகை | 200 | நாட்கள் 03 |
| **மொத்தம்** | **1,027** | |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு | புதிய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்ட பின்னர் கம்பனியானது அதன் பெயரை "வரையறுக்கப்பட்ட (தனியார்)" அல்லது "(பிவீரீ) எல்ரிடி" என்ற சுருக்கத்தை பின்னால் இணைப்பதன் மூலம் பொது ஆவணங்களில் வெளிப்படுத்துவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும் கம்பனியானது அதன் வெளியீடுகளில் "(தனியார்)/ (பிவீரீ)" என்ற சுருக்கத்தை இணைக்காமல் தற்போதும் அதே பெயரில் இருந்தது. |
| (ஆ) | 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானசேவை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 2015 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையால் வழங்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கை | விமானநிலையங்களை ஸ்தாபித்தல் அல்லது விரிவுபடுத்துதல் மீதான பிரதான திட்டம் 2017 மார்ச் 31 வரை தயாரிக்கப்பட்டோ அல்லதுஇலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டோ இருக்கவில்லை. |
| (இ) | சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பு (ஐசீஏஓ) நியமங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையால் வழங்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கை | பாதுகாப்பு சேவைகளின் தலைவர் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>தேசிய சிவில் விமானசேவை பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையால் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்ட போதிலும் விசேடமான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 ஏப்ரல் 28 ஆந் திகதிய பிஈ/சீஓஎம்சீ/33/02 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் | அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள், ஏனைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.<br><br>மற்றப்பட்ட அந்த தேறிய சொத்துக்களிற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் மீதான 2003 யூன்02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 7.4.5 ஆம் பந்தி | சொத்துகளின் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபைகள் மற்றும் விசேட கணக்கெடுப்புச் சபைகள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 9.2 (ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பன பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி என்பவற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 9.3.1 (i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் (எஸ்ஓஆர்) திட்டம் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கானரூபா 2,378 மில்லியன்வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 6,909 மில்லியன்வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 4,531 மில்லியன் ஆனமுன்னேற்றத்தினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 2,808 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் நிதிக் கிரயம் ரூபா 1,570 மில்லியனால் குறைவடைந்தமை என்பன முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பெறுமதி சேர்க்கை

2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை படிப்படியாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டில் வீழ்ச்சியொன்று காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பெறுமதிச் சேர்க்கை ரூபா 5,813 மில்லியனால் அல்லது 50 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.3.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.65 | 2.09 | 1.68 | 1.29 | 1.78 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.60 | 2.06 | 1.65 | 1.23 | 1.72 |
| தேறியலாப விகிதம் (%) | 38 | 15 | 40 | 39 | 35 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் (ரூபா.) | 34,598 | 4,084 | 17,058 | 17,768 | 13,688 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 42 | 7 | 32 | 48 | 65 |
| பிரயாணியொருவருக்கான வருமானம் (ரூபா.) | 1,938 | 1,846 | 1,785 | 1,652 | 1,570 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுகிய கால வங்கி வைப்புக்கள் 140 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் 17 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் என்பன அதிகரித்தமைக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

(ஆ) 18 சதவீதத்தால் வருமானம் அதிகரித்தமை மற்றும் 37 சதவீதத்தால் நிதிக் கிரயம் குறைவடைந்தமை என்பன காரணமாக மீளாய்வாண்டின் போது தேறியலாப விகிதம் 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.அதன் பெறுபேறாக பற்கொன்றிற்கான உழைப்பும் நூற்றுக்கு 745 ஆல் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுடன் (கேபிஐ) ஒப்பீடு செய்யப்பட்டு கம்பனியின் பௌதீக ரீதியான செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| பிரதான செயலாற்றல் குறிகாட்டி | உள்ளபடியான அடைதல்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 61,637 | 56,156 | 54,960 | 51,972 | 48,416 |
| மொத்தப் பிரயாணி அசைவுகளின் எண்ணிக்கை | 9,466,248 | 8,505,740 | 7,780,724 | 7,330,421 | 7,079,920 |
| மொத்தப் இடைநிற் பிரயாணிகள் எண்ணிக்கை | 1,285,756 | 1,227,451 | 1,273,037 | 1,370,266 | 1,296,495 |
| மொத்தப் பிரயாணிகளிற்கான இடைநிற் பிரயாணிகள் விகிதம் | 1:7.4 | 1:6.9 | 1:6.1 | 1:5.3 | 1:5.5 |
| சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொன்கள்) | 248,347 | 220,422 | 209,607 | 194,020 | 186,618 |
| விமானமொன்றை கையாளுவதற்கான மொத்தக் கிரயம் (ரூபா.“000) | 216 | 256 | 171 | 177 | 164 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபிஐஎஸ்) மீதான வருடாந்த இலக்குகள் கம்பனியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கணக்காய்வில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பீடு செய்யமுடியாதிருந்தது.

(ii) 2018 ஆம் ஆண்டில் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 10 மில்லியன் பிரயாணி அசைவுகள் மற்றும் 1:7 ஆன மொத்தப் பிரயாணிகளிற்கான போக்குவரத்திலுள்ள பிரயாணிகள்விகிதம் ஆகிய இலக்குகள் மீளாய்வாண்டில் ஏற்கனவே அடையப்பட்டிருந்தன. எனவே கம்பனியானது அதன் கூட்டிணைந்த திட்டத்தில் வினைத்திறனற்ற இலக்குகளை நிர்ணயித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஐ.அ.டொலர் 190 மில்லியன் வெளிநாட்டுக் கடனின் கீழ் தனியான பிரிவொன்றாக நிர்மாணிக்கப்பட்ட மத்தல ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்தின் (எம்ஆர்ஐஏ) செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதான செயலாற்றல் குறிகாட்டி | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|
| பிரயாணிகளின் எண்ணிக்கை | 6,207 | 6,291 | 40,386 |
| சர்வதேச விமானங்கள் மீதான நடவடிக்கை (எண்ணிக்கை) | 1,317 | 1,044 | 2,890 |
| விமானசரக்கு ஏற்றல் மீதான நடவடிக்கை (மெற்றிக் தொன்கள்) | இல்லை | 19 | 221.9 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபிஐ“எஸ்) மீதான வருடாந்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பீடு செய்யமுடியாதிருந்தது

(ii) எம்ஆர்ஐஏ இன் மந்தமான செயலாற்றல் காரணமாக தீர்வையற்ற கடைகள் செயற்படுவதற்கான ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. எனவே மீளாய்வாண்டில் வாடகை வருமானம் ரூபா 18 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டில் நெல் களஞ்சியப்படுத்தியதன் காரணமாக ரூபா 891 மில்லியன் பெறுமதியான சரக்கு கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு 2017 மார்ச் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) எம்ஆர்ஐஏ இன் நிதிச் செயலாற்றல் பின்வருமாறு வீழ்ச்சியடைந்திருந்தது.

| | ரூபா. மில்லியனில் | | |
|---|---|---|---|
| விபரம் | 2016 | 2015 | 2014 |
| மொத்த வருமானம | 49 | 71 | 136 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் | 2,339 | 2,289 | 2,228 |
| செயற்பாட்டு நட்டம் | 2,290 | 2,218 | 2,092 |
| நிதிச் செலவினம் | 701 | 882 | 637 |

### 4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு வரைபு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்த பின்னர் 53 நாட்குறிப்புப் பதிவுகளுடாக ரூபா 227 மில்லியன் பெறுமதியான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால், கணக்குகளில் அத்தகைய குறைபாடுகள் மேலும் நிலவுவதற்கான சாத்தியத்தன்மையை கணக்காய்வில் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமையொன்றை அமுல்ப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 248.6 மில்லியன் தொகைக்காக 08 மாத காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்படுவதற்கு 2012 யூன் 29 இல் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. கம்பனியானது ரூபா 27 மில்லியன் தொகையை ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதி 2016 ஒக்தோபர் 31 வரை நான்கு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டும் இருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்டதிலிருந்து 04 ஆண்டுகளை விஞ்சிய காலப்பகுதி கடந்திருந்த போதிலும் 2016 ஒக்தோபர் 31 வரையிலும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தார். ஆகையால்,ரூபா 24.86 மில்லியன் ஆன செயலாற்றல் பிணைமுறி 2017 சனவரி 03 இல் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியால் செயலாற்றல் பிணைமுறியின் அறவீட்டிற்கெதிராக ஒப்பந்ததாரர் வழக்கொன்றைத் தொடுத்திருந்தார். இருந்த போதிலும், கம்பனியானதுஇது தொடர்பில் ஒப்பந்ததாரரிற்கெதிராக சட்ட நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை.

(இ) சுற்றுலா வதிவிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 7 மில்லியன் தொகையை செலவிட்டு தனியார் தரப்பினரிடமிருந்து காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர், கதிர்காமம் பிரதேச செயலகம் இந்தக் காணி அரசாங்கத்திற்கு சொந்தமானது என அறிவித்திருந்தது.இருந்த போதிலும், தனியார் தரப்பினருக்கு செலுத்தப்பட்ட ரூபா 7 மில்லியனை அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. மேலும்,கம்பனியானது இது தொடர்பில் தனியார் தரப்பினருக்கெதிராக வழக்கொன்றை தொடுத்திருந்தது.

### 4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து தானாக விரும்பி விலகிய ஊழியரொருவருக்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியன் இழப்பீட்டைக் கம்பனி செலுத்தியிருந்தது.

### 4.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடமாகவுள்ள பதவியின் கடமைகளை கவனித்தல் 03 மாத காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பிரதேச தலைவர்பதவி வெற்றிடங்களில் கடமைகளை கவனிப்பதற்காக நான்கு பிரதிப் பிரதேச தலைவர்கள் 01 தொடக்கம் 05 ஆணடுகள் வரையிலான காலவீச்சொன்றிற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்,பொதுத் திறைசேரியிடமிருந்தான அங்கீகாரமில்லாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வருடமொன்றிற்கு ஊழியரொருவருக்கான பதவியணி கிரயம் ரூபா 1,020,000 இலிருந்து ரூபா 1,577,000 வரை அதிகரித்திருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கம்பனியின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம்கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப்பகுதி | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) மனிதவளங்கள் முகாமைத்துவம் | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு | கம்பனியில் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான கணக்கீட்டு முறைமையொன்று இருக்கவில்லை. |
| (இ) பெறவேண்டியவைகளும் செலுத்தவேண்டியவைகளும் | நீண்டகால நிலுவை மீதிகள் கணக்குகளில் அறவிடப்படாமல் / தீர்ப்பனவு செய்யப்படாமலிருந்தன. |
| (ஈ) சொத்து முகாமைத்துவம் | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>சொத்துக்களை குறியீடிடுதல் காணப்படாமை மற்றும் சொத்துக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |



எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமையதிபதி
2017 ஜுன் 19 ஆந் திகதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# கணக்காய்வு செய்யப்பட்ட
# நிதிக்கூற்றுக்கள்

# விரிவான வருமானக்கூற்று

| திசெம்பர் 31 ஆந் திகதியால் முடிவடைந்த வருடத்துக்கான | குறிப்புகள் | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | **ரூ.** | ரூ. |
| **வருமானம்** | 5 | **18,027,257,179** | 15,218,760,071 |
| ஏனைய வருமானம் | 6 | **315,543,437** | 479,508,417 |
| | | **18,342,800,616** | 15,698,268,488 |
| நிர்வாக, தாபன மற்றும் சந்தைப்படுத்தும் செலவினங்கள் | 7 | **(10,655,673,712)** | (10,124,353,778) |
| **செயற்படு இலாபம்** | | **7,687,126,903** | 5,573,914,710 |
| நிதி வருமானம் | 8 | **1,894,214,701** | 1,046,515,607 |
| நிதிச்செலவு | 8 | **(2,672,747,250)** | (4,242,304,944) |
| நிதி (செலவினம்)/வருமானம்- தேறிய | | **(778,532,549)** | (3,195,789,337) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **6,908,594,354** | 2,378,125,373 |
| வருமான வரி செலவினங்கள் | 9 | **11,149,716** | (1,561,269,802) |
| **வருடத்துக்கான இலாபம்** | | **6,919,744,070** | 816,855,571 |
| பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம் | 10 | **34,598** | 4,084 |
| **வேறு விரிவான வருமானங்கள்** | | | |
| ஓய்வூதிய பணிக்கொடை வகையின் எடுகோளான மாற்றத்தினால் ஏற்பட்ட நன்மைகள்/ (நட்டம்) | 22 | **5,591,439** | 172,937,123 |
| காப்பீட்டுக் கணிப்பாளர் இலாபம்/(நட்டம்)மீதான பிற்போடப்பட்ட வரி | 13 | **(1,565,603)** | (48,422,394) |
| **மொத்த விரிவான வருமானங்கள் கூட்டுத்தொகை** | | **4,025,836** | 124,514,729 |
| **வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்** | | **6,923,769,906** | 941,370,300 |

பக்கம் 99 தொடக்கம் 119 வரையிலான குறிப்புகள் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும்.
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 87 மற்றும் 93 இல் தரப்பட்டுள்ள

# நிதி நிலைக்கூற்று

| திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு | குறிப்புகள் | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 11 | **36,313,463,742** | 38,381,811,973 |
| தொடர்முறை மூலதன வேலைகள் | | **3,604,758,634** | 1,797,848,789 |
| அருவச் சொத்துக்கள் | 12 | **12,830,190** | 17,427,437 |
| பிற்போடப்பட்ட சொத்துக்கள் | 13 | **797,895,349** | 745,194,174 |
| கடனீட்டுப் பத்திரங்களின் முதலீடு | 14 | **2,650,000,000** | 3,050,000,000 |
| கம்பனி ஊழியர்களுக்கான கடன் | 16.1 | **92,448,969** | 87,102,228 |
| | | **43,471,396,885** | 44,079,384,601 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 15 | **473,538,561** | 349,373,378 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள் | 16 | **3,453,666,250** | 4,548,446,775 |
| கிடைக்க வேண்டிய வரி வருமானம் | 17 | **970,271,595** | 758,699,782 |
| திறைசேரி உண்டியல்களை/ மீள் கொள்வனவு செய்யும் உடன்படிக்கைகள் மற்றும் குறுகிய கால வங்கி வைப்புக்கள் | 18 | **21,520,929,076** | 14,939,671,494 |
| காசும் காசு சார்ந்தவையும் | 18 | **1,187,019,995** | 609,972,967 |
| | | **27,605,425,476** | 21,206,164,395 |
| **நிதிச் சொத்துக்கள்** | | **71,076,822,361** | 65,285,548,996 |
| **ஓப்புரவு மற்றும் பொறுப்புகள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| குறித்துரைக்கப்பட்ட மூலதனம் | 19 | **20,000,200** | 20,000,200 |
| ஒதுக்கங்கள் | 20 | **1,019,226,769** | 1,008,226,769 |
| பிடுத்து வைக்கப்பட்ட சம்பாத்தியம் | | **15,396,983,807** | 9,984,213,901 |
| | | **16,436,210,776** | 11,012,440,870 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| கடன் வாங்குதல்கள் | 21 | **35,068,548,732** | 35,135,336,416 |
| ஓய்வு நலநிதி கடப்பாடுகள் | 22 | **2,576,178,455** | 2,395,344,715 |
| பிற்போடப்பட பொறுப்பு | 13 | **5,321,588,674** | 5,278,471,611 |
| பிற்போடபட்ட அரச மானியங்கள் | 23 | **1,244,099,064** | 1,331,704,822 |
| | | **44,210,414,925** | 44,140,857,563 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவை | 24 | **7,819,396,018** | 7,537,941,778 |
| கடன் வாங்குதல்கள் | 21 | **2,610,800,642** | 2,594,308,784 |
| | | **10,430,196,660** | 10,132,250,562 |
| மொத்த பொறுப்புகள் | | **54,640,611,585** | 54,273,108,126 |
| **மொத்த ஒப்புரவு மற்றும் பொறுப்புகள்** | | **71,076,822,361** | 65,285,548,996 |

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இயைவாக இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுதிபடுத்துகின்றேன்.

..........................................

**நிதித் தலைவர்**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு பணிப்பாளர் சபை 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கியது.

..............................

**தவிசாளர்**

.....................................

**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

பணிப்பாளர் சபை சார்பாக 2017 ஜுலை 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

பக்கம் 87 தொடக்கம் 93 வரையிலான குறிப்புகள் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும். சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 87 மற்றும் 93 இல் தரப்பட்டுள்ளது.

# பங்கு மாற்றங்களின் அறிக்கை

**திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான**

| | குறிப்பு | காட்டப்பட்ட மூலதனம் | ஏனைய ஒதுக்கீடுகள | பிடித்துவைக்கப்பட்ட ஆதாயம் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறான மீதி | | 20,000,200 | 1,004,726,769 | 9,543,343,602 | 10,568,070,571 |
| ஆண்டிற்கான இலாபம் | | - | - | 816,855,571 | 816,855,571 |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | | | |
| பின் தொழில் ஆதாய கடப்பாடுகளில் காப்பீட்டுக் கணிப்பாளர் இலாபம் | | - | - | 172,937,123 | 172,937,123 |
| காப்பீட்டுக் கணிப்பீட்டு மீதான பிற்போடப்பட்ட வரி | | - | - | (48,422,394) | (48,422,394) |
| **வரி தவிர்ந்த ஏனைய விரிவான வருமானங்கள்** | | - | - | 124,514,729 | 124,514,729 |
| **மொத்த விரிவான வருமானங்கள்** | | - | - | 941,370,300 | 941,370,300 |
| செலுத்தப்பட்ட இலாபங்கள் | 26 | - | - | (497,000,000) | (497,000,000) |
| ஒதுக்கீட்டுக் கணக்குக்கு மாற்றம் செய்தல் | | - | 3,500,000 | (3,500,000) | - |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி** | | 20,000,200 | 1,008,226,769 | 9,984,213,901 | 11,012,440,870 |
| **2016 சனவரி 01இல் உள்ளவாறான மீதி** | | **20,000,200** | **1,008,226,769** | **9,984,213,901** | **11,012,440,870** |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **-** | **-** | **6,919,744,070** | **6,919,744,070** |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | | | |
| பின் தொழில் ஆதாய கடப்பாடுகளில் காப்பீட்டுக் கணிப்பாளர் இலாபம் | | **-** | **-** | **5,591,439** | **5,591,439** |
| காப்பீட்டுக் கணிப்பீட்டு மீதான பிற்போடப்பட்ட வரி | | **-** | **-** | **(1,565,603)** | **(1,565,603)** |
| **ஏனைய விரிவான வருமானங்கள்- வரி தவிர்ந்த** | | **-** | **-** | **4,025,836** | **4,025,836** |
| மொத்த விரிவான வருமானங்கள | | **-** | **-** | **6,923,769,906** | **6,923,769,906** |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | **26** | **-** | **-** | **(1,500,000,000)** | **(1,500,000,000)** |
| ஒதுக்கீட்டுக் கணக்குக்கு மாற்றம் செய்தல் | | **-** | **11,000,000** | **(11,000,000)** | **-** |
| **2016 டிசம்பர் 31இல் உள்ளவாறான மீதி** | | **20,000,200** | **1,019,226,769** | **15,396,983,807** | **16,436,210,776** |

பக்கம் 97 தொடக்கம் 125 வரையிலான குறிப்புக்கள் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும். சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 87 மற்றும் 93 இல் தரப்பட்டுள்ள

# காசுப்பாய்ச்சல் அறிக்கை

| திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான | குறிப்பு | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| வருமான வரிகளுக்கு முந்திய தேறிய இலாபம் | | **6,908,594,354** | 2,378,125,373 |
| **சீராக்கல்கள்** | | | |
| தேய்மானங்கள் | 11 | **2,652,137,717** | 2,647,777,594 |
| அருவச்சொத்து கடன்தீர்ப்பனவு | 12 | **12,549,232** | 10,527,658 |
| பரிமாற்ற (இலாபம்)/நட்டம் | 21 | **1,777,079,530** | 3,189,855,520 |
| முதலீட்டு வருமானங்கள் | | **(1,874,898,049)** | (1,047,704,225) |
| ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த இலாபம் / (நட்டம்) | | **(1,363,891)** | (13,873,095) |
| புதிவளிப்பு | 11 | **-** | 6,365,790 |
| பிற்போடப்பட்ட அரச மானியங்களின் கடன் தீர்ப்பு | 23 | **(87,605,758)** | (104,961,427) |
| நிதிச் செலவு | 8 | **705,413,235** | 717,067,024 |
| பணிக்கொடை நலனோபாய திட்டங்களுக்கான ஏற்பாடு | 22 | **404,904,826** | 387,961,248 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்படு இலாபம்** | | **(10,496,811,196)** | 8,171,141,460 |
| சரக்கிருப்பு (அதிகரிப்பு) / வீழ்ச்சி | | **(124,165,183)** | (84,122,733) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | | **(1,094,780,525)** | (742,600,168) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகளின் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | **281,454,240** | 818,590,226 |
| தொழிற்பாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட நிதி | | **11,748,880,779** | 8,163,008,785 |
| நலனோக்குத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகள் | 22 | **(218,479,647)** | (75,630,644) |
| செலுத்திய வட்டி | 8 | **(705,413,235)** | (717,067,024) |
| வருமான வரிக் கொடுப்பனவுகள் | 17 | **(211,571,814)** | (115,658,760) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோற்றிய தேறிய காசுப்பாய்ச்சல்** | | **10,613,416,084** | 7,254,652,357 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த நிதிப்பாய்ச்சல்கள் | | | |
| ஆதன, இயந்திர மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல் | 11 | **(2,391,642,012)** | (616,999,225) |
| அருவச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 12 | **(7,951,985)** | (17,500) |
| கடனீட்டுப்பத்திர முதலீடுகள் | 14 | **(1,600,000,000)** | (800,000,000) |
| ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த இலாபம் | | **2,306,572** | 13,873,077 |
| கடனீட்டுப்பத்திரங்களை விடுவித்தல் | | **2,000,000,000** | 300,000,000 |
| வட்டி கிடைப்பனவுகள் | 8 | **1,874,898,049** | 1,047,704,225 |
| ஊழியர்களுக்கான கடன் வழங்கீடு | | **(112,968,905)** | (104,016,595) |
| ஊழியர் கடன் கிடைப்பனவுகள் | | **107,622,164** | 93,488,348 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(127,736,117)** | (65,967,670) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த நிதிப்பாய்ச்சல்கள்** | | | |
| செலுத்திய பங்கிலாபம் | 26 | **(1,500,000,000)** | (497,000,000) |
| கடன் கிடைப்பனவுகள் | 21 | **763,697,010** | 160,785,686 |
| கடன் செலுத்துகைகள் | 21 | **(2,591,072,366)** | (1,540,649,646) |
| **நிதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(3,327,375,357)** | (1,876,863,961) |
| **காசும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு** | | **7,158,304,610** | 5,311,820,726 |
| **வருட ஆரம்ப காசும் காசு சார்ந்தவையும்** | 18 | **15,549,644,460** | 10,237,823,733 |
| **வருட இறுதியில் காசும் காசு சார்ந்தவையும்** | 18 | **22,707,949,070** | 15,549,644,460 |

பக்கம் 97 தொடக்கம் 125 வரையிலான குறிப்புக்கள் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும்.
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 87 மற்றும் 93 இல் தரப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**1. கூட்டுயாக்க தகவல்கள்**

1.1 பொதுவான காரணங்கள்

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி இலங்கையில் நிலவரமாக குடியிருப்புநிலையுடைய வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பதிவுபெற்ற அலுவலகம் கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்க சா்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ளது.

1.2 முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

சா்வதேச ரீதியில் ஏறறுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு இயைவாக விமான நிலையங்களை முகாமைத்துவம் செய்தல், இலங்கைக்கு வரும் மற்றும் இலங்கை விமானப்பயண தகவல்கள் பிராந்தியத்தினூடாக (FIR) பறக்கும் விமானங்களுக்கு வானோடல் சேவைகளை வழங்குதல், விமான நிலையங்களின் பாவனையாளருக்கென தேவையான ஏனைய வசதிகளை வழங்குதல் போன்றவை வருடத்துக்குள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

1.3 பகிரங்கப்படுத்துவதற்காக சட்டபூர்வமான அதிகாரம் வழங்கிய திகதி

2016 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் நிதி அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதற்காக 2017 ஜுன் 09 ஆந் திகதி பணிப்பாளர் சபை முடிவிற்கமைய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. தனிச்சிறப்பு வாய்ந்த கணக்கியல் கொள்கைகளின் பொழிப்பு

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. விசேடமாக குறிப்பிட்டு இல்லாதுவிடின் இந்த அனைத்து கொள்கைகளும் சகல வருடங்களிலும் தொடர்ந்தும் ஈடுபடுத்தியுள்ளன.

2.1 தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் நியமங்களுக்கமைய (SLFRSs/LKAS). அதற்கேற்ற விதத்தில் தயாரித்துள்ளன. நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரயம் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் சில நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நியாயமான பெறுமதி மற்றும் குறித்துரைக்கப்பட்ட நலனோக்கு கடப்பாடுகளில் நிகழ்காலப் பெறுமதியைக் காட்டக்கூடியவாறு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைளை தயாரிக்கும்போது இலங்கை அறிக்கையிடப்படும் நியமங்களுக்கு SLFRS இயைவாக முக்கியமான கணக்கியல் மதிப்பீடுகளை கையாள வேண்டியது அவசியமாகும். அதேபோன்று கணக்கியல் கொள்கைகளை ஈடுபடுத்திக் கொள்ளும் தொழிற்பாட்டின்போது முகாமைத்துவம் தனது முடிவுகளுக்கமைய செயற்படுவது அவசியமாகும். நிதிக்கூற்றுக்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்த எடுகோள் மற்றும் மதிப்பீட்டுத் துறைகள் தொடர்பாக குறிப்புகள் இலக்கம் 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கணக்கீட்டு அறிக்கைகள் இலங்கை ரூபாவிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இயைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.1 ஒருங்கிணைப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் மூலம், கம்பனியின் ஒருங்கிணைந்த தன்மை சமர்பிக்கப்படுவதுடன்

(அ) மூலதன செலவுகளுக்கான அரச மானியங்கள் பிரதிநிதிப்படுத்துகின்ற வாக்களிக்கப்பட்ட நிதியம் மற்றும்.

(ஆ) பிடித்துவைக்கப்பட்ட வருமானங்கள் கணக்குகள் சட்டமா அதிபரின் முடிவு கிடைக்கும் வரை 2011 வருடம் வரை தனிப்பட்ட வகையில் தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 3.5 ஆம் பந்தியிற்கிணங்க விமான நிலையத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் ஒருங்கிணைப்பதற்குத் தேவையான முக்கிய நடவடிக்கைகளை தொடங்குவதற்காக கம்பனி போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சிற்கு சமர்ப்பித்த வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்டு சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை விசாரித்துள்ளது.

முன்னாலிருந்த விமானநிலைய அதிகாரசபையினால் ஏற்கப்பட்ட சொத்துக்களின் பகுதி 1983 ஆம் ஆண்டில் கம்பனியிற்கு மாற்றியமைத்ததும் அதிகாரசபையைக் கலைத்து கம்பனியினை நிறுவியதன் காரணமாக மீதியாகயிருந்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வாக்களிக்கப்பட்ட நிதியம் மற்றும் பிடித்து வைக்கப்பட்ட வருமானங்கள் இரு நிதியங்களும் இருந்தமை மற்றும் கணக்கெடுத்ததன் காரணமாக அமைச்சரவை அங்கீகாரம் மேற்குறிப்பிட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு தேவையேற்பட்டது.

கம்பனி அங்கு அடிப்படைத் தொழற்பாடுகளில் ஈடுபட்டு நிதியங்கள் இரண்டினதும் சொத்துக்களை பயன்படுத்தி பொருளாதார நன்மைகளை தோற்றுவிக்கவும் அதேபோன்று உரிய பொறுப்புக்களில் அறிக்கையிடாது அதற்கமைய அடிப்படை கணக்கியல் எண்ணக்கருகளிலிருந்து விலகிச் சென்று

கடன்சேவைகள் தொடர்பாக கடப்பாடுகள் கணக்குகளில் காட்டப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் பணிப்பாளர் சபையால் 2013 ஜுன் 28 ஆந் திகதி இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS/LKAS), இணங்கும் வகையில் சேர்த்தல்.

2.1.2 இணக்கப்பாட்டு கூற்று

கம்பனிகள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை நிதி அறிக்கை நியமங்களுக்கமைய (SLFRSs.) கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயார்படுத்தி சமர்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகவுள்ளது.

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கம்பனியின் நிதிநிலைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று, பங்கு மாற்றங்களின் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுடன் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகளும் ("நிதிக்கூற்று") அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்களும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் தயார்படுத்தியுள்ள இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் அறிக்கையிடல் தரங்களைப்போன்று (SLFRS/LKAS) கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்குகின்றது

இந்த தரங்கள் www.casrilanka.com. இணையத்தளத்தின் மூலம் பட்டியல்படுத்தி காட்டப்பட்டுள்ளது.

2.1.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

வேறு விதத்தில் குறிப்பிடாது இருப்பதனைத் தவிர்ந்தஇ கம்பனி கடந்த வருடங்களில் பிரயோகிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் ஒரேமாதிரியாக பின்பற்றப்பட்டுள்ளன.

2.1.4 அளவீட்டு அடிப்படை

நிதிநிலைக்கூற்றில் வரும் பின்வரும் போதுமானளவு உருப்படிகளைத் தவிர்ந்த கம்பனியின் நிதி நிலைக்கூற்று தயாரிக்கப்பட்டிருப்பது வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயாகும்.

முதலீட்டுச் சொத்து –சந்தைப் பெறுமதி குறுகியகால முதலீடுகள் விற்பனை செய்வதற்காகவுள்ள நிதிக்கருவிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள சந்தைப் பெறுமதிக்கு

தேறிய வரையறுக்கப்பட்ட நன்மை பொறுப்புகள்-வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதிக்கு அடையாளங் காணப்படாத காப்பீட்டு கணிப்பீடு நன்மைகள் சேர்த்து அதில் அடையாளங் காணப்படாத கடந்த சேவை கிரயம் மற்றும் அடையாளங் காணப்படாத காப்பீட்டு கணிப்பீடுநட்டங்கள் குறைக்கப்பட்டு பொறுப்புகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

2.1.5 நடைமுறைசார்ந்த மற்றும் முன்வைக்கின்ற நிதி

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் கம்பனி தொழிற்படுத்துகின்ற பிரதான பொருளாதார சுற்றாடலில் நிதி(நடைமுறைச் சார்ந்த நிதி) அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும். இந்நிதிக்கூற்றுக் கம்பனியில் நடைமுறைசார்ந்த மற்றும் முன்வைப்பதற்கு நடைமுறைசார்ந்த நிதி அதாவது இலங்கை ரூபாவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.மீளாய்வு வருடத்துக்குள் கம்பனியின் முன்வைக்கப்படுகின்ற மற்றும் நடைமுறைசார்ந்த நிதி மாற்றம் ஏற்படவில்லை.

2.1.6 நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்துதல்

நிதிநிலைக் கூற்றில் முன்னிலைப்படுத்தியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தன்மைக்கமைய வகைப்படுத்தப்பட்டுள்ள அதன் ஒப்பீட்டு ரீதியான திரவத்தன்மை மற்றும் நிறை முதிர்ச்சி மாதிரிக்கமைய பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற பணவீக்க காரணி தொடர்பில் சீராக்கம் செய்யப்படவில்லை. நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் ஒன்றுக்கொன்று மறுதலைப்படுத்தி தேறிய அளவு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருப்பது அளவுக்கு சட்டரீதியாக அமுலாக்கிய உரிமை மறுதலை மற்றும் தேறிய அடிப்படையில் மீது ஈடு செய்வதற்கு விருப்பம் உள்ளபோது அல்லது கணக்கியல் நியமங்கள் அல்லது பொருள்விளக்கப்படுத்துவதன் மூலம் சொத்து புரிந்துகொண்டு தீர்ப்பதற்கு அனுமதியுள்ளபோது மற்றும் கம்பனி இந்த கணக்கியல் கொள்கை அடிப்படையில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின் மாத்திரமாகும்.

2.1.7 போதுமான மற்றும் ஒருங்கிணைப்பு

ஒத்த உருப்படிகள் அனைத்து போதுமான தொகுதியால் நிதிக்கூற்றுக்களில் தனிப்பட்ட வகையில் சமர்பிக்கப்பட்டுள்ள ஓத்திராத தன்மையில் அல்லது செயற்பாட்டிலுள்ள உருப்படிகள், போதுமானதாக இல்லாதுவிடினும் "நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்" அடிப்படையான இலங்கை கணக்கியல் நியமங்கள் - LKAS 1 மூலம் அனுமதி வழங்கப்பட்டிருப்பின் வேறாக சமர்பிக்கப்பட்டுள்ளது.

2.1.8 தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளின் பயன்பாடு

இலங்கை நிதி அறிக்கை நியமங்களுக்கு இணங்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது பிரயோகிக்கப்படுகின்ற கணக்கியல் கொள்கைகளுக்கு மற்றும் அறிக்கையிடப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் அளவுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடு மற்றும் தற்கோள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உண்மை பெறுபேறுகள் இந்த மதிப்பீட்டிலும் பார்க்க மாற்றமடைய முடியும். மதிப்பீடு மற்றும் பயன்படுத்தப்படுகின்ற தற்கோள்கள் நடைமுறை அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். கணக்கியல் மதிப்பீடுகளாக சீராய்வு எதிர்பார்க்கக்கூடியவாறு அடையாளங் காணப்படும். 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி இறுதி வருடத்துக்குள் தற்கோள் மற்றும் திரிபுடைய மதிப்பீடுகளின் போதுமானளவு சீராக்கங்கள் ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க அபாயம் உள்ள தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

2.1.9 நிறுவனத் தொடர்ச்சி கருத்து

முகாமைத்துவம் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதில் தமது இயலுமை மதிப்பிடப்பட்டிருப்பதுடன் எதிர்காலம் வரை வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கு வளங்கள் தங்களிடம் இருப்பது தொடர்பாக திருப்திபடுகின்றது. அதேபோன்று தொடர்ந்தும் கொண்டு நடாத்தும் கம்பனியிற்குள்ள இயலுமைத் தொடர்பாக குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டினை தோற்றுவிக்கின்ற அளவுசார்ந்த நிச்சயமின்மை இருப்பது முகாமைத்துவத்திற்கு தெரியாது. ஆகையால் நிதிக்கூற்றுக்கள் நிறுவனத் தொடர்ச்சி கருத்து அடிப்படையில் வழக்கமாக தயார் செய்தல் வேண்டும்.

2.1.10 நிதிக்கருவிகளின் சாதாரணப் பெறுமதி

சாதாரணப் பெறுமதியின் மீது அளவிடப்படுகின்ற நிதிக்கருவிகள் கம்பனியிடம் இல்லை.

2.1.11 பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள்

வரி நட்டங்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் அடையாளங் காணப்படுவது அவ்வாறான வரி ஈடுசெய்வதற்கு நட்டங்களுக்காக பயன்படுத்துவதற்கு எதிராக எதிர்கால வரி ஆக்க முடியுமான தேறிய இலாபங்கள் ஏற்பட முடியுமென்ற தற்கோள் உள்ளது. அடையாளங் காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் அளவு முடிவு செய்வதற்கு தற்கோள்கள் பயன்படுத்தப்படுவது எதிர்கால வரி திட்டமிடல்கள் உத்திகளுடன் எதிர்கால வரி ஆக்க முடியமான இலாபத்தின காலம் மற்றும் மட்டத்தின் மீது அடிப்படையாகக் கொண்டது.

2.1.12 கணக்கியல் கொள்கைகளில் மற்றும் வெளிப்பாடுகளின் மாற்றங்கள்

கம்பனி ஈடுபடுத்திய புதிய நியமங்களின் திருத்தங்கள் மற்றும் திருத்தங்கள் பொருள் விளக்கமளித்தல்
வெளியிடப்படினும் இன்னும் அறிக்கையிடும் திகதியிற்கு செயற்படாத புதிய நியமங்கள் மற்றும் நியமங்களுக்கான திருத்தங்கள் இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்டது. அதற்கமைய இந்த கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது கையாளப்படவில்லை.

பின்வருமாறு காட்டப்படுகின்ற புதிய நியமங்கள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட மாட்டாது.

இலங்கை கணக்கியல் நியமம் SLFRS9 “நிதிக்கருவிகள்” நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்துதல் அளவீடு மற்றும் அடையாளங் காணல் என்ற காரணங்கள் தொடர்பாக விவரிக்கின்றது. SLFRs9 இல் முழு சீராய்வு 2014 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் வெளியிடப்பட்டது. LKAS 39 - நியமத்தின் நிதிக்கருவிகள் வகைப்பாடு மற்றும் அளவீடு தொடர்பாக வழிக்காட்டல்களுக்கு இது பதிலமர்த்தீடு செய்துள்ளது. SLFRs9 மூலம் கலப்பு அளவீட்டு மாதிரி பேணப்படுவதுடன், கடன்தீர்ச் செலவு, இலாபம் நட்டத்தின் மீது சாதாரணப் பெறுமதி மற்றும் ஏனைய விரிவான வருமானங்கள் (OCI) மீது சாதாரண பெறுமதியாக நிதிச்சொத்துக்களுக்காக அடிப்படை வகையீடு மூன்று நிறுவப்பட்டுள்ளன. அலகின் தொழில் முயற்சி மாதிரி மற்றும் நிதிச்சொத்துக்களின் ஒப்பந்தம் செய்துகொண்ட நிதி பாய்ச்சல் தன்மைகளின் மீது வகைப்பாட்டின் அடிப்படை தங்கியுள்ளது. பங்குக் கருவிகளின் மீது முதலீடு மறுசுழற்சியல்லாத ஏனைய விரிவான வருமானங்களில் சாதாரணப்பெறுமதியில் ஆரம்பத்தில் இருந்து நிகழ்கால மாற்றங்களை வரை மாற்றம்பெற முடியாத இலாபங்கள் அல்லது நட்டங்களின்ஊடாக சாதாரணப் பெறுமதிக்கு அளவிடுவது தேவைப்படுகிறது. இப்போதைக்கு LKAS 39 இல் கையாளப்பட்ட நேரிட்ட நட்டம் இழப்பீட்டு மாதிரி தொடர்பாக புதிய எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட மாதிரி உண்டு. ஏனைய விரிவான வருமானத்தின் கடன் அபாயம் மாற்றங்கள் அடையாளங் காணுதல் தவிர்ந்த நட்டங்கள் மற்றும் இலாபங்களினூடாக சாதாரணப் பெறுமதிக்கு பொறுப்புகளை பெயரிடுகைக்குள் நிதி பொறுப்புகளுக்காக வகைப்பாட்டின் மற்றும் அளவீட்டின் வித்தியாசங்கள் இல்லை. SLFRS9 இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டுக்கான விளைவுள்ள தேவைப்பாடுகூர்மையான கைகாப்பு ஏற்பாட்டுக்கான விளைவுள்ள தேர்வின் மூலம் தளர்த்தப்பட்டுள்ளது. “அதன் மூலம் இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டுக்கான விகிதாசாரம்” இற்காக பயன்படுத்துகின்ற இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டு உருப்படிகள் மற்றும் இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டுக் கருவிகள் இடையே பொருளாதார தொடர்பு வேண்டியிருப்பதுடன் இது இடர்காப்பு முகாமைத்துவ தொழிற்பாட்டின்போது முகாமைத்துவம் உண்மையாகவே பயன்படுத்துவதுடன் ஒத்திருக்கிறது சமகால ஆவண நடவடிக்கைகள் இன்னும் தேவையாக இருப்பினும் அது LKAS39 இன் கீழ் தற்போது தயாரிப்பதிலும் பாரக்க வித்தியாசமானதாகும். இக்குறித்த நியமம் 2018 சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் கணக்கியல் காலப்பகுதிக்காக செயற்படுவதுடன் அதற்கு முன்னர் ஈடுபடுத்துவதற்கும் அனுமதி உண்டு. கம்பனி SLFRS9 இல் முழு தாக்கமும் இன்னும் மதிப்பிடப்பட்டு வருகின்றது.

சர்வதேசநிதிஅறிக்கையிடல் நியமங்கள் IFRS 15 “வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களின் மூலமான வருமானங்கள் - நியமம் மூலம் நிதிக்கூற்றுக்கள் கையாளுபவர்களுக்கு தன்மை, அளவு, காலம் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தாபனத்தின் ஒப்பந்தங்களால் உற்பத்தியாகும் நிதி பாய்ச்சல்கள் மற்றும் வருமானங்களின் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக பயனுள்ள பயனுடைய தகவல்கள் அறிக்கையிடுவதற்காக வருமானங்களை அடையாளங் காணல் மற்றும் மூலதாரங்களின் நிறுவுகைத் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்படும். பண்டங்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களின் கட்டுப்பாட்டிற்கு எடுக்கப்படும்போது மற்றும் அவ்வாறே பண்டங்கள் அல்லது சேவைகளின்

பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமையுள்ளபோது வருமானம் கண்டறியப்படும். இந்த நியமம் LKAS 18 - "வருமானங்கள்" மற்றும் நியமம் LKAS11 - நிர்மாணிக்கும் ஒப்பந்தம் - நியமங்களுக்கு மற்றும் அதற்குரியபொருள் விளக்கங்கள் பதிலமர்த்தப்படும். இந்த தரங்கள் 2018 சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் வரும் வருடாந்த கால எல்லைக்குரியதாகுவதுடன்முன்கூட்டியே ஈடுபடுத்திக்கொள்வதற்கும் அங்கீகாரம் உண்டு. கம்பனி IFRS15 தாக்கம் கணிப்பிடப்பட்டு வருகின்றது.

இலங்கை அறிக்கையிடல் தரங்கள் SLFRS16 மூலம் ஐந்தொகைத் திகதியிற்கு நிதி குத்தனை மற்றும் ஐந்தொகைத் திகதியிற்குப் பின்னர் வரும் தொழிற்பாட்டு குத்தகையிடையே மாற்றம் காட்டப்படுகின்ற குத்தகைதாரர்களுக்கான இரட்டை கணக்கியல் மாதிரி நீக்கப்படும்.அதற்குப்பதிலாக நிகழ்கால நிதி குத்தகை கணக்கிற்குச் சமனான ஐந்தொகைத் திகதியிற்கான தனி கணக்கியல் மாதிரி உண்டு. SLFRS16 2019 சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதிக்கு அமுல்படுத்தப்படும்.

கம்பனியின் மீது போதுமானளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்பட்ட இது வரை அமுல்படுத்தப்படாத வேறு SLFRSs அல்லது IFRIC பொருள் விளக்கம் அளிக்கப்படவில்லை.

2.2 வெளிநாட்டு நாணயமாற்றம்

(அ) நடைமுறைசார்ந்த மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்டநாணயங்கள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் கம்பனி தொழிற்படுத்துகின்ற ஆரம்பநிலை பொருளாதார சுற்றாடலில் நிதி(நடைமுறைச் சார்ந்த நிதி) அடிப்படையாகக் கொண்டு அளவிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக் கம்பனியில் பாவனை செய்யப்படுகின்ற மற்றும் முன்வைக்கின்ற நிதி அலகுகள் பாவனை செய்யப்பட்ட நிதியலகுகள் அதாவது இலங்கை ரூபாவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிலுவை

வெளிநாட்டு நாணய மாற்று கொடுக்கல் வாங்கல்கள், அந்த கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அல்லது உருப்படிகள் கணிப்பிட வேண்டியேற்பட்டபோது காணப்பட்ட நாணய பரிமாற்று வீதங்கள் கையாளப்பட்டுபுழக்க நாணயத்திற்கு மாற்றம் செய்து மீள அளவிடப்பட்டுள்ளது.அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கும்போது ஏற்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டம் மற்றும் வெளிநாட்டு நாணயத்தால் பெயரிடப்பட்ட நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வருட இறுதியில் நாணயமாற்று வீதங்களுக்கு பரிமாற்றம் செய்ததன் மூலம் ஏற்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டம் மற்றும் தகைமையுறு நிதிப்பாய்ச்சல் எல்லைகள் மற்றும் தகைமையுறு தேறிய முதலீட்டு எல்லைகளா பிற்போடப்பட்ட ஏனைய விரிவான வருமானங்கள் தவிர்ந்த, வருமானக் கூற்றில் அடையாளங் காணப்பட்டுள்ளது.

கடன் எடுப்பனவுகள் சம்பந்தமான நாணயமாற்று நட்டம் அல்லது இலாபம் மற்றும் காசும் காசு சார்ந்தவையும் விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானங்கள் அல்லது நிதிச் செலவின் கீழ் சமர்ப்பித்துள்ளது. ஏனைய அனைத்து வெளிநாட்டு நாணய இலாபம் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் ஏனைய தேறிய நட்டங்கள் மற்றும் இலாபம் கீழ் காட்டப்பட்டுள்ளன.

விற்பனை செய்வதற்கென வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியால் அறிமுகப்படுத்தியுள்ள நாணயஞ் சார்ந்த கடனீட்டு ஆவணங்கள் சாதாரணப் பெறுமதியில் மாற்றங்கள் கடனீட்டு ஆவண கடன்தீர் செலவில் மாற்றங்கள் மற்றும் கடனீட்டு ஆவணம் கொண்டு செல்லப்படும் பெறுமதியில் வித்தியாசங்களிடையே பரிமாற்ற வித்தியாசமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. கடன்தீர் செலவு மாற்றம் பெறுவதற்குரியபரிமாற்ற வித்தியாசங்கள் வருமானக் கூற்றில் அடையாளங் காணப்பட்டிருப்பதுடன் கொண்டு செல்லப்பட்ட பெறுமதியிலுள்ள ஏனைய மாற்றங்கள் வேறு விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இலாபம் அல்லது நட்டம் மூலம் சாதாரணப் பெறுமதிக்கு பேணப்படுகின்ற பங்குகள் போன்ற நிதிச்சாரா நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீது பரிமாற்ற வித்தியாசங்கள் சாதாரண பெறுமதியில் இலாபம் அல்லது நட்டத்தின் பகுதியாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்பட்டுள்ளது. விற்பனை செய்வதற்காகவுள்ள பங்குகள் போன்ற நிதிச்சாரா நிதிச்சொத்துக்களில் ஏற்பட்ட பரிமாற்ற வித்தியாசங்கள் வேறு விரிவான வருமானங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

2.3 நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

காலவரையறையிற்காக வருமான வரிச்செலவு நடப்புமற்றும் பிற்போடப்பட்ட வரிகளினால் ஆனது. வேறுவிரிவான வருமானம் அல்லது நேரடியாக பங்குகளில்அடையாளங் காணப்பட்ட உருப்படிகளுக்கு தொடர்புடைய அளவுகளைத் தவிர்ந்த விரிவான வருமானக்கூற்றில் கண்டறியபட்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ்வரி முறையே வேறு விரிவான வருமானங்கள் அல்லது நேரடியாக பங்குகளின் கீழும் காட்டப்பட்டுள்ளது.நடப்பு வருமான வரி அமுலிலுள்ள வரிச் சட்டம் அல்லது நிதிநிலைக்கூற்று திகதியாகும்போது தயாரித்த சட்டங்களின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

முகாமைத்துவத்திற்கு பிரயோகிக்கக் கூடியவாறான வரிச்சட்டங்களுடன் வரி விவர அறிக்கைகள் அவ்வப்போது மதிப்பாய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அதற்கிணங்க வரி அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டிய எதிர்பார்க்கப்படும் வரிகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமானதாக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படையில் மற்றும் நிதி அறிக்கைகளில் அவற்றின் கொண்டு செல்லப்படும் பெறுமதியிடையே உள்ள தற்காலிக மாற்றங்களின் அடிப்படையில் பொறுப்பு முறை கையாளப்பட்டு பிற்போடப்பட்ட வருமான வரி கண்டறியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நன்மதிப்பினை இனங்காணும்போது தோற்றம் பெறுமாயின், பிற்போடப்பட்ட வரிகளுக்காக ஒதுக்கீடுகள் இல்லாத தொழில்ரீதியிலான கலவை ஏற்படாத

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

சந்தர்ப்பத்தில் கண்டறியப்பட்ட அடிப்படை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீது மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும்போது கணக்கியல் அல்லது வரி இலாபத்துக்கு தாக்கமொன்று ஏற்படுத்தாத சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்கள் கணக்கிடப்படவில்லை.பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்களை கணக்கிடப்பட்டிருப்பது வருடத்துக்குள் தேறாத சொத்துக்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட பொறுப்புக்களுக்காக உரித்தாக்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிதிநிலைக்கூற்றுத் திகதியிற்கு அமுல்படுத்தப்படும் அல்லது அமுல்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரி வீதமொன்று (மற்றும் வரிச் சட்டம்) உபயோகிக்கொள்வதேயாகும். தற்காலிக மாற்றங்களின் மீது வரி அறவிடமுடியுமான எதிர்கால இலாபத்தின் அளவுக்கேற்பபிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்களை கண்டறியப்பட்டுள்ளது.

நடைமுறைச் சொத்துக்கள் நடைமுறைப் பொறுப்புக்களுக்கு எதிராக தீர்ப்பதற்கு முடியுமான சட்டம் அமுலில் உள்ளபோது மற்றும் அது தனியான வரி அதிகாரசபையிற்கு சம்பந்தமான பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்ய முடியும்.

2.4 சரக்கிருப்பு

காலங்கடந்த மற்றும் மெதுவாக அசையும் சரக்கிருப்புகளுக்காக சமப்படுத்தல் மேற்கொண்டதன் பின்னர் இப்பதிவேட்டுச் செலவு அல்லது தேறிய ஐயக்கடன் பெறுமதி போன்ற இரண்டினதும் குறைந்த பெறுமதியிற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

2003 திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு முன்னர் கொள்வனவு செய்த தீயணைப்பு கருவிகளுக்கு மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதியிற்கு காட்டப்பட்டுள்ளதுடன், அதற்குப் பின்னர் நிறைசெய்த பொதுவான முறையிற்கு பெறுமதியிடப்பட்டுள்ளது.

எரிபொருள் முன்னைய கிடைப்பனவுகள் முன்னைய வெளியிடும் முறையிற்கு பெறுமதியிடப்பட்டிருப்பதுடன்,ஏனைய சரக்கிருப்புக்கள் நிகழ்கால இடத்திற்கு மற்றும் நிலைமையிற்கு கொண்டு வருவதற்கு ஏற்கப்பட்ட அனைத்து செலவுகளும் நிறைசெய்த பொதுவான முறையினை பிரயோகித்து கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

10 வருடத்திற்கு அதிகமான காலத்துக்குள் அசையாத சரக்கிருப்புகளுக்காக கம்பனி ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

2.5 வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்

வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் அடிப்படையான நியாயமான தொகையிற்கு அடையாளங் காணப்படுவதுடன் பின்னர் பயனுறு வட்டி முறையின் கீழ் இழப்பிடுவதற்காக ஏற்பாடுகள் குறைக்கப்பட்டு கடன்தீர் கிரயத்திற்குள்அளவிடப்பட்டுள்ளது. ஏனைய கிடைக்கவேண்டியவை வராக்கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் கிடைக்க வேண்டியவை தொடர்பாக சீராக்கங்கள் செய்யப்பட்டதன் பின்னர் கிரயத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளன.

2.6 காசும் காசு சார்ந்தவையும்

கையிலுள்ள காசு, கேள்வி வைப்புத்தொகை குறுகியகால உயர் திரவத் தன்மையுடைய முதலீடுகள்இபெறுமதி மாற்றமடையும் குறைந்தபட்ச இடர்பாட்டிற்கு ஆளாகமுடியுமான நிதி அளவிற்கு இலகுவாக மாற்றக்கூடியவைகளான காசும் காசு சார்ந்தவைகளாக வரைவிலக்கணப்படுத்தப்படும்.

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கங்களுக்காக காசும் காசு சார்ந்தவைகளில் வங்கி மேலதிகப்பற்று குறைக்கப்பட்ட தேறிய வங்கி நிலுவைகள், வங்கி வைப்புகள் மற்றும் கையிலுள்ள காசும் உள்ளடங்கப்படுகின்றன. குறுகிய கால முதலீடுகள் அதாவது கையேற்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த முதலீடுகளும் காசும் காசு சார்ந்தவையும் எனக் கருதப்படும்.

2.7 ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணம்

அனைத்து ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அடிப்படையாக செலவிற்கு காட்டப்பட்டுள்ளதுடன் தேய்மானப் பெறுமதி குறைக்கப்பட்டு வரலாற்றுக் கிரயத்திற்கு காட்டப்பட்டுள்ளது. சொத்துக்களை நேரடியாக கையேற்கும் செலவு மற்றும் உருப்படிகள் கழற்றி அப்புறப்படுத்துவதற்கான செலவு மற்றும் அவற்றினை மறுசீரமைப்பதற்கான செலவிடப்படுகின்ற செலவு போன்று அவை உருப்படி கையேற்கும்போது அல்லது குறித்த காலப்பகுதிக்குள் சரக்கிருப்புக்களாகத் தவிர்ந்த அவற்றினை உபயோகிப்பது தொடர்பாக ஏற்கப்பட்ட ஏதேனும் இருப்பின் அவையும் வரலாற்றுக் கிரயத்திற்குள் உள்ளடக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நேரடி பொருட்கள் நேரடி உழைப்பு மற்றும் பொது பணியாள் செலவுகளில் பொருத்தமான சமவிகிதாசாரங்களாலானது.

சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் அல்லது தனிப்பட்ட சொத்தாக பொருத்தமானதை கண்டறியப்பட்டதன் பின்னர் சேர்க்கப்பட்டகிரயம்உள்ளடங்கப்பட்டிருப்பது அவ் உருப்படியின் மூலம் கம்பனியிற்கு எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கு இயலுமாகயிருத்தல் மற்றும் அதன் கிரயம் நம்பிக்கையுடன் அளவிட முடியுமாக இருந்தால் மட்டுமேயாகும். கொள்முதல் செய்யப்பட்ட பகுதியின் கொண்டு செல்லப்படும் தொகை வேறாக அடையாளங் காணப்படமாட்டாது. சகல பழுதுபார்த்தல்கள் மற்றும் பேணுதல் செலவுகள் அது மேற்கொள்ளப்பட்ட நிதி வருடத்தின் விரிவான வருமானக்கூற்றுக்கு அறவிடப்படும்.

நீண்டகால மூலதன கருத்திட்ட செலவிற்குரிய கருத்திட்டத்தை பூர்த்தி செய்து சொத்துக்கள் பாவனையிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையிற்கு உருவாகும் வரை பூர்த்திசெய்யப்படாத மூலதன கருத்திட்டங்களாக முன் கொண்டு செல்லப்படும்.

ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அந்த சொத்துக்களை பாவனையிற்கு எடுக்கப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் அகற்றும் வரை அந்த சொத்துக்கள் செயற்பாடுகளின்றி இருந்தால் பெறுமானத் தேய்வு இடத் தொடங்கும். ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அனைத்து பகுதியினதும் செலவு மொத்த செலவிற்கிணங்க எடுத்துக்கொள்ளப்படும் போது முக்கியத்துவம் பெறுமாயின் வேறு பகுதியாகபெறுமானத் தேய்வு இடப்படும். காணிகளில் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட மாட்டாது. ஏனைய சொத்துக்களுக்காக தேய்மானங்கள், நோர்கோட்டு முறையிற்கிணங்க மேற்கொள்ளப்படுவதுடன் அவற்றின் செலவு பயன்பாட்டுடைய ஆயுட்காலத்திற்கு பின்னர் ஆக்கத்தில் மிஞ்சிய பெறுமதி வரை கணக்கிடப்படும்.

சொத்துக்களின் பயன்பாட்டுடைய ஆயுட்காலம் பின்வருமாறு விதத்தில் மதிப்பிடப்படும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 50 ஆண்டுகள் வரை |
| இயந்திர உபகரணம் | 04 - 20 ஆண்டுகள் வரை |
| மோட்டார் வாகனங்கள் | 04 - 15 ஆண்டுகள் வரை |
| மரத்தளபாடங்களும் பொருத்துக்களும் அலுவலக உபகரணங்களும் | 08 ஆண்டுகள் வரை |
| தொடர்பாடல் மற்றும் வானோடல் கருவிகள் | 05 - 10 ஆண்டுகள் வரை |
| ஏனைய உபகரணங்கள் | 08 ஆண்டுகள் வரை |
| விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகள் | 08 - 50 ஆண்டுகள் வரை |

சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதி அங்கு உள்ளடக்கப்படும் வகையில் மதிப்பிடப்பட்ட பெறுமதியிற்கு அதிகமாயின் உடனடியாக அதன் கொண்டு செல்லப்படும் பெறுமதி உள்ளடக்கப்படும் பெறுமதியிற்கு பதிவு செய்யப்படும்.
முக்கிய ஆய்வுகளை செயல்படுத்தும்போது அடையாளங் காணும் தகவுதிறன்களுக்குதிருப்திகொள்ள முடியுமாயின்ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீள் கொள்முதலாக கருதி கொண்டு செல்லப்படும் பெறுமதியில் உட்படுத்தப்பட்டுள்ளது.
ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் அப்புறப்படுத்தியபோது அல்லது அவற்றின் உபயோகத்தின் போது அல்லது விற்பனை மூலம் எதிர்கால பொருளாதார பயன்பாட்டு இல்லாத சந்தர்ப்பங்களிலும் அவற்றினை புத்தகங்களிலிருந்து நீக்கப்படும். இவ்வாறு புத்தகங்களிலிருந்து நீக்கும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் முன்கொண்டுவரப்பட்ட தொகை மற்றும் தேறிய விற்பனை தொகையிடையே வித்தியாசம்) சொத்துக்களை நீக்கிய வருடத்தில் வருமானக்கூற்றுக்கு சீராக்கப்படும்.சகல நிதி வருடங்களினதும் இறுதியிலும், சொத்துக்களின் மீதியாகவுள்ள பெறுமதி, பயனுறுதிஆயுட்காலம் காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறை மீளாய்வு செய்வதுடன் பொருந்தும் சந்தர்ப்பத்தில் அதற்கான சீராக்கங்கள் சகல நிதி வருட இறுதியிலும் மேற்கொள்ளப்படும்.

விற்பனை மூலமான இலாபம் அல்லது நட்டம் சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் பெற்றதொகை ஒப்பிடுவதன் மூலம் முடிவுசெய்யப்படுவதுடன் விரிவான வருமானக் கூற்றில் வேறு வருமானங்கள் அல்லது நட்டங்களாக குறிப்பிடப்படும்.

ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இழப்பீடு ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின்கொண்டு செல்லப்படும் பெறுமதி நிகழ்வுகள் அல்லது நிலைமையில் மாற்றங்கள் காரணமாகக் கொண்டுஅவற்றினை ஈடுசெய்ய முடியாத சந்தர்ப்பத்தில் ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின்கொண்டு செல்லப்படும் தொகையின் பெறுமதி குறைவு மீண்டும்புலனாய்வு செய்யப்படும். கொண்டு செல்லப்படும் பெறுமதி மதிப்பிடப்பட்ட ஈடு செய்யப்படும் பெறுமதி விஞ்சி அதிகரிக்கப்படுவதை உணரும்போது சொத்துக்கள் ஈடு செய்யும் பெறுமதிக்கு பதிவளிக்கப்படும். இழப்பீடு காரணமாக ஏற்படும் நட்டம் அச்சொத்தின் மறுதலை ஆரம்ப மீள் பெறுமதி மிகைகளுக்கு சீராக்கம் செய்யப்படாவிடின் விரிவான வருமானக் கூற்றுக்குள் அடையாளங் காணப்படும்.

2.8 குறித்துரைக்கப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் பங்கு மூலதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.9 வர்த்தக செலுத்தப்படவேண்டியவை

வர்த்தக செலுத்தப்படவேண்டியவை என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின்போது வழங்குனர்களினால் பெற்றுக்கொண்ட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக செலுத்துவதற்குள்ள கடப்பாடாகும்.

நிதிநிலைக்கூற்றில் வர்த்தக மற்றும் வேறு செலுத்தப்படவேண்டியவைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகளாக நிதி நிலைக்கூற்றுதிகதியால் வருடத்துக்குள் அல்லது கேட்கும்போது செலுத்துவதற்குள்ளவைகளாகும். நடைமுறையற்ற பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளஉருப்படிகள் நிதி நிலைக்கூற்றுநாட்களில் வருடத்துக்கு அதிமான காலத்தில் செலுத்துவதற்குள்ளவைகளாகும்.

வர்த்தக செலுத்தப்படவேண்டியவை முக்கியமாக கொடுக்கல் வாங்கல் விலையிற்கிணங்க அறிந்துகொள்வதுடன் பின்னர் செயலுறு வட்டி முறை அடிப்படையில் கடன்தீர் செலவுக்கு அளவிடப்படும்.

2.10 கடன் வாங்குதல்

கடன் வாங்குதல்கள் அடிப்படை தேறிய கொடுக்கல் வாங்கல் செலவு தவிர்ந்த சாதாரண பெறுமதிக்கு அடையாளங் காணப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

கடன் வாங்குதல்கள் கடன்தீர் செலவின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிடைக்கும் நிதி (தேறிய கொடுக்கல் வாங்கல் செலவில்) மற்றும் விடுவிக்கும் பெறுமதியில் மாற்றம் ஏற்படுமாயின் அது அட்டுறு வட்டி முறை கையாளப்பட்டு கடன் பெற்றுக்கொண்ட காலப்பகுதியில் விரிவான வருமான கூற்றுக்குள் அடையாளங் காணப்பட்டுள்ளது.

கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக் செலுத்தப்பட்ட கட்டணங்கள் அது நிகழ முடியுமாயின் அல்லது அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு கடன் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் செலவாக அடையாளங் காணப்பட்டுள்ளது.இங்கு அனைத்து பெறுகைகளும் முடிவடையும் வரை கட்டணங்கள் பிற்போடப்படும். அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான அத்தாட்சி இல்லாதபோது அந்த வசதிகள் உள்ளடங்கப்பட்ட கால வரையறையிற்குள் முன் கொடுப்பனவாகக் கட்டணங்கள் மூலதனமாக்கப்படுவதுடன், வசதிகள் தொடர்புடைய கால எல்லைக்கு கடன்தீர்க்கப்படும்.

2.11 கடன் செலவு

எதிர்பாரக்கப்பட்ட உபயோகத்திற்காக தயார்படுத்துவதற்கு குறிப்பிட்டதொரு காலம் எடுப்பதாலும் மற்றும் கையேற்படுத்துகை, கட்டுமானங்கள் மற்றும் உற்பத்தி தொடர்பாகவுள்ள நேரடியாக தேவைப்படுகின்ற பொதுவான மற்றும் விஷேட கடன் வாங்குதல்கள் செலவு அவ் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்கு தயார்படுத்தும் வரை சொத்துக்களின் செலவுகளுக்கே சேர்க்கப்படும்.

குறுகிய கால முதலீடுகளின் மீது உழைக்கப்பட்ட வருமானங்கள் சார்பான செலவுகள் மூலதனமாக்க முடியுமான கடன் செலவிலிருந்து குறைத்துக் காட்டப்படும்.ஏனைய அனைத்து கடன்களும் அவை நிகழ்ந்த காலப் பகுதியிற்குள் இலாபம் அல்லது நட்டமா என அறிந்துகொள்ளப்படும்.

2.12 ஏற்பாடுகள்

கம்பனியால் ஏற்பாடுகள் கணக்கில் வைக்கப்பட்டிருப்பது நிகழ்கால சட்டஞ்சார்ந்த மற்றும் ஆக்கபூர்வமான கடப்பாடுகள் உள்ளபோது மாத்திரமாக இருப்பதுடன் பொருளாதார நன்மைகள் உள்ளடங்கிய,கடந்த நிகழ்வொன்றின் விளைவாக வளங்கள் வெளிப்பாய்ச்சலினூடாககடப்பாடுகளை விடுவிப்பதற்கு தேவைப்பாடாக இருப்பதுடன் நம்பகமுடியுமான விதத்தில் கடப்பாடுகளின் பெறுமதி மதிப்பிட முடியும்.நாணயத்தின் காலத்தின் பெறுமதியின் தாக்கம் போதுமானதாக இருப்பின், எதிர்பார்க்கும் எதிர்கால நிதிப்பாய்ச்சல்கள் நாணயத்தின் கால பெறுமதியில் நிகழ்கால சந்தை நிலைமை மற்றும் தகைமைக்கேற்றவாறு சொத்துக்கு விசேட இடர்ப்பாடு தோற்றுகிற முன் வரி விகிதாசாரத்திற்கு கழிவு செய்யப்பட்டு அதற்காக ஏற்பாடுகள் முடிவு செய்யப்பட்டுள்ளது. கழிவு செய்வது கையாளும் சந்தர்ப்பங்களில் காலத்துடன் ஏற்பாட்டின் அதிகரிப்பு வட்டி செலவாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

2.13 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகள்

(அ) குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் திட்டம் குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமென்பது தனிப்பட்ட அலகுக்கு கம்பனி செலுத்தும் நிலையான பங்களிப்பின் கீழ் ஓய்வூதிய திட்டமாகும். ஊழியர்களின் முன்னைய மற்றும் நிகழ்கால சேவைக்குரிய அனைத்து ஊழியர்களுக்கும் நன்மைகளை செலுத்தவதற்கு கம்பனியிடம் போதுமானளவு நிதி இல்லாதுவிடின் மேலதின பங்களிப்புத்தொகை செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு கம்பனியிடம் இல்லை. குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் திட்டம் என்பது குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமல்லாத ஓய்வூதிய திட்டமாகும்.

குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் திட்டங்கள் மூலம் ஊழியரொருவர் ஓய்வுபெறும்போது பெறும் ஓய்வு நன்மைகள் அளவு பொருள் விளக்கப்படுத்தியிருப்பதுடன் வயது, சேவைக்காலம் மற்றும் நட்டஈடு என்ற காரணிகளில் ஒன்று அல்லது பலவற்றின் மீது தங்கியுள்ளது.

குறித்துரைக்கப்பட்ட ஓய்வு நன்மைகள் திட்டங்களாக நிதி நிலைமைக் கூற்றில் அடையாளங் காணப்பட்டுள்ள பொறுப்பு, அறிக்கையிடப்பட்ட காலப்பகுதி இறுதியில் குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டில் நிகழ்காலப் பெறுமதியில் திட்டமிடப்பட்ட சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் பெறுமதி குறைக்கப்பட்ட பெறுமதியாகும். குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடு எதிர்வுகூறப்பட்ட அலகொன்றுக்கான வரவு முறை கையாளப்பட்டு சுயாதீன காப்பீட்டுக் கணிப்பாளர் மூலம் வருடாந்தம் கணக்கிடப்படும். குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டில் நிகழ்காலப்பெறுமதி மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதி மதிப்பிடப்பட்ட எதிர்கால பாய்ச்சல் கழிவுபடுத்தி முடிவு செய்யப்படுவதுடன் உயர் தரத்தில் தாபன பிணையத்திற்காக வட்டி விகிதாசாரங்கள் கையாளப்படுவதுடன் நன்மைகள் செலுத்தப்படும் புழக்க நாணயத்தால் அடையாளங்காணப்படும் அதேவேளை உரிய ஓய்வு கடப்பாடு நிபந்தனைகளுக்கு ஏறத்தாழ நிறைமுதிர்ச்சிக்காக நிபந்தனைகள் உள்ளடங்கப்படும். இந்த பிணைமுறிக்காக சிறந்த சந்தையில்லாத நாடுகளின் அரச பிணைமுறிகளில் வர்த்தக விகிதாசாரம் கையாளப்படும்.

வருடத்தின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டில் கணக்கெடுப்பதற்காக கம்பனி சுயாதீன காப்பீட்டு கணிப்பாளர் சேவைகளை பெற்றுக்கொண்டுள்ளது.

அனுபவத்தால் மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கங்கள் மூலம் மற்றும் காப்பீட்டு கணிப்பாளர் தற்கோளான காப்பீட்டு கணிப்பீட்டு இலாபம் அல்லது நட்டங்கள் அவை தோற்றமளித்தபோது காலப்பகுதியில் வேறு

விரிவான வருமானக்கூற்றிற்கு அறவிடுதல் அல்லது பங்குகளுக்கு வரவு வைத்தல் அல்லது மேற்கொள்ளப்படும்.

(ஆ) வரையறுத்த பங்களிப்புத் திட்டம்

இலங்கைக்குள் கம்பனியின் அனைத்து ஊழியர்கள் ஊழியர்கள் சேமலாபநிதியின் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்களாக இருப்பதுடன் உரிய ஊழியர்களின் அடிப்படை மற்றும் திரட்டிய சம்பளத்திலிருந்து முறையே கம்பனியால் 12% மற்றும் 3% அக்குறித்தநிதியங்களுக்கு கம்பனியால் வரவு வைக்கப்படும்

2.14 மானியங்களும் உதவித்தொகைகளும்

சொத்துக்கள் சம்பந்தமான நிதித்துறை மானியங்கள் செலவுக்கு கண்டறியப்படுவதுடன் சொத்தின் பயனுறுதி வாய்ந்த ஆயுட்காலத்திற்குள் நிதிநிலைக்கூற்றின் பிற்போடப்பட்டு விரிவான வருமானங்கள் கூற்றுக்கு பற்று வைக்கப்படும்.

2.15 நிதித்துறை சாராத சொத்துக்கள் மதிப்பு குறைப்பு

நிச்சயமற்ற பயனுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட சொத்துக்கள் (உதாரணமாக நன்மதிப்பு அல்லது பாவனை செய்வதில் ஆயத்தமானதாக இல்லாத அருவச் சொத்துக்கள்) கடன் தீர்ப்பிற்கு உட்படுத்தப்படாததுடன் வருடாந்தபெறுமதி குறைவுக்காக ஆராயப்படும்.கடன்தீர்வுக்காக உட்படும் சொத்துக்கள் அவற்றின் கொண்டு செல்லப்படும் பெறுமதி மீள பெற்றுக்கொள்ள முடியாதென வித்தியாசங்கள் மூலம் அல்லது நிகழ்வுகளின் மூலம் உணர்த்தும்போது மீளாய்வு செய்யப்படும்.

சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய பெறுமதி அதிகரிக்கும் பெறுமதிக்கு, அச்சொத்துக்களின் பெறுமதி குறைவு நட்டம்அடையாளங் காணப்படும். சொத்தின் சாதாரணப் பெறுமதியிலிருந்து அதனை விற்பனை செய்யும்போது அல்லது பாவனை செய்யும்போது ஏற்கப்பட்ட செலவு குறைக்கப்பட்ட பெறுமதி மற்றும் பாவனை செய்யப்பட்டபெறுமதியிடையே உயர் பெறுமதிக்கு மீணடும் பெற்றுக்கொள்ள முடியமான பெறுமதி முடியு செய்யப்படும்.பெறுமதி குறைவு கணிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்களுக்கமைய கீழ் மட்டத்திலிருந்து வகைப்படுத்தப்படுவதுடன் அதற்காக நிதி பாய்ச்சல் (நிதி தோற்றுவிக்கும் அலகுகள்) அடையாளங் காண முடியும்.நன்மதிப்பைத் தவிர நிதிசாராசொத்துக்களின் பெறுமதி குறைந்திருப்பின் அனைத்து பதிவு செய்யும் திகதி சார்ப்பாகவும் தேவையான சீராக்களுக்காக மீளாய்வு செய்யப்படும்.

2.16 நிதிச் சொத்துக்கள்

2.16.1 வகைப்படுத்துதல்

கம்பனி அதன் நிதிச் சொத்துக்கள் பின்வரும் வகையினங்களுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இலாபம் அல்லது நட்டத்தின் மீது சாதாரணப் பெறுமதியிற்கு, கடன் மற்றும் கிடைக்கவேண்டியவை விற்பனை செய்வதற்காகவுள்ள,மற்றும் முதிர்வடையும் வரை பிடித்துவைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படும். நிதிச் சொத்துக்களை கையேற்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தல் தங்கியிருக்கும். முகாமைத்துவம் அதன் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்துதல் அடிப்படை அடையாளங் காண்பதிலிருந்து முடிவு செய்யப்படுவதுடன் அனைத்து பதிவுத் திகதியிலும் அது மீண்டும் பெறுமதியிடப்படும்.

(அ) இலாபம் அல்லது நட்டத்தின் மீது சாதாரணப் பெறுமதியின் கீழ் நிதிச் சொத்துக்கள்

இதன் கீழ் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படுவது முகாமைத்துவம் பிரதானமாக குறுகிய காலத்திற்குள் விற்பனை செய்யும் நோக்கில் கையேற்கப்பட்ட சொத்துக்களாகும். 12 மாதக் காலத்திற்குள் தீர்ப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுமாயின் இந்த வகைச் சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படும். அவ்வாறு இல்லாதிருப்பின் அவை நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படும். ஓப்புரவற்ற முறையில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின் தவிர்ந்த வகைக்கெழுதிய சாதாரண பெறுமதியின் மீதுநிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கடன் மற்றும் கிடைக்க வேண்டியவை

கடன் மற்றும் கிடைக்கவேண்டியவை என்பது செயற்பாட்டு சந்தைக்குள் குறிப்பிடப்படாத நிரந்தர அல்லது முடிவு செய்ய முடியுமான கொடுப்பனவுடனான வகைக்கெழாதநிதிச் சொத்துக்களாகும். பதிவுசெய்யும் திகதியில் முதிர்வு பெறுவதற்கு 12 மாதங்களை விட அதிகமான காலம் எடுக்கும் சொத்துக்களைத் தவிர இந்த சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்படும். முதிர்வு பெறுவதற்கு 12 மாதங்களை விட அதிகமான காலம் எடுக்கும் சொத்துக்கள் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படும். கம்பனியின் கடன் மற்றும் கிடைக்கவேண்டியவை நிதி நிலைக்கூற்றில் வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை மற்றும் காசு மற்றும் காசு சார்ந்தவை போன்ற இரு வகைகளினாலானது.

(இ) நிறை முதிர்ச்சிவரை பேணப்படும் முதலீடுகள்

நிறை முதிர்ச்சி வரை பேணப்படும் முதலீடுகள் என்பது நிரந்தரமான அல்லது முடிவுசெய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நிறுவனத்துக்குச் சொந்தமான நிலையான முதிர்வுத்தன்மை அதாவது முதிர்ச்சி பெறும் வரை பேணப்படும்நேர் உட்கருத்து மற்றும் இயலுமை வகைக்கெழுதல் அல்லாத நிதி சொத்துக்களாகும்.

(ஈ) விற்பனை செய்வதற்காகவுள்ள

விற்பனை செய்வதற்காகவுள்ள நிதி சொத்துக்கள் வகைக்கெழுதல் அல்லாதவைகளாக இருப்பதுடன் இந்த வகையினத்தின் கீழ் குறித்துக்காட்டப்படுகின்ற அல்லது வேறு வகையின் கீழ் வகைப்படுத்தப்படாத சொத்துக்களாகும்.நிதிநிலைக்கூற்று திகதியில் 12 மாத காலங்களுக்குள் அவற்றை

நீக்குவதற்கு முகாமைத்துவம் முடிவு செய்வதாயின் தவிர இந்த சொத்துக்கள் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்படும்.

2.16.2 அடையாளங்காணுதல் மற்றும் அளவுமுறை நிதிச் சொத்துக்கள் வழக்கமாக கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை கம்பனியில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் திகதியிற்கு-சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு பிணைக்கப்படுகின்ற திகதியாக கண்டறியப்படும்.முதலீடுகள் அடிப்படையாக சாதாரண பெறுமதியின் மீதுகொண்டு செல்லப்படாத அனைத்து நிதிச்சொத்துக்களுக்கான கொடுக்கல் வாங்கல்களின் செலவுகள் உட்படுத்தப்பட்டு அடையாளங் காணப்படும்.இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதி ஏற்கின்ற நிதிச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதிக்கு அடையாளங் காணப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல்கள் செலவு விரிவான வருமானக் கூற்றில் செலவாக அடையாளங் காணப்பட்டுள்ளது. நிதிச் சொத்துக்கள் அடையாளங் காணாதிருப்பது முதலீடுகள் காலங்கடந்து அல்லது கையேற்கப்பட்டிருக்கும்போது மற்றும் கம்பனியின் அனைத்து அபாய உரிமையிற்கு கையளிக்கப்பட்டிருந்தால் மாத்திரமேயாகும். விற்பனைசெய்வதற்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டங்கள் மூலம் சாதாரண பெறுமதியின் மீது ஏற்படுகின்றநிதிச் சொத்துக்கள் பின்னர் சாதாரண பெறுமதிக்கமைய கொண்டு செல்லப்படும்.கடன் மற்றும் கிடைக்கவேண்டியவை அட்டுறு வட்டி முறை உபயோகித்து கடன்தீர் செலவிற்கு முன் கொண்டு செல்லப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சாதாரணப் பெறுமதியிற்கு வகைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதியின் வித்தியாசம் காரணமாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அவை தோன்றும் காலத்திற்குரிய விரிவான வருமானக் கூற்றின் தேறிய இலாபம் அல்லது நட்டம் - தேறியது என்ற தலைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் மீது சாதாரண பெறுமதியாக கருதி பெறுமதியிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் கிடைக்கும் இலாபங்கள் வருமானங்கள் விரிவான வருமானக் கூற்றில் வேறு வருமானங்கள் பகுதியாக அடையாளங்காணப்படுவது நிறுவனத்தின் கொடுப்பனவுகள் கிடைப்பதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டபோது மாத்திரமாகும்.

விற்பனைக்காகவுள்ள வகைப்படுத்தப்பட்ட நிதி மற்றும் நிதித்துறைசாரா பிணையங்களின் சாதாரண பெறுமதியின் வித்தியாசங்கள் வேறு விரிவான வருமானங்களின் கீழ் அடையாளங் காணப்படும். விற்பனை செய்வதற்காகவுள்ள ரகத்திற்குரிய வகைப்படுத்தப்பட்ட பிணையங்களின் விற்பனை செய்த மற்றும் பெறுமதி குறைந்த சந்தர்ப்பத்தில் திரட்டிய பெறுமதி சாதாரண பெறுமதிக்கு சீராக்கங்கள் பங்குகளின் கீழ் அடையாளங் காணப்படுவதுடன் அது முதலீட்டு பிணையங்களின் இலாபம் அல்லது நட்டமாகவிரிவானவருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

விற்பனை மீதுள்ள பிணையங்களின் வட்டி பயனுறுதி வட்டி முறை உபயோகித்து கணக்கிடப்படுவதுடன் விரிவான வருமானக் கூற்றில் வேறு வருமானங்களின் பகுதியாகக் காட்டப்படும். விற்பனை செய்வதற்காகவுள்ள பங்குகளின் உபகரணங்களின் மீது இலாபங்கள் கம்பனியிற்கு அது கிடைக்கும் உரிமையினை உறுதிப்படும்போது விரிவான வருமானக்கூற்றில் வேறு வருமானங்களின் பகுதியாக அடையாளங் காணப்படும்.

2.17 நிதிக் கருவிகள் ஈடுசெய்தல்

கண்டறியப்பட்ட பெறுமதியை ஈடுசெய்வதற்காக சட்டரீதியான தாக்கம் இருக்கும்போது தேறிய அடிப்படையின் மீது அல்லது சொத்துக்கள் காசாக்கப்பட்டு பொறுப்புகள் ஒரே நேரத்தில் ஈடுசெய்யும்போதுஇநிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடு செய்து தேறிய பெறுமதியை நிதிநிலைக்கூற்றில் பதிவுசெய்யப்படும். சட்டரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் உரிமை எதிர்கால நிகழ்வுகளின் மீது குறித்துரைக்கப்படாதிருப்பதுடன் பொதுவான தொழில் முயற்சிகளின்போது கம்பனியின் அல்லது எதிர்தரப்பினர்களின் கொடுப்பனவுகளைத் தவிர்க்கும் சந்தர்ப்பத்தில் அல்லது கம்பனி நொடித்துப்போன அல்லது திவாலாகிய சந்தர்ப்பங்களில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

2.18 நிதிச்சொத்துக்களின் மதிப்பு குறைவு

(அ) கடன்தீர் செலவிற்கு கொண்டு செல்லப்படும் பெறுமதியுள்ள சொத்துக்கள்

கம்பனியினால் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி மதிப்பு குறைவு தொடர்பாகஉட்படுத்தப்படாத அத்தாட்சிகள் இருப்பதாவென அனைத்து அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பிடப்படும். நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியில் மதிப்பு குறைவு ஏற்பட்டிருப்பின் மற்றும் மதிப்பு குறைவு நட்டம் ஏற்படமுடியுமாவது சொத்து ஆரம்ப நடவடிக்கையாக அதனை இனங்கண்டு கொண்டதன் பின்னர் நிதிச்சொத்துக்கள்அல்லது தொகுதி நம்பகரமானதாக மதிப்பிடுவதற்கு இயலுமை இருக்குமிடத்து மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதி ஓட்டம் மீதான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மதிப்பு குறையும் அத்தாட்சிகளாக கடன்படுநர் அல்லது கடன்படுநர் தொகுதியில் கருதக்கூடிய நிதிச் சிக்கல்களாகமுகங்கொடுக்கின்ற வட்டி அல்லது ஆரம்ப நிதி பிற்போடப்படுதல் அல்லது செலுத்துவதற்குத் தவறுதல் கடன்தீர்க்க வகையில்லாத நிலை அல்லது வேறு வசதியின்மைகள் மற்றும் கண்காணிக்கப்பட்ட தரவுகள் மூலம் நிலுவைத் தொகைகளின் மாற்றங்கள் அல்லது கைவிடல்களுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் ஊடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிப்

பாய்ச்சல்களின் கருதக்கூடியவாறான குறைவொன்றினை காட்டப்படும்.

கடன் மற்றும் கிடைக்க வேண்டிய வகைகளுக்கான நட்டம் அளவு சொத்தினை கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் நிதிச் சொத்துக்களின் பயனுறுதி வட்டி வீதங்கள் மீது கழிவுபடுத்தப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி (இப்போது வரை ஏற்கமுடியாத எதிர்கால நட்டங்கள் இழப்பீடுகள் தவிர்ந்த) இடையே வேறுபாடாக அளவிட முடியும். சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதி குறைக்கப்படுவதுடன் நட்ட அளவு வருமானக் கூற்றில் இனங்கண்டுகொள்ளப்படும். கடன் அல்லது முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளும் முதலீடுகளுக்காக மாறும் வட்டி வீதமொன்று இருப்பின் பெறுமதி குறைவினை அளவிடுவதற்காக ஈடுபடுத்தும்பயனுறுதி வட்டி வீதங்கள் கழிவு செய்து ஒப்பந்தத்தின் கீழ் முடிவுசெய்யப்படும்.

பிரயோக தகுமுறையாக உற்றுநோக்கிய சந்தை விலை பாவனையில் நிதிக் கருவிகளின் சாதாரணப் பெறுமதி அடிப்படையாகக் கொண்டு இந்த இழப்பீடு (நட்டம்) கம்பனியினால் பெறுமதியிடப்படும்.

பிற்காலத்தில் மதிப்பு குறைவடைவதனால் ஏற்படும் நட்டத்தின் குறைவு ஏற்படும்போது மற்றும்,மதிப்புகுறைவு கண்டறியப்பட்டதன் பின்னர் கடன்படுநரின் கடன்கள் தரப்படுத்துவதனை மேம்படுத்துதல் முன்னர் இனங்கண்டுகொண்ட மதிப்பு குறைவு நட்டங்கள் மறுதலைவிரிவான வருமானைக் கூற்றினுள் இனங்கண்டுகொள்ளப்படும்.

(ஆ) விற்பனை செய்யப்படுமென வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள்.

கம்பனியின் அனைத்து அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுதியின் பெறுமதியில் ஏதும் குறைவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாவெனகணிப்பிடப்படும். கடன் பிணையங்கள் தொடர்பாக கம்பனியினால் மேற்குறிப்பிட்ட (அ) பகுதியில் காட்டிய செயல்முறைகள் பின்பற்றப்படும். விற்பனைக்காகவுள்ள வகைக்குவகைப்படுத்தப்பட்ட பங்குகளின் முதலீடுகள் தொடர்பாக உத்தரவாதத்தின் சாதாரணப் பெறுமதியில் கருதக்கூடிய அல்லது தொடர்ச்சியான வீழ்ச்சியாக அக்குறித்தசெலவுக்கு கீழாக இருத்தல் அச்சொத்துக்களின் பெறுமதியின் வீழ்ச்சியாக காட்ட முடியும். விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறான அத்தாட்சிகள் இருப்பின் திரட்டிய நட்டத்தினை (கையேற்படுத்துகைச் செலவு மற்றும் நடைமுறை சாதாரணப் பெறுமதியிடையே வித்தியாசம் இலாபங்களாக ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட நிதிச் சொத்துக்களின் மீது பாதகமான நட்டமாக இருப்பின் குறைத்துள்ளதுடன் அது பங்குகள் கருவிகளுக்கான நட்டம்விரிமான வருமானக் கூற்றில் கண்டறியப்படுவதுடன்மறுதலை விரிமான வருமானக் கூற்றின் மூலம் இடம்பெறும்.பிற்காலப்பகுதியில் விற்பனை என்ற தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளின் சாதாரணப் பெறுமதியில் மீண்டும் அதிகரிப்பு ஏற்படுமாயின் மற்றும் அந்த அதிகரிப்பு இலாபம் அல்லது நட்டத்தில் உள்ள பாதகமான நட்டத்தினை இனங்கண்டு கொண்டதன் பின்னர் ஏற்படுமாயின் அந்த பாதகமான நட்டம் வருமானக் கூற்றுக்கு மீண்ம் சீராக்கப்படும்.

2.18 நிதிப் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிப் பொறுப்புக்களின் கீழ் வர்த்தகம்,ஏனைய செலுத்த வேண்டியவைகள், வங்கிக்கடன்கள், ஏனைய கடன் வாங்குதல்கள் மற்றும் பாதகமான நாணய முன் ஒப்பந்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக சாதாரண பெறுமதியில் காட்டப்படுகின்ற நிதிச் பொறுப்புக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மூலதன பொறுப்புக்கள் ஆரம்பத்தில் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன் பின்னர் கழிவு செய்யும்பெறுபேறு குறிப்பிடப்படாதிருப்பின் பயனுறுதி வட்டிமுறை பிரயோகிக்கப்பட்டு கடன் தீர்ப்பு செலவிற்குஅளவிடப்படும்.அதற்கமைய அவை செலவுக்கு குறிப்பிடப்படும்.

2.20 வருமானங்களை இனங்காணுதல்

கம்பனியிற்கு பொருளாதார ரீதியாக இலாப ஓட்டம்ஏற்படுமாயின் மற்றும் வருமானங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக ஏற்படும் அல்லது ஏற்படமுடியுமான செலவினங்கள் நம்பகமான விதத்தில் அளவிட முடியுமாயின் மாத்திரமே வருமானங்கள் இனங்கண்டுகொள்ளப்படும். வருமானம் பெற்ற அளவிட முடியுமான சாதாரண பெறுமதி அல்லது வர்த்தக கழிவு வீதங்கள் அல்லது விற்பனை வரிகளின் மூலம் கிடைக்க வேண்டிய தேறிய பெறுமதியின் மீது அளவிடப்படும். வருமானத்தை அறிந்துகொள்ளும் நோக்கத்திற்காக பின்வரும் தகவுதிறன்கள் பிரயோகிக்கப்படும்.

(அ) சேவைகளை வழங்கும்போது

சேவை வழங்குவதன் மூலம் கிடைத்த வருமானம் அந்தச் சேவை வழங்கிய அல்லது நடைமுறைப்படுத்திய கணக்கியல் காலப்பகுதிக்குள் அடையாளங் காணப்படும்.

(ஆ) வட்டி

திரட்டுவதில் சந்தேகம் இல்லாதுவிடின் அதனை வட்டி அட்டுறுவாக அடையாளங் காணப்படும்.

(இ) வாடகை வருமானங்கள்

வாடகை வருமானங்கள் வாடகை ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

(ஈ) நில உரிமைக் கட்டணங்கள் மற்றும் சலுகை

குறித்த ஒப்பந்தத்தின் கருத்துரையிற்கு இணங்கும் வகையில் நிலஉரிமைக் கட்டணங்கள் மற்றும் சலுகை கட்டணங்கள் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

உ) சர்வதேச கூஉள்ளக தரையிறக்கம் மற்றும் தரிப்பிட வருமானங்கள்

தரையிறக்கம் மற்றும் தரிப்பிட வருமானம், குறைந்தபட்ச கட்டணங்கள் மற்றும் விமானநிலையத்தின் ஏற்றிடத்தின் தரித்திருக்கும்

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

காலத்தின் கீழ் விமானம் கிளம்பும் அதிகபட்ச எடை (MTOW) அடிப்படையாக அமைவதுடன் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

ஊ) பறத்தல் வருமானங்கள்

பறத்தல் வருமானங்கள் விமானம் கிளம்பும் அதிகபட்ச எடையின் அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

எ) விமானப் பயணிகள் பாலங்கள் வருமானம்

விமானப் பயணிகள் பாலங்கள் வருமானங்கள் பாவனை செய்யப்படுகின்ற காலம் மற்றும் விமான வகைகளின் அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் வருமானம் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

ஏ) விமானமேற்றும் தீர்வை

விமானமேற்றும் தீர்வை இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையால் நிதிச்சட்டத்துக்கமைய திரட்டப்படவதுடன் இலங்கை ரூபா 140/-இற்கு சமமாகும் வரையில் ஐ.அ.டொ 9.75 வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள்(இலங்கை) கம்பனியிற்கு பண அனுப்பீடு செய்யப்படும். வருமான நிதி அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

ஒ) பிரவேச அனுமதிச்சீட்டு கட்டணம் வாகன தரிப்பிட கட்டணங்கள் மற்றும் பேஜிங் பலகை

வருமானங்கள் நிதி அடிப்படையில் திரட்டப்படுவதுடன் அக்குறித்த அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

ஓ) ஏனையவை

பயணிகள் ஓய்வரை வருமானங்கள் செலுத்தும் முறைக்கமைய நிதி மற்றும் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

திண்மக் கழிவு எரிஉலை வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

ஏனைய வருமானங்கள் நிதி மூலங்கள் செலுத்தும் முறைக்கமைய நிதி மற்றும் அட்டுறு அடிப்படையில் அடையாளங் காணப்படும்.

3. நிதி இடர்ப்பாட்டு முகாமைத்துவம்

3.1 நிதி இடர்ப்பாட்டு காரணிகள்

கம்பனியின் செயற்பாடுகள் பல்வேறு இடர்பாடுகளைவெளிப்படுத்துகின்றன. அதாவது சந்தை இடர்ப்பாடுகள்(வெளிநாட்டு நாணய இடர்ப்பாடுகள் காசுப்பாய்ச்சல் மற்றும் சாதாரணப் பெறுமதியின் வட்டி வீதங்களின் அபாயம்உள்ளடங்களாக) கடன் அபாயம் மற்றும் திரவத்தன்மை இடர்ப்பாடாகும்.

(அ) சந்தை அபாயம்

(i) வெளிநாட்டு நாணய அபாயம்

கம்பனியின் நாணயமாற்று வீதங்கள் எளிதில் தளம்பல்களுக்கு உள்ளாகின்றன. விஷேடமாக ஐக்கிய அமெரிக்கா டொலர், யூரோ,மற்றும் ஜப்பான் யென்களுக்கமைய இலங்கை ரூபா தளம்பல்களுக்குஉள்ளாகின்றன. கம்பனியின் தொழிற்பாட்டு நாணயமாக இலங்கை ரூபா அமைவதுடன்இ அதிகளவு கொடுக்கல் வாங்கல்கள் ரூபாவால் மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய நிதி கடன் செலுத்துவதற்காக கையாளப்படுகின்ற வெளிநாட்டு நாணயமாக கருதப்படும். சில வர்த்தக மற்றும் கிடைக்கவேண்டியவைப் போன்று வர்த்தகம் மற்றும் செலுத்த வேண்டியவையும் வெளிநாட்டு நாணயத்தால் மேற்கொள்ளப்படும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவினால் முன்வைக்கப்படுவதனால் மாற்றங்களின் போதானஇடர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அபாயம் போன்ற இரண்டும் வெளிநாட்டு நாணயம் தளம்பல்களுக்குள்ளாகின்றன. வெளிநாட்டு நாணயங்களின் நாணயமாற்று வீதங்களின் மாற்றங்கள் கம்பனியின் இலாபம் அல்லது நட்டத்தின் பால் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா டொலருக்கு எதிராக இலங்கை ரூபா வீழ்ச்சியடைவதனால் அதாவது திறைசேரி வெளிநாட்டு நாணயத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ள கடனைச் செலுத்துவதற்கு செல்லும்போது கம்பனியின் இலாபகரமான தன்மையினை அதிகளவில் பாதிப்புக்குள்ளாகும்.

ஐக்கிய அமெரிக்கா டொலர், யூரோ,ஜப்பான் யென்களுக்கு எதிராகஏனைய அனைத்து மாறிலிகள் மாற்றம் பெறாது இருந்தபோது இலங்கை ரூபாவின் நாணயமாற்றுவீதத்தில் ஏற்பட முடியுமான சாதாரண மாற்றங்களுக்கு கம்பனியின் உணர்திறன் பின்வரும் அட்டவணையல் காட்டப்பட்டுள்ளது. கம்பனியினது நிதி கருவிகள் கம்பனியில் முன்வைக்கப்படுகின்ற மற்றும் எழுத்தாலான நிதியானஇலங்கை ரூபாவால் பெயரிடப்பட்டதன் பின்னர் ஐக்கிய அமெரிக்கா டொலர் மற்றும் ஜப்பான் யென் பிரதான நாணய அலகுகளாகும். சம பங்குகளின் மீதான ஐக்கிய அமெரிக்கா டொலர், யூரோ மற்றும் ஜப்பான் யென்களின் நாணயமாற்று வீதங்கள் மாற்றம் பெறுவதனால் தாக்கங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

இலங்கை ரூபாவிற்கு நிகராக அமெரிக்கா டொலரின் நாணயமாற்று வீதத்தின் உணர்திறன்

| | | **2016** **இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா)** | **2015** இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|
| 10 வீதத்தினால் அ.டொ. பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-10%) | **(90,680,460)** | (235,302,690) |
| 15 வீதத்தினால் அ.டொ. பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-15%) | **(136,020,690)** | (352,954,035) |
| 20 வீதத்தினால் அ.டொ. பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-20%) | **(181,360,920)** | (470,605,381) |

இலங்கை ரூபாவிற்கு நிகராக யூரோவின் நாணயமாற்று வீதத்தின் உணர்திறன்

| | | **2016** **இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா)** | **2015** இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|
| 10 வீதத்தினால் யூரோவின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-10%) | **(972,499)** | 1,132,926 |
| 15 வீதத்தினால் யூரோவின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-15%) | **(1,458,748)** | 1,699,389 |
| 20 வீதத்தினால் யூரோவின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-20%) | **(1,944,997)** | 2,265,852 |

இலங்கை ரூபாவிற்கு நிகராக ஜப்பான் யென்னின் நாணயமாற்று வீதத்தின் உணர்திறன்

| | | **2016** **இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா)** | **2015** இலாபம் அதிகாரித்தல் / இலாபம் குறைதல் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|
| 10 வீதத்தினால் யென்னின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-10%) | **(86,054,995)** | 82,549,936 |
| 15 வீதத்தினால் யென்னின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-15%) | **(129,082,492)** | 123,824,903 |
| 20 வீதத்தினால் யென்னின் பெறுமதி அதிகரிப்பு/பெறுமதி குறைதல் | (2016-20%) | **(172,109,989)** | 165,099,871 |

(ii) பண ஓட்டம் மற்றும் சந்தைப் பெறுமதிகள் வட்டி விகிதாசார அபாயம்

கம்பனியின் வட்டி விகிதாசார அபாயம் ஐக்கிய அமெரிக்கா டொலர், யூரோ மற்றும் ஜப்பான யென்கள் என்ற பேரில் எடுக்கப்பட்ட நீண்டகால கடன் வாங்குதல்களிலிருந்து தோன்றியவைகளாகும். இவை நிலையான விகிதாசாரங்களின் மீது வெளியிடப்படுவதுடன் அதன் மூலம் கடன் எடுப்பனவுகளின் மீது பண ஓட்ட வட்டி விகிதாசார அபாயம் குறைக்கப்படும். மாறு வீதங்களின் அடிப்படையில் பணம் வைத்துக் கொள்கின்றபோது, இது மேலும் குறைக்கப்படும். நிலையான விகிதாசாரங்களின் அடிப்படையில் வெளியிடும் கடன்கள் கம்பனியின் சந்தை பெறுமதி வட்டி பெறுமதிகள் வட்டி விகிதாசார அபாயம் வெளிப்படுத்தும்.

கம்பனி இந்த வட்டி விகிதாசாரங்களின் மாறுபாடுகள் கடந்த 4 ஆண்டு பூராவும் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன்,வட்டி விகிதாசாரங்களின் இந்த மாறுபாடுகள் நிகரமதிப்பிற்கு அதன் மூலம் அளவு ரீதியான தாக்கம் ஏற்படவில்லை என்று கம்பெனி தீர்மானம் எடுத்துள்ளது.

(அ). கடன் அபாயம்

கடன் அபாயம் வெளிவாரி தரப்பினர்களின் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளின் கீழ் தோற்றம் பெறுகின்றது. மேற்படி தகவல்கள் குறிப்பு இலக்கம் 26 இல் காட்டப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(ஆ). திரவத்தன்மை அபாயம்

நிதிப்பாய்ச்சல் எதிர்வுகூறல் நிதிப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும். தொழிற்பாட்டு தேவைப்பாடுகளுக்கு போதுமான அளவு நிதியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கம்பனியின் திரவத்தன்மையின் தேவைப்பாடு எதிர்வுகூறுதல் நிதிப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படும். அவ்வாறான எதிர்வுகூறல் கம்பனியினது கடன் நிதியியல் திட்டமிடல்கள்,ஒப்பந்த இணக்கப்பாடுகள், உள்ளக நிதிநிலைமைக் கூற்று விகிதாசார இலக்குகளுடன் இணங்குதல் மற்றும் உரித்துடையதாயின் வெளிவாரி சட்ட ஒழுங்குவிதிகள் கவனத்தில் கொள்ளப்படும். உதாரணமாக நிதி வரையறைகள் கவனத்தில் கொள்ளலாம்.

தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவ தேவைப்பாடுகளை விஞ்சிய கம்பனியின் கையிலுள்ள, மிகை நிதி திரவத்தன்மையினது வருநிலை இழப்பை குறைத்துக்கொள்வதற்கு அரசின் பிணையங்களில் முதலீடு செய்யப்படும்.

3.2 மூலதன வருநிலை இழப்பு முகாமைத்துவம்

பங்குரிமையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக கம்பனியை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் ஆற்றலை பாதுகாத்தல், ஏனைய பங்குதாரர்களுக்கு நலன்களை வழங்குதல், மூலதன செலவை குறைத்துக்கொள்வதற்காக சிறப்பான மூலதன கட்டமைப்பை பேணல் என்பன மூலதனத்தை முகாமைத்துவம் செய்கின்ற போது கம்பனியின் இலக்காக அமைகின்றது.மூலதன கட்டமைப்பை சீராக்குதல் அல்லது பேணும் பொருட்டு கம்பனியின் பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபங்களை சீராக்குதல், பங்குரிமையாளர்களுக்கான சலுகைகளை சீராக்குதல், புதிய பங்குகளை வெளியிடுதல் அல்லது கடன்களை குறைப்பதற்காக சொத்துக்களை விற்பனை செய்யப்படும்.கம்பனியின் பங்கு இலாபங்களை வெளியிடுவதற்கு முன்னர்பங்கிலாபங்களின் விகிதாசாரங்களை பேணும் பொருட்டு கடன்தீர்க்கும் ஆற்றல் மதிப்பிடப்படும்.துறையில் ஏனைய நிறுவனங்களுடன் இணங்குவதற்கு கம்பனி நெம்புகோள் வீத அடிப்படையில் மூலதனத்தை மேற்பார்வை செய்கின்றது. இந்த விகிதாசாரம் மொத்த கடனை, மொத்த மூலதனத்தைக் கொண்டு வகுப்பதன் மூலம் கணிப்பிடப்படும். கடன் ஐந்தொகையில் காணப்படும் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத அனைத்து கடன் வாங்குதல்களும் கடனாக கணக்கிடப்படும். நிதிநிலைக்கூற்றில் காட்டப்பட்டுள்ளவாறு மொத்த மூலதனம் சம பங்குகளாக கணக்கிடப்படும்.

ீ

2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மற்றும் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கானநெம்பிணைப்பு விகிதாசாரம் பின்வறுமாறு காட்டப்பட்டுள்ளது.

| | **2016** | 2015 |
|---|---|---|
| | **ரூ.** | ரூ. |
| மொத்த கடன் எடுப்பனவுகள் (குறிப்பு 21) | **37,679,349,374** | 37,729,645,200 |
| கழிப்பனவு: காசும் காசு சார்ந்தையும் (குறிப்பு 18) | **(22,707,949,070)** | (15,549,644,460) |
| **தேறிய கடன்** | **14,971,400,304** | 22,180,000,740 |
| மொத்த சமபங்கு | **16,436,210,776** | 11,012,440,870 |
| மொத்த மூலதனம் | **31,407,611,080** | 33,192,441,610 |
| நெம்பிணைப்பு விகிதாசாரம் | **48%** | 67% |

மேற் குறிப்பிடப்பட்ட கடன் வாங்குதல்கள் முழுமையாக திறைசேரியுயினூடாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் என்பன அபிவிருத்தி செய்வதற்காக நடைமுறை சந்தை விகிதாசாரங்களுக்கமைய தங்க நாணய உத்தரவாதத்தின் கீழ் எடுத்த கடன்களாலானது. கழிவுபடுத்தலின் தாக்கம் கருதக்கூடியதாக அமையாததனால் கடன் வாங்குதல்களின் பொதுவான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதிக்கு சமமானதாக அமையும்.

4. இக்கட்டான கணக்கியல் மதிப்பீடு மற்றும் தீர்ப்புகள்

மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் வழக்கமாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படவதுடன், வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை அடிடையாகக் கொண்டிருப்பதுடன் சாதாரணமானது என நம்பமுடியுமான வருங்கால நிகழ்வுகளின் எதிர்ப்பார்ப்புகள் உள்ளடங்கப்படும்.

இக்கட்டான கணக்கியல் மதிப்பீடு மற்றும் தற்கோள்கள்

கம்பனி எதிர்காலம் தொடர்பான மதிப்பீடு மற்றும் தற்கோள் மேற்கொள்ளப்படும். கணக்கியல் மதிப்பீடுகள் அரிதாக குறித்த உண்மை பெறுபேறுகளுடன் ஒத்துப்போகும். அடுத்த நிதிவருடத்தின் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் பெறுமதியிற்கு போதுமானளவு சீராக்கங்கள் காரணமாக கருதக்கூடியவாறான குறிப்பிடத்தக்க அபாயமுள்ள மதிப்பீடு மற்றும் தற்கோள் பின்வருமாறு சாராம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ளன.

(அ) வரையறுக்கப்பட்ட சலுகைத் திட்டம் - பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட சலுகைத்திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதி, கணிதரீதியிலான அடிப்படையில் பல தற்கோள்கள் பிரயோகிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகின்ற பல காரணிகள் மீது தங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட சலுகைத் திட்டத்தில் தேறிய செலவு (வருமானம்) முடிவு செய்யும்போது பயன்படுத்தும் தற்கோள்களுக்குள் கழிவு வீதங்கள் உள்ளடங்கப்படும். இந்த தற்கோள்களின் ஏதேனும் மாற்றம் வரையறுக்கப்பட்ட சலுகைத் திட்டத்தில் கொண்டு செல்லப்படும் தொகையிற்கு தாக்கம் விளைவிக்கும். கம்பனியால் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் தகுந்த கழிவு வீதங்களை முடிவு செய்யும். இது வரையறுக்கப்பட்ட சலுகை இணைப்புக்களை ஈடுசெய்வதற்காக எதிர்காலத்தில் தேவையான நிதிப்பாய்ச்சல்களில் நிகழ்காலப் பெறுமதி முடிவு செய்யும் வட்டி வீதமாகும். வரையறுக்கப்பட்ட சலுகைத் திட்டத்திற்கான ஏனைய பிரதான தற்கோள்கள் நடைமுறை சந்தை நிலைமைகளை அடிப்படையாக கொண்டமையும். மேலதிக தகவல்கள் 22 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் பலனாக தோன்றிய, தற்கால சட்டம் அல்லது இணக்கப்பாட்டு பிணைப்புகள் உள்ளவிடத்தும், அவற்றுக்கு தீர்வுகளை காணுகின்ற போதும், பொருளாதார பலன்களை வழங்குகின்ற வளங்கள் வெளிநோக்கிய ஒட்டம் மற்றும் அவற்றை நம்பகமுடியுமான விதத்தில் அளவிட முடியுமாகும்போது கம்பனியால் ஏற்பாடுகள் அடையாளம் காணப்படுகிறது. இந்த இணைப்புகளுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளை அறிக்கையிடும் போது இறுதி பிரேரணைகள் பற்றிய தீர்ப்புகளை பயன்படுத்தல் அவசியமாகவுள்ளது. எல்லா ஐந்தொகை திகதியிலும் ஒதுக்கீடுகளை மீளாய்வு செய்தலின் பலனாக, கம்பனி தற்கால மதிப்பீடுகளை நன்றாக பிரதிபலிக்கும் வகையில் தேவையான சீராக்கமும் செய்துள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| 5. வருமானம் | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| வான்செலவு சார்ந்த | **4,378,530,773** | 3,737,262,112 |
| வான்செலவு அல்லாத | **13,648,726,406** | 11,481,497,959 |
| | **18,027,257,179** | 15,218,760,071 |
| **வான்செலவு சார்ந்த வருமானங்கள்** | | |
| தரையிறங்கு மற்றும் தரிப்பிட வருமானங்கள் | **2,966,442,300** | 2,497,635,025 |
| பறத்தல் வருமானங்கள் | **1,036,388,088** | 904,646,520 |
| விமானப் பயணிகள் பாலங்கள் மூலமான வருமானங்கள் | **362,422,220** | 323,587,157 |
| உள்ளக தரையிறக்கம் மற்றும் தரிப்பிட வருமானங்கள் | **13,278,165** | 11,393,410 |
| | **4,378,530,773** | 3,737,262,112 |
| **வான்செலவு அல்லாத வருமானங்கள்** | | |
| விமானமேறும் தீர்வைகள் | **4,702,319,798** | 3,936,659,028 |
| சலுகை கட்டணம் | **4,149,163,443** | 3,510,046,152 |
| வாடகை | **3,030,668,988** | 2,498,812,543 |
| வேறுவான்செலவு அல்லாத வருமானங்கள் | **607,530,919** | 516,438,486 |
| பிரவேச அனுமதிச்சீட்டுகள் | **447,446,823** | 422,333,759 |
| நில கையாளுகை உரிமைக் கட்டணங்கள்-ஸ்ரீ லங்கன் ....................................... | **372,721,248** | 298,976,680 |
| உரிமைக் கட்டணங்கள்-ஸ்ரீ லங்கன் கேட்டரிங் சேர்விஸ் | **246,709,673** | 212,723,235 |
| வாகன தரிப்பிட கட்டணங்கள் | **58,652,169** | 50,660,514 |
| நில கையாளுகை உரிமைக் கட்டணம் - இரத்மலானை/ப.ச.வி | **11,308,691** | 9,826,194 |
| ஏனைய வருமானங்கள் | **15,513,814** | 11,183,207 |
| பயிற்சி நிலையத்தின் வருமானங்கள் | **6,690,841** | 13,838,163 |
| | **13,648,726,406** | 11,481,497,959 |
| **மொத்த வான்செலவு சார்ந்த மற்றும் வான்செலவு அல்லாத வருமானங்கள்** | **18,027,257,179** | 15,218,760,071 |

## நிதி குறிப்புகள் தொடர்ந்தும்.....

### 6. ஏனைய வருமானங்கள்

| | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| அரசமானியங்கள் கடன்தீர் செலவு | **87,605,758** | 104,961,427 |
| எரிபொருள் நிரப்பு நிலைய செயற்படு இலாபம் (குறிப்பு 6.1) | **9,635,332** | 9,032,921 |
| கொடுக்கல் வாங்கல் / மாற்றத்தின் மீது வெளிநாட்டு செலாவணி தேறிய இலாபம்/(நட்டம்) | **218,302,347** | 365,514,069 |
| | **315,543,437** | 479,508,417 |

### 6.1 எரிபொருள் நிரப்பு நிலைய செயற்படு இலாபம்

| | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| விற்பனைகள் | **1,157,123,732** | 1,082,502,038 |
| கழி: விற்பனைச் செலவு | **(1,127,104,956)** | (1,055,233,870) |
| தேறிய இலாபம் | **30,018,776** | 27,268,168 |
| கழி: ஆளணி மற்றும் நிர்வாகச் செலவுகள் | **(20,432,520)** | (18,249,647) |
| நானாவித வருமானங்கள் | **49,076** | 14,400 |
| **செயற்படு இலாபம்** | **9,635,332** | 9,032,921 |

### 7. நிர்வாக, தாபன மற்றும் விற்பனை செலவுகள்

| | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|
| பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் | **8,975,378** | 12,774,722 |
| பதவியணியினர் செலவு | **5,048,103,459** | 4,746,898,814 |
| வரையறுக்கப்பட்ட பங்களிப்புத்திட்டங்கள் செலவு | **550,555,879** | 510,364,297 |
| வரையறுக்கப்பட்ட சலுகைத் திட்டங்கள் செலவு | **404,904,824** | 387,961,242 |
| கணக்காய்வாளர்களின் கொடுப்பனவுகள் கணக்காய்வு | **750,000** | 940,753 |
| தேய்மானம் (குறிப்பு 11) | **2,652,137,717** | 2,647,777,594 |
| கடன்தீர்ப்பு (குறிப்பு 12) | **12,549,232** | 10,527,658 |
| கடனாளிகள் சேதம் புறமறிப்பு | **234,550,031** | 301,141,372 |
| பழுதுபார்த்தல் மற்றும் பேணுதல் செலவு | **300,529,211** | 249,295,713 |
| மின்சாரச் செலவுகள் | **806,184,476** | 703,910,068 |
| சட்டரீதியான கட்டணங்கள் | **1,878,746** | 1,733,796 |
| நன்கொடைகள் | **2,843,650** | 10,350 |
| **வேறு செலவுகள்** | **631,711,109** | 551,017,400 |
| | **10,655,673,712** | 10,124,353,778 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**8** தேறிய நிதிச் செலவுகள்/ (வருமானங்கள்)

| **8.1** நிதிச் செலவு | **2016**<br>**ரூ.** | **2015**<br>ரூ. |
|---|---|---|
| கடன் வட்டி | **705,413,235** | 717,067,024 |
| கடன் மாற்றத்தின் மீதான பரிமாற்ற (இலாபம்) / நட்டம் | **1,777,079,530** | 3,189,855,520 |
| கடன் கொடுத்தவர் மாற்றத்தின் மீதான பரிமாற்ற (இலாபம்) / நட்டம் | **190,254,485** | 335,382,400 |
| | **2,672,747,250** | 4,242,304,944 |

| **8.2** நிதியியல் வருமானங்கள் | | |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள்/மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் கடன்பத்திரம் மீதான வட்டி | **(1,217,685,359)** | (690,001,765) |
| ஐக்கிய அமெரிக்க டொலர் நிலையான வைப்புகள் மீது வட்டி | **(93,989,860)** | (81,334,059) |
| ரூபா நிலையான வைப்புகளின் மீது வட்டி | **(155,492,839)** | (17,778,812) |
| கடனீட்டு பத்திரங்களின் மீது வட்டி | **(407,729,990)** | (258,589,589) |
| பதவியணியினர் கடன் மீது வட்டி | **(35,984,006)** | (6,639,428) |
| பதவியணியினர் கடன் மாற்றலின் மீது பரிமாற்ற (இலாபம்) / நட்டம் | **16,667,354** | 7,828,046 |
| | **(1,894,214,701)** | (1,046,515,607) |
| **தேறிய நிதிச் செலவு / (வருமானங்கள்)** | **778,532,549** | 3,195,789,337 |

**9.** வருமானங்கள் வரிச் செலவினம்

திசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான முக்கிய வருமானங்கள் வரி செலவினத்தின் பிரதான அம்சங்கள் வருமாறு

| | **2016**<br>**ரூ.** | **2015**<br>ரூ. |
|---|---|---|
| **நடைமுறை வருமான வரி** | | |
| நடைமுறை வருமான வரி செலவினம் | **-** | - |
| வருமானங்கள் வரி | **-** | - |
| **பிற்போடப்பட்ட வருமான வரி** | | |
| பிற்போடப்பட்ட வருமான வரி சம்பந்தமான வருமான வரி/ (மாற்றங்கள்) (13) | **(11,149,716)** | 1,561,269,802 |
| **மொத்த வரி செலவு** | **(11,149,716)** | |

கம்பனியின் வரிக்கு முந்திய இலாபத்தின் மீதான வரி கம்பனியின் இலாபத்திற்கு அறவிட முடியுமான அடிப்படை வரி விகிதாசாரமான 28% ஐ ஈடுபடுத்துவதன் மூலம் தோற்றம் பெற முடியுமானகோட்பாட்டியலான அளவுகள் மாற்றமடையும். அது பின்வருமாறு அமைந்துள்ளது.

| | **2016**<br>**ரூ.** | **2015**<br>ரூ. |
|---|---|---|
| **வரிக்கு முந்திய இலாபம்** | **6,908,594,354** | 2,378,125,373 |
| 28மூஆன பயனுறு வரி விகிதாசாரத்திற்கு கணக்கிடப்பட்ட வரி (2015 - 28%) | **1,934,406,419** | 665,875,104 |
| வரிதொடர்பாக உட்படாத இலாபம | **(852,892,866)** | (570,900,914) |
| வரிக்காக குறைக்கப்படாத செலவினங்கள் | **1,124,526,972** | 969,688,407 |
| வரி தொடர்பாக உட்படாத வருமானங்கள் | **(295,331,082)** | (294,038,843) |
| வரி தொடர்பாக குறைக்க முடியுமான செலவினங்கள் | **(2,050,891,551)** | (332,461,035) |
| வரி நட்டங்கள் – பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்களாக அடையாளம் காணப்படாத | **129,032,393** | 1,123,107,083 |
| **மொத்த வரிச் செலவினம்** | **(11,149,716)** | 1,561,269,802 |

## 10. பங்கொன்றின் அடிப்படை வருமானம்

ஆண்டுக்குள் சாதாரண பங்குரிமையாளர்களிடத்தில் வழங்கப்பட முடியுமான தேறிய இலாபம் வருடத்துக்குள் வெளியிடப்பட்டுள்ள நிறைவைத்த சராசரிசாதாரண பங்குகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் பங்கொன்றின் அடிப்படை உழைப்பு கணக்கிடப்படுகிறது. வருடத்தில் மற்றும் முன்னைய வருடத்தில் காணப்பட்ட நிறைவைத்த சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் மிகையூதியம் வெளியீடு போன்ற வளங்களில் ஒத்திருக்கின்ற மாற்றம் இல்லாது நடைமுறை சாதாரணப்பங்குகள் எண்ணிக்கை மாற்றம்பெறும் சந்தர்ப்பங்களில் சீராக்கம் செய்யப்படும்.

பின்வருவனவற்றினால் பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம் கணக்கிடுவதற்கு பயன்படுத்திய வருமானம் மற்றும் பங்குகளின் தரவுகள் காட்டப்பட்டுள்ளது.

| | 2016 | 2015 |
|---|---|---|
| பங்குரிமையாளர்களுக்கு வழங்க முடியுமான தேறிய இலாபம் - ரூபா | **6,919,744,070** | 816,855,571 |
| வழங்கப்பட்டுள்ள நிறைவைத்த சாதாரண பங்குகள் எண்ணிக்கை | **200,002** | 200,002 |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு - ரூபா | **34,598** | 4,084 |

## 11. ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

(i) காணிகள், மற்றும் கட்டிடங்களில் ரூபா. 940,412,498ஆன கட்டுநாயக்காவில் அமைந்துள்ள காணி (2015 ரூபா 940,412,498) 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(ii) இலங்கை அரசாங்கத்தினால் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்ட காணியில் இரண்டாம் சர்வதேச விமான நிலையம் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மத்தளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குத்தகை அடிப்படையில் கொடுப்பனவுகள் 2011 ஆம் ஆண்டிலிருந்து 50 ஆண்டுகள் சலுகை காலத்தின் பின்னர் செலுத்துவதற்குள்ளது.

(iii) கட்டுநாயக்க விமானநிலையத்தில் கட்டிடங்களின் ஒரு பகுதி அரசிற்கு சொந்தமான காணியில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

(iv) ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள முற்று முழுதாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் ரூபா. 16,061,032,446 (2015 - ரூபா 7,702,192,684) பெறுமதியினைக் கொண்ட சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 11. ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள்

| | காணி மற்றும் கட்டிடங்கள் | பொறி மற்றும் இயந்திரங்கள் | மோட்டார் வாகனங்கள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 2015 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆந் திகதியில் | | | |
| செலவு | 17,488,037,883 | 4,647,659,662 | 1,185,113,043 |
| ஒருமித்த தேய்மானம் | (3,018,075,862) | (3,283,715,548) | (760,432,801) |
| **இறுதி தேறிய புத்தகப் பெறுமதி** | 14,469,962,021 | 1,363,944,114 | 424,680,241 |
| **2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக** | | | |
| ஆரம்ப தேறிய புத்தகப் பெறுமதி | 14,469,962,021 | 1,363,944,114 | 424,680,241 |
| சேர்க்கப்பட்டவைகள் | 44,298,028 | 18,286,123 | 84,623,234 |
| சீராக்கம் - செலவு | - | - | - |
| - ஒருமித்த தேய்மானம் | (810) | 39,236 | 48,925 |
| தள்ளுபடி செய்தல் - செலவு | (12,988,248) | (261,016) | - |
| - ஒருமித்த தேய்மானம் | 7,227,012 | 260,967 | - |
| அகற்றல் - செலவு | - | (16,842,250) | (24,356,579) |
| - ஒருமித்த தேய்மானம | - | 16,842,249 | 24,356,562 |
| தேய்மானங்கள் (குறிப்பு 07) | (330,909,441) | (341,579,536) | (93,846,084) |
| பொதுமக்கள் காட்சியரங்கு இடித்து அகற்றுதல் | 511,099 | - | - |
| **இறுதி தேறிய புத்தகப் பெறுமதி** | 14,178,099,662 | 1,040,689,886 | 415,506,299 |
| **2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு** | | | |
| செலவு | 17,519,347,663 | 4,648,842,519 | 1,245,379,698 |
| ஒருமித்த தேய்மானம் | (3,341,248,001) | (3,608,152,633) | (829,873,398) |
| **இறுதி தேறிய புத்தகப் பெறுமதி** | 14,178,099,662 | 1,040,689,886 | 415,506,299 |
| **2016 சனவரி 01 ஆந் திகதியிற்கு** | | | |
| ஆரம்ப தேறிய புத்தக பெறுமதி | **14,178,099,662** | **1,040,689,886** | **415,506,299** |
| சேர்க்கப்பட்டவைகள் | **251,977,835** | **157,111,638** | **103,837,214** |
| அகற்றும் - செலவு | **-** | **(3,470,709)** | **(2,755,000)** |
| - ஒருமித்த தேய்மானம் | **-** | **3,461,207** | **2,754,998** |
| மாற்றங்கள் - செலவு | **-** | **-** | **-** |
| - ஒருமித்த தேய்மானம் | **-** | **-** | **-** |
| தேய்மானம் (குறிப்பு 07) | **(336,053,177)** | **(327,324,335)** | **(101,026,521)** |
| **இறுதி தேறிய புத்தகப் பெறுமதி** | **14,094,024,321** | **870,467,686** | **418,316,991** |
| **2016 திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு** | | | |
| செலவு | **17,771,325,499** | **4,802,483,448** | **1,346,461,912** |
| ஒருமித்த தேய்மானம் | **(3,677,301,178)** | **(3,932,015,761)** | **(928,144,921)** |
| **இறுதி தேறிய புத்தகப் பெறுமதி** | **14,094,024,321** | **870,467,686** | **418,316,991** |

| மரத்தளவாட பொருத்துதல்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூ. | தொடர்பாடல் மற்றும் வானோடல் கருவிகள் ரூ. | ஏனைய உபகரணங்கள் ரூ. | விமான நிலைய உட்கட்டமைப்பு வசதிகள் ரூ. | முற்போக்கு மூலதன வேலைகள் ரூ. | கூட்டுத்தொகை ரூ. |
|---:|---:|---:|---:|---:|---:|
| 1,036,774,165 | 7,716,874,346 | 968,502,506 | 27,567,996,289 | 1,469,351,137 | 62,080,309,030 |
| (850,212,110) | (5,051,642,330) | (747,436,518) | (6,151,988,922) | - | (19,863,504,091) |
| 186,562,054 | 2,665,232,016 | 221,065,988 | 21,416,007,367 | 1,469,351,137 | 42,216,804,939 |
| 186,562,054 | 2,665,232,016 | 221,065,988 | 21,416,007,367 | 1,469,351,137 | 42,216,804,939 |
| 32,769,232 | 49,576,620 | 30,617,745 | 29,208,591 | 476,700,101 | 766,079,674 |
| Nil | Nil | Nil | (878,000) | Nil | (878,000) |
| (5,799) | 2,863 | (278,013) | 47,280 | Nil | (146,317) |
| (6,799,289) | (7,162,778) | (3,312,043) | (5,165,556) | (148,202,449) | (183,891,378) |
| 6,649,825 | 6,284,887 | 3,310,429 | 4,317,326 | Nil | 28,050,446 |
| - | - | - | - | - | (41,198,829) |
| - | - | - | - | - | 41,198,811 |
| (47,625,883) | (618,057,663) | (43,682,645) | (1,172,076,342) | Nil | (2,647,777,594) |
| Nil | 64,405 | Nil | 843,507 | Nil | 1,419,011 |
